கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
25 விளம்பரம்

☎ 416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
416-282-4978
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

கனேடிய இலங்கை இந்திய சர்வதேச விளையாட்டு செய்திகள்
உடனுக்குடன் செய்திகளை பார்வையிட
தமிழ்வணக்கம்.கொம்
24/7 CNEWS
www.tamilvanakkam.com

நதி 25 | பாலம் 09 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 01, 2015

# 19ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் நிறைவேறியது

இலங்கை அரசியல் அமைப்பிற்கு கொண்டு வரப்பட்ட 19ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளை பெற்று 2015 ஏப்பிரல் 28இல் சட்டமூலமாகியது. இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் அமைப்பு 1978 செப்ரெம்பர் 7இல் அப்போது இருந்த தேசிய அரசுப் பேரவையால் அமலாக்கப் பட்டது ஆகும். இது 1948இல் சுதந்திரம் அடைந்த இலங்கையின் மூன்றாவது அரசியல் அமைப்பு. இவ் அரசியல் அமைப்பிற்கு இதுவரை 19 திருத்தங்கள் கொண்டுவந்து அமலாக்கப்பட்டுள்ளது.





2015 ஏப்பிரல் 28இல் 12 மணித்தியாலங்களுக்கு மேல் விவாதிக்கப்பட்ட 19ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் இரண்டாம் வாசிப்பு முதலில் 214 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இந்த 19ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் 59 பிரிவுகள் உள்ளன. இவை யாவும் நாடாளுமன்றத்தில் வாசிக்கப்பட்டு பின்னர் அதற்கு எதிர்கட்சிகள் சமர்ப்பித்த திருத்தங்கள் பல உள்ளடக்கப்பட்ட பின்னர் மூன்றாவது வாசிப்பு 211 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. 225 உறுப்பினர்களை கொண்ட நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற 150 மேலதிக வாக்குகளே தேவையான நிலையில், 211 மேலதிக வாக்குகளை பெற்று இவ் 19ஆவது திருத்தம் இலகுவாக சட்டமூலமாக நிறைவேற்றப்பட்டது. 14 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு இவ் 19ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு ஆதரவு அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த 19ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட முக்கிய விடயங்கள்:

- இலங்கை அதிபரின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளது.
- இலங்கை அதிபர் பதவிக்கு ஒருவர் இரண்டு முறை மட்டுமே போட்டியிடலாம் என மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது.
- இலங்கை அதிபரிற்கு நாடாளுமன்றத்தை கலைக்கும் உரிமையை நான்கு வருடமும் ஆறு மாதங்களின் பின்னரே பெறுகிறார். முன்னர் இலங்கை அதிபர் ஓர் ஆண்டில் நாடாளுமன்றத்தை கலைக்கும் உரிமையை பெற்றார்.
- அரசியல் அமைப்பு சபை புதிப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கை அதிபரின் தலையீடு இல்லாமல் சுயாதீன ஆணைக் குழுக்கள் அமைக்க வழிகோலப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள் அரசின் பிரேரிக்கப்பட்ட அரசியல் அமைப்பு சபையில் உறுப்பினர்களாக இருக்க முடியாது. ஆனால் எதிர்க் கட்சிகள் இதற்கு கொண்டு வந்த திருத்தம் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்த அரசியல் அமைப்பு சபையில் உறுப்பினர்களாக இருக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்பதாகும். இத்திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஏப்பிரல் மாத ஆரம்பத்தில் இலங்கை உச்ச நீதிமன்றம் அரசு இந்த 19ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு கொண்டுவர இருந்த 2 முக்கிய பிரிவுகளை சர்வசன வாக்கெடுப்பு நடத்தாமல் நாடாளுமன்றத்தில் அமல்படுத்த முடியாது என தீர்ப்பளித் திருந்தது. இதனால் அந்த 2 பிரிவுகளும் 19ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் இருந்து நீக்கப்பட்டிருந்தன. அவையாவன இலங்கை அதிபரை மந்திரி சபை தலைவர் பதவியில் இருந்து நீக்கி பிரதம மந்திரியை மந்திரி சபையின் தலைவராக்குவது. இலங்கை அதிபருக்கு மந்திரி சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை தீர்மானிக்கும் உரிமையை நீக்கி அதை பிரதம மந்திரிக்கு வழங்குதல்.

19ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின் கருத்து வெளியிட்ட இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன 19ஆவது திருத்தச்சட்டம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டமை நாட்டு மக்களுக்கு கிடைத்த வரலாற்று வெற்றி என்றார். 19ஆவது திருத்தச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சி தலைவர் நிமல்

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

MORTGAGE ALLIANCE
The Guardian
SAVE YOUR MONEY
SAVE YOUR HOME
- 2nd Mortgage - Purchase & Refinance
- Renewal & Switch - Home Equity Loan
- Residential & Commercial Mortgage
We're Hiring
Experienced
&
New Agents
Gini Annarasa
Cell: 416.830.3241
Franchise Of The Mortgage Alliance Network
*Independently Owned & Operated







## விளம்பரம் பத்திரிகையின் 25ஆவது ஆண்டை முன்னிட்டு நடத்தப்படும் போட்டிகளுக்கு பரிசில்கள் வழங்குபவர்கள்

| குறுநாவல் போட்டி | கவிதைப் போட்டி | கட்டுரைப் போட்டி | திரைக்கதைப் போட்டி |
|---|---|---|---|
| Niru நிரு<br>416.750.1976<br>1ஆம் பரிசு வழங்கும் $1000 | Thavam yogas Super Market<br>416.267.0408<br>1ஆம் பரிசு வழங்கும் $500 | Das Murugadas (Mortgage Broker)<br>416.543.6614<br>1ஆம் பரிசு வழங்கும் $500 | Raj Rasaratnam (Realtor)<br>416.726.8055<br>1ஆம் பரிசு வழங்கும் $500<br>HomeLife / GTA Realty Inc. Brokerge |
| HomeLife / GTA Realty Inc. Brokerge•<br>416.321.6969<br>5215 Finch Ave, E, #203, Toronto,ON<br>*Independently Owned & Operated<br>2ஆம் பரிசு வழங்கும் $500 | Seelan Aiyadurai (Real Estate Agent)<br>416.451.0271<br>2ஆம் பரிசு வழங்கும் $300<br>HomeLife / GTA Realty Inc. Brokerge | Ramanan.S (Realtor)<br>416.290.6000<br>2ஆம் பரிசு வழங்கும் $300<br>HomeLife / GTA Realty Inc. Brokerge | 416.399.6640<br>MS7 QUALITY PRE-OWNED AUTO SALES<br>2ஆம் பரிசு வழங்கும் $300 |
| Siva Panchalingam (Insurance Broker)<br>416.990.4908<br>3ஆம் பரிசு வழங்கும் $300 | Vijay Balan.s<br>A1 Ink Rainbow Inc<br>416.286.0333<br>3ஆம் பரிசு வழங்கும் $200 | Kathir Subramaniyam<br>Gnanams Studio<br>416.750.8118<br>3ஆம் பரிசு வழங்கும் $200 | N. Thayabharan<br>416.332.1743<br>3ஆம் பரிசு வழங்கும் $200 |

# அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் - ஜனநாயகத்திற்கான ஒரு பாதை!

இலங்கை அரசியல் வரலாற்றில், முக்கியமான தருணங்களில் நாட்டில் வாழும் பெரும்பான்மை, சிறுபான்மை இனங்கள் முரண்பாடுகளின்றி, ஒன்று சேர்ந்ததாகவோ, முடிவெடுத்ததாகவோ கூறுவது கடினம். ஆனால், அண்மைக்கால வரலாற்றில், இலங்கையில் ஓர் ஆட்சிமாற்றம் ஏற்பட வேண்டும் என்பதில் பெரும்பான்மை சிங்கள மக்களும் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களும் ஒன்று சேர்ந்து முடிவெடுத்தார்கள்.

அதேபோன்று அரசியலமைப்பின் 19வது திருத்தச் சட்டத்திற்கும், இவ்வாறானதொரு ஆதரவு கிடைத்துள்ளது. இக்கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும் ஏப்ரல் 28ம் திகதி மாலையில் இதற்கான வாக்கெடுப்பு நாடாளு மன்றில் நடைபெற்றது. இக்கட்டுரையை எழுதி முடித்ததும் இச்சட்டமூலம் நாடாளு மன்றில் 215 வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட செய்தி வெளியானது. புதிய அரசாங்கம் முன்வைத்த 100 நாள் வேலைத் திட்டத்தில் மிக முக்கியமானது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வது என்பதாகும். ஜனாதிபதிக்கு எல்லையற்ற அதிகாரத்தை வழங்கி, நாட்டில் ஜனநாயகத்திற்கு குழி தோண்டிய 18ஆம் திருத்தச் சட்டத்தை ஒழிப்பதற்காக, 19ஆவது திருத்தச் சட்டமூலம் வடிவமைக்கப்பட்டது.

**- விகிர்தன் -**

இதனை செய்வதற்கு புதிய ஜனாதிபதி பல்வேறு சிக்கல்களையும், எதிர்ப்புகளையும் சந்தித்தார். 19வது திருத்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டு, கடந்த மார்ச் 15ம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டது. இதனை அடுத்து அரசாங்கத்தின் தலைவர் ஜனாதிபதியா பிரதமரா என்ற குழப்பம் அரசியல்வாதிகள் மத்தியில் ஏற்பட்டது. இதனால் புதிய அரசாங்கத்தில் கூட்டு சேர்ந்துள்ள ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளும், எதிர்கட்சிகள் சிலவும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. ஏப்ரல் 19ம் திகதி இத்திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்தின் பின் வாக்கெடுப்பு நடைபெறும் என்று கூறப்பட்டது. எனினும், அதுவும் நடைபெறவில்லை. இறுதியாக கடந்த ஏப்ரல் 27ம் திகதி 19வது திருத்தம் நாடாளுமன்றில் சமர்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

எதிர்ப்புகள், சிக்கல்கள் காரணமாகவே குறிப்பிட்ட 100 நாட்களுக்குள் இதனை நிறைவேற்ற முடியாமல் போனது. அதாவது, நூறு நாள் திட்டம் நிறைவு பெறுவதற்கு முன்னதாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கும் புதிய அரசின் வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை. 1994ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலின் போதும் ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரகடனத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் வரையறையற்ற அதிகாரங்களை நீக்குவோம் என்று மக்களுக்கு வாக்குறுதி



வழங்கிய போதும், அவர்கள் எவருக்கும் அதைச் செய்ய முடியவில்லை. ஏனெனில், எல்லையற்ற அதிகாரங்கள் கைகளுக்கு வந்த பின்னர் அதனை கைவிட முடியாத மனநிலை அவர்களுக்கு ஏற்பட்டது. இந்நிலையில், புதிய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன வாக்குறுதியளித்தபடியே அதனை நிறைவேற்றவும் முற்பட்டார். இது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவராகவும் உள்ள முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வெளிப்படையாகவே புதிய ஜனாதிபதிக்கு புகழாரம் சூட்டியிருக்கின்றார். "முன்னைய ஜனாதிபதிகள் தங்களை மேலும் வலுப்படுத்திக் கொண்டார்களே தவிர அதிகாரத்தை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அதிகாரத்தை குறைத்துக் கொள்கின்றமை போற்றத்தக்க செயல். அவர் வரலாற்றில் முக்கியமானதொரு பதிவை ஏற்படுத்தி உள்ளார். இவ்வாறான தலைவர்கள் இலகுவில் உருவாக மாட்டார்கள்" இவ்வாறு அவர் கடந்த 27ம் திகதி நாடாளுமன்றில் உரையாற்றுகையில் அவர் தெரிவித்துள்ளார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பாராட்டியிருக்கின்றார்.

அவர் கடந்த 27ம் திகதி நாடாளுமன்றில் உரையாற்றிய போது தெரிவித்துள்ள கருத்துக்கள் இச்சட்டத் திருத்தம் தொடர்பில் சாதாரண தமிழ் மக்களுக்கு ஒரு தெளிவை ஏற்படுத்தியுள்ளது. "அரசமைப்பின் இந்த 19ஆவது திருத்தச் சட்டம் ஜனநாயகத்திற்கு வழிகோலும். நல்லாட்சியை உறுதிப்படுத்தும். இதன்மூலம் மக்களின் இறைமை பாதுகாக்கப்படும். 19ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் ஜனநாயகத்துக்குரிய பல அம்சங்கள் இருக்கின்றன. இவற்றை நாம் வரவேற்கின்றோம். ஒரு வருடத்துக்குப் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு உரிய அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தது. இது பாதகமான விடயமாகும். சட்டவாக்கத் துறைக்கும், மக்களின் ஆணைக்கும் அது பாதகமாகவே அமைந்தது.

எனினும், 19வது திருத்தத்தின் ஊடாக இது நீக்கப்பட்டுள்ளது. இதனால் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். அதேவேளை, கட்சி தாவும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதில் சிக்கல் நிலைமை இருந்து வந்தது. 19 ஊடாக இந்தச் சர்ச்சைக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது. அதாவது, கட்சி தாவும் உறுப்பினர்களுக்கு எதிராக சம்பந்தப்பட்ட கட்சி சுதந்திரமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியும் என நம்புகிறேன். இதில் தலையிடுவதற்கு இடம் இருக்காது. அதேவேளை, கடந்த காலங்களில் சட்டத்துறை சுயாதீனமாகச் செயற்பட வில்லை. அதன் நடவடிக்கைகளில் - நம்பகத்தன்மையில் சந்தேகம் இருக்கின்றது. இதில் நிறைவேற்றுத் துறையின் தலையீடு இருந்தது. நியமனங்கள் சுதந்திரமாக இடம்பெறவில்லை. 19 ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாகும். அரசியல் தலையீடுகள் நீங்கும். பக்கச்சார்பு முறை நீங்கும். இவ்வாறு ஏற்பட்டால் மக்களின் இறைமை பாதுகாக்கப்படும். ஜனநாயகத்தை மீள ஸ்தாபிப்பதற்குரிய சூழல் உருவாகும். அத்துடன், இதில் ஜனநாயகத்துக்குரிய அம்சங்கள் பல இருக்கின்றன.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையிலுள்ள அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன் வந்தமையை நாம் மதிக்கின்றோம். இதன் மூலம் அவருக்கு நன்மை கிட்டா விட்டாலும் நாட்டு மக்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்பது உறுதி. 18இன் ஊடாக ஜனாதிபதியின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டது.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்




APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing


- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# அத்தனைக்கும் ஆசைப்படு



## சத்குரு வாசுதேவ்

உங்களுக்கு ஆசை இல்லை என்றால் இந்தக் கட்டுரையின் அடுத்த வரிக்குப் பார்வையை எடுத்துப் போகமுடியாது. அவ்வளவு ஏன் நிற்கமுடியாது. நடக்க முடியாது. சாப்பிடமுடியாது.

'ஆசையினால் சாப்பிடுகிறேன் என்று யார் சொன்னது? பசிக்காகத்தான் சாப்பிடுகிறேன்' என்று நீங்கள் விதண்டாவாதம் செய்யலாம். நல்ல பசியான நேரத்தில் உறவினர் வீட்டுக்குப் போயிருக்கிறீர்கள். இலை போட்டு ருசி மிக்க சாப்பாட்டைப் பரிமாறு கிறார்கள். நீங்கள் முதல் கவனத்தை வாயருகில் கொண்டு போகும்போது, உங்களை அசிங்கமாக என்னென்னவோ ஏசுகிறார்கள். அடுத்த கவளம் உள்ளே இறங்குமா?

பசி தீரவில்லை. ஆனால் சாப்பிடவும் முடியவில்லை. ஏன்?

சாப்பிடும் ஆசை போய்விட்டது.

ஆசையினால் செய்யாமல் அவசியத்துக்காக எதைச் செய்தாலும், அது முழுமையான சந்தோஷதைக் கொண்டுவராது. உங்கள் அடிப்படை இயல்பே மகிழ்ச்சியாக இருப்பதுதான். நீங்களாக வரவழைத்துக் கொண்ட துன்பங்களால் தான், அது காண-ாமல் போகிறது. சந்தோஷமாக இருக்க வேண்டுமானால், முதலில் நீங்கள் சுயநலத்தோடு இருக்க வேண்டும். சுயநலத்தில்கூடக் கஞ்சத்தனம் வேண்டாம். முழுச்சுயநலவாதியாக இருங்கள்.

ஒருமுறை, சங்கரன் பிள்ளையின் மகனுக்குக் கடுமையான காய்ச்சல். டாக்டர் வந்தார். 'இது தொற்று நோய்க்கிருமியால் வந்திருக்கும் காய்ச்சல். ஏற்கனவே, இதை எவ்வளவு பேருக்கு உங்கள் மகன் பரப்பிவிட்டானோ? இனி, உடம்பு சரியாகும்வரை பள்ளிக்குப் போக வேண்டாம்.' என்று எச்சரித்தார். சிகிச்சை சில நாட்களுக்குத் தொடர்ந்தது.

மகனுக்கு ஒருவழியாகக் காய்ச்சல் குறைந்து, குணமாகிவிட்டான்.
டாக்டர் பில்லை நீட்டினார். தொகையைப் பார்த்து சங்கரன் பிள்ளை சண்டைக்குப் போய் விட்டார்.

டாக்டர் விளக்கம் கொடுத்தார். 'ஒன்பது முறை, உங்கள் வீட்டுக்கே வந்து ஊசி போட்டிருக்கிறேன். அதுவும் விலை உயர்ந்த மருந்து'!
சங்கரன் பிள்ளை கொதித்தார்.

'விளையாடுகிறீர்களா? என் மகன் ஊரெல்லாம் காய்ச்லைப் பரப்பியதால் தானே உங்கள் பிஸினஸ் படு ஜோராகப் போய்க் கொண்டு இருக்கிறது. என்னிடம் எப்படிப் பணம் கேட்பீர்கள்? நியாயமாக நீங்கள் அல்லவா எனக்குப் பணம் தரவேண்டும்?

இப்படித்தான் எதுகிடைத்தாலும், அதனால் ஆதாயம் உண்டா, அதை வைத்துக் கொண்டு எப்படியாவது உலகத்துப் பணத்தையெல்லாம் சுருட்டித் தன் பாக்கெட்டில் போட்டுக் கொள்ளமுடியுமா? என்று பேராசை கொண்டு பலர் அலைகிறார்கள். அப்பேர்ப்பட்ட சுயநலத்தை நான் சொல்லவில்லை. நான் சொல்லும் சுயநலம் இன்னும் பெரிது.

இந்தச் சட்டை என்னுடையது. இந்த வீடு என்னுடையது என்ற குறுகிய சுயநலத்தை விடுங்கள். இந்த ஊர் என்னுடையது. இந்த நாடு என்னுடையது. இந்த உலகமே என்னுடையது என்று எல்லாவற்றையும் உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்.

நீங்கள் டெய்லராக இருங்கள். ஆட்டோ ஓட்டுபவராக இருங்கள். ஆபரேஷன் பண்ணும் டாக்டராக இருங்கள். காய்கறி விற்பவராக இருங்கள். கம்ப்யூட்டர் தயாரிப்பவராக இருங்கள்.

இந்த உலகமே உங்களுடையதென்று மனதார ஏற்றுக்கொண்டு விட்டால், அதில் உள்ளவர்கள் உங்களைச் சேர்ந்தவர்களாகி விடுவார்கள். அதன்பின், அவர்களுக்காக நீங்கள் எதைச் செய்தாலும் எப்படிச் செய்வீர்கள்? உங்களுக்கே செய்து கொள்வதாக நினைத்து மிகுந்த ஈடுபாட்டுடன், முழு அர்ப்பணிப்புடன் செய்வீர்கள் அல்லவா? அப்படி அன்போடு, ஆசையோடு செய்யும்போது அதன் தரம் எப்படி இருக்கும்? உச்சத்தில் இருக்கும். அப்புறம் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய பலனை நீங்களே வேண்டாம் என்று மறுத்தாலும் அது தானாக வந்து உங்கள் காலடியில் கொட்டும் உண்டா, இல்லையா?

எப்போதுமே நூறு சதவிகித ஈடுபாட்டுடன், சந்தோஷத்துடன் செயலாற்றுங்கள். பலன் தான் சந்தோஷம் என்று நினைக்காமல், செய்வதையே பிரியத்துடன் செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். முதல்முறை வெற்றி கிடைக்கவில்லையானால், உங்களுக்குப் பிரியமானதைச் செய்ய இன்னொரு வாய்ப்பு கிடைத்தாக நினைத்துக் கொள்ளுங்கள். மறுபடியும் முழு ஈடுபாட்டுடன் செயலாற்றுங் கள். ஒவ்வொரு முறையும் சந்தோஷம்தான் கிடைக்கும். வலி தெரியாது. வேதனை இருக்காது. யோசியுங்கள்...உங்கள் திறமை முழுவீச்சில் எப்போது வெளிப்படுகிறது? நீங்கள் சந்தோஷமாக இருக்கும்போதா? படபடப்பிலும், துக்கத்திலும் இருக்கும் போதா? ஆசையோடு, சந்தோஷமாக ஒரு வேலையைச் செய்யும்போது, வெற்றி கிடைக்காமல் போவதற்கு வாய்ப்பே இல்லை.

நீங்கள் மட்டும் சந்தோஷமாக இருந்தால் போதாது. நீங்கள் இருக்கும் இடத்தில் உங்களால் மற்றவர்களுக்கும் சந்தோஷம் இருக்க வேண்டும். சுற்றி இருப்பவர்கள் உங்களைச் சந்தோஷத்தோடு ஏற்க வேண்டும்.

காட்டில் ஒரு சிங்கம் கால்களை வீசி, வீசி கர்வத்தோடு நடந்தது. அந்தப் பக்கம் போய்க்கொண்டிந்த முயல் குட்டியைச் சட்டென்று பிடித்தது. 'ஏய், இந்தக்காட்டில் யார் ராஜா?' என்று கேட்டது. முயல் குட்டி பற்களெல்லாம் கிடுகிடுக்க, 'சந்தேக மென்ன? நீங்கள் தான்!' என்றது. சிங்கம் முயலை விட்டு விட்டு, அடுத்ததாக ஒரு நரியைத் தாவிப் பிடித்தது. அதே கேள்வியைக் கேட்டது. நரி நடுக்கத்துடன், 'தலைவா...உனக்கேன் இந்த சந்தேகம்? உன்னைத் தவிர, வேறு யார் இங்கே ராஜாவாக இருக்க முடியும்' என்றது. அப்புறம் வழியில் எதிர்ப்பட்ட மிருகங்கள் எல்லாம் பணிவாக மண்டியிட்டு சிங்கத்திடம், 'நீங்கள்தான் ராஜா' என்று அச்சத்தில் அலறின. சிங்கத்துக்குப் பெருமை பிடிபடவில்லை. இன்னும் கொஞ்சம் தூரம் போனது.

அங்கே ஒரு யானை சிங்கத்தைப் பொருட்படுத்தாமல் அதுபாட்டுக்கு மரத்தில் இருந்து இலைகளைப் பறித்துக்கொண்டு இருந்தது. சிங்கம் அதன் எதிரில் போய் நின்று, 'ஏய் முட்டாளே, யார் இந்தக் காட்டுக்கு ராஜா?' என்று கர்ஜித்தது. யானை திரும்பியது. தும்பிக்கையால் சிங்கத்தைச் சுருட்டித் தூக்கியது. ஓங்கித் தரையில் அடித்தது. சிங்கத்தின் முதுகெலும்பே முறிந்து போயிற்று. 'ஏம்பா, இப்ப நான் என்னப்பா கேட்டுப்புட்டேன்? வாய் வார்த்தையாகச் சொல்லப்படாதா'? என்று வலியில் முனகியபடி கேட்டது சிங்கம்.

'இனிமேல் இந்த விடயத்தில் உனக்குக் குழப்பமே வரக்கூடாது. பார்!' என்றது யானை.

சுற்றியிருப்பவர்கள் உங்களை மகிழ்ச்சி யுடன் ஏற்காவிட்டால், சிங்கத்திற்கு கிடைத்த அனுபவம்தான் உங்களுக்கும் கிடைக்கும். இப்படி வேறு யாராவது உங்களுக்குக் கற்பிப்பதற்கு முன் உங்கள் வாழ்க்கையை நீங்களே இனிதாக அமைத்துக் கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள். எதைச் செய்தாலும் முழு ஆசையோடு செய்யுங்கள்.

உங்களுக்குச் சந்தோசமானது என்று நம்பி நீங்கள் ஏற்றுக் கொண்டது எதுவாக இருந்தாலும், அதோடு சில சவால்கள் இலசவ இணைப்பாகச் சேர்ந்துவரும். அது கடின உழைப்பாக இருக்கலாம், மும்முர மான போட்டியாக இருக்கலாம். எதிர்பாராத தடைகளாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அதையெல்லாம் ஆசையோடு சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள்.

உங்கள் வளர்ச்சியில் உண்மையிலேயே விருப்பம் இருந்தால் பிரச்சினைகளை ஆசையோடு வரவேற்கப் பழகுங்கள். தோற்றுக் களைத்தவர்கள் பொதுவாகச் சொல்லும் காரணம் என்ன தெரியுமா? 'எனக்கு மட்டும் நேரமே சரியில்லை. நான் மாவு விற்கப் போனால் காற்று அடிக்கிறது. உப்பு விற்கப்போனால் மழை பெய்கிறது'. நீங்கள் கேட்டாலும், கேட்காவிட்டாலும் எப்படியும் இந்த உலகம் உங்கள் மீது பிரச்சினைகளை வீசி வேடிக்கை பார்க்கத்தான் போகிறது. அப்புறம் ஏன் அவற்றை எதிர்கொள்ளத் தயங்குகிறீர்கள்?

கடினமான சந்தர்ப்பங்கள் உண்மையில் சாபங்கள் அல்ல. உங்களுக்கு அருளப்படும் வரங்கள்!
ஒரு சினிமாவுக்குப் போகிறீர்கள். அடுத்தடுத்த காட்சிகள் நீங்கள்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org






MORTGAGE ALLIANCE

RIGHT BROKER = RIGHT MORTGAGE

Lic # 10530

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE

#1 Brokerage in Toronto

Brokerage Office : 112–895 Don Mills Rd, Toronto, ON, M3C 1W3 Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல்
பிரச்சினையா ?

- நல்ல ரேட்ல மோட்கேஜ் செய்ய வேணும்?
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேணும் ?
- ரீபைனான்ஸ் செய்ய வேணும்?
- 2வது, 3வது மோட்கேஜ் எடுக்க வேணும்?



- பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் செய்ய வேணும்?
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க மாத்த வேணும்?
- வீடு வாடகைக்கு விட அல்லது எடுக்க வேணும்?
- வீடு வாங்க வேணும்/ வீடு விற்க வேணும் ?

## மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,



## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

BEST RATE GUARANTEED

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

MORTGAGE IN ANY SITUATION



எமது முகவரி

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent/ Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240

And..

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

**For All Your Real Estate Services**

# நிறைவு பெறாத நூறுநாள் வேலைத் திட்டமும் இனிவரும் நாட்களில் விரைவுபடுத்தப்பட வேண்டியவையும்!

## தாயகமடல்

நிறைவு பெறாத நூறு நாள் வேலைத் திட்டமும், இனிவரும் நாட்களில் விரைவு படுத்தப்பட வேண்டியவையும்!

கடந்த ஜனவரி 8ஆம் திகதி இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் மூலமாக ஒரு ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. சுமார் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளால் மஹிந்த ராஜபக்ஸவை தோற்கடித்து, மைத்திரிபால சிறிசேன புதிய ஜனாதிபதி ஆனார். இலங்கையின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் அனைவரும் மைத்திரிக்கு வாக்களித்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கணிசமான வாக்குகளும், சிறுபான்மை மக்களின் பெரும்பான்மை வாக்குகளும் மைத்திரிக்கே வழங்கப்பட்டன. மைத்திரி தலைமையில் புதிய அரசாங்கம் வெற்றி பெற்றதும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார்.

வெற்றிபெற்ற புதிய அரசாங்கம் நல்லாட்சி அரசு என்றழைக்கப்படுகின்றது. ஆனாலும், மைத்திரி தலைமையிலான இந்த அரசாங்கம் ஒரு பலவீனமான அரசாங்கமாக இருப்பதை அதன் நகர்வுகளிலிருந்து கணிப்பிட முடிகின்றது. அதன் காரணமாகவே, அவர்களால் முன்வைப்பட்ட 100 நாள் வேலைத் திட்டத்தை முழுமையாக செயற்படுத்த முடியாமல் போனது.

குறிப்பிடப்பட்ட 100 நாள் வேலைத் திட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த சிலவற்றை பார்ப்போம்.

-தேசிய ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற் காக அனைத்துக் கட்சிகளையும் பொது அமைப்புக்களையும் இணைத்து தேசிய ஆலோசனை சபை அமைக்கப்படும்.

-நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் நடவடிக்கைகள் மற்றும் 18ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.



-சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

-பொதுமக்களுக்கான நிவாரணம் மற்றும் வாழ்க்கைச் செலவை குறைத்தல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு முறை அறிமுகப்படுத்தப்படும்.

-சம்பள அதிகரிப்பு, நேரடி மறைமுக வரிகள் நீக்கப்படும்.

-ஊழல்கள் மோசடிகள் தொடர்பாக விசாரிக்க ஆணைக்குழுக்கள் அமைக்கப்படும்.

-தகவல்களை தெரிந்து கொள்ளும் சட்டமூலம் அறிமுகப்படுத்தப்படும்.

ஏப்ரல் 23இல் நாடாளுமன்றம் கலைக்கப் படும். இதனையடுத்து காபந்து அரசாங்கத் தின் கீழ் தேர்தல்கள் நடத்தப்படும். இதனடிப்படையில் அதிக ஆசனங்களை பெற்ற கட்சியின் சார்பில் பிரதமர் நியமிக்கப்படுவார். அதற்கு அடுத்த படியாக அதிக வாக்குகளை பெற்றவர் பிரதி பிர- தமராக நியமிக்கப்படுவார். இந்த பதவிகளின் கீழ், 2 வருடங்களுக்கு தேசிய அரசாங்கம் ஒன்று நிறுவப்படும். இதன் கீழ் தேசிய கொள்கைகள் மற்றும் சவால்கள் வெற்றிகொள்ளப்பட்டு புதிய அரசியல் கலாசாரம் நிறுவப்படும்.

இவை குறிப்பிடத்தக்க வாக்குறுதிகள்.

இந்த 100 நாள் வேலைத்திட்டத்தில் இடம்பெற்ற முக்கியமான விடயங்களாக இவற்றை பொதுவாக நோக்கினாலும், இவற்றில் பல விடயங்கள் குறித்த நாட்களுக்குள் நிறைவேற்றப்படவில்லை. 25 ஆக மட்டுப்படுத்தப்படும் என்று கூறிய அமைச்சரவையில் முதலில் 27 பேர் அங்கம் வகித்தனர். பின்னர் அமைச்சரவை 28ஆக உயர்ந்து இறுதியில் 39ஆக ஆனது. பலவீனமான அரசாங்கமாக இருப்பதே இதற்கு காரணம். தேசிய ஆலோசனை சபை நிறுவப்படும் என்று புதிய அரசாங்கம் அளித்த வாக்குறுதியும் நிறைவேற்றப்பட வில்லை. ஆனால், தேசிய நிறைவேற்று சபை ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் சிவில் சமூகங்கள் அதில் உள்ளடக்கப்படவில்லை.

இந்த 100 நாள் வேலைத்திட்டத்தில் தமிழ் மக்களுக்காக சிறப்பு வேலைத் திட்டங்கள் எவையும் குறிப்பிடப்படவில்லை. இருந்தாலும், இந்த 100 நாட்களில் தமிழ் மக்களுக்கு மக்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் போன்றவை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தேர்தலையொட்டி, இறுதிப் போரின் முடிவில் மீட்கப்பட்ட பொதுமக்களின் நகைகள் சிலவற்றை நேரில் வந்து கையளித்தார். மிகுதி நகைகள் எங்கிருக்கின் றன என்பது யாருக்கும் தெரியாது. புதிய அரசாங்கம் இந்த நூறு நாள் வேலைத் திட்டத்தில் அதனை சம்பந்தப்பட்ட மக்களிடம் கைளித்திருக்க லாம். அதுகூட நடைபெறவில்லை. இவ்வாறான நிலையில், வாக்குறுதி யளிக்கப்பட்ட நூறு நாள் வேலைத் திட்டத்தில் 40 வீதமானவையே நிறைவு பெற்றுள்ளது.

இப்போது 19வது திருத்திச்சட்டம் நாடாளு மன்றில் அறுதிப் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேறியுள்ளது. இதனையடுத்து நாடாளுமன்றம் கலைக்கப்படலாம். பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்கிற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு நடைபெற்று ஜனாதிபதி தலைமையில் நாட்டில் ஒரு ஸ்திரமான அரசாங்கம் ஏற்பட்டால் அதன் பின்னர் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் சரியான முறையிலும், விரைவாகவும் நடைமுறைக்கு வரவேண்டும்.

**- ஆதித்தன் -**

ஏதாவது நன்மைகள் கிடைத்தனவா என்று பார்த்தால், வட மாகாணசபையின் இயக்கத்திற்கு இடையூறாகவிருந்த ஆளுநரும், செயலாளரும் உடனடியாக மாற்றப்பட்டனர். இதனால் வட மகாணசபை ஓரளவிற்கு இயங்கக் கூடியதாகவுள்ளது. வட மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் படிப்படியாக வழங்கப்பட்டு வருவதாக வடக்கு முதலமைச்சரும் அண்மையில் ஆசிரியர்கள் சிலருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவத்தில் வைத்து குறிப்பிட்டுள்ளார். யாழ்.மாவட்டத்தில் படையினர் வசமிருந்த காணிகளில் 1000 ஏக்கர்கள் விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப் பட்டமையும் சுமார் 500 ஏக்கருக்கு மேல் மக்களிடம் கைளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடக்கூடிய விடயம்.

இறுதிப் போர் நடைபெற்ற வடக்கில் மக்களின் பாதிப்பு என்பது சிறப்பு கவனத்திற்குரியது. ஆனால், அதற்கான சிறப்பு வேலைத் திட்டங்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு, அவர்களின் வாழ்வாதாரத்திற்கான திட்டம், காணாமல் போனவர்களின் பிரச்சினை, படையினர் வசமுள்ள மேலும் பல காணிகளை விடுவித்து மக்களை அப்பகுதிகளில் மீள் குடியமர்த்தல், மீள் குடியமர்த்தப் பட்டுள்ள

குறிப்பாக, தமிழ் மக்களுக்கு அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டியவற்றை விரை வாக செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும். தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினை தொடர்பிலும் சரியான முன்னெடுப்பை ஆரம்பித்து குறிப்பிட்டதொரு காலவரையறைக்குள் தீர்வு காணப்பட வேண்டும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வட பகுதிக்கு மூன்று நாட்கள் விஜயம் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் மட்டுமின்றி வன்னியில் போர் நடைபெற்ற பகுதிகளுக்கும் அவர் விஜயம் செய்திருந்தார். பல்வேறு பாதிப்புக்களை பார்வையிட்ட அவர் அதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் உறுதி யளித்துள்ளார். அவர் உறுதி யளித்துள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வரவேற்பு தெரிவித்துள்ள னர். இவையெல்லாம் இனி வரும் நாட்களில் நடைமுறைக்கு வரவேண்டும். பொதுத் தேர்தல் முடிவடைந்ததும் நல்லாட்சி அரசாங்கம் என்று கூறப்படும் இந்த அரசிடம் மக்களின் எதிர்பார்ப்புக்கள் மேலும் அதிகரிக்கும். முறையானதொரு பொறிமுறையின் கீழ் உறுதியளிக்கப்பட்ட அனைத்து விடயங்களும் தொய்வின்றி முன்னெடுக்கப் படுதல் வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் போகுமானால் மக்கள் பலத்த ஏமாற்றத்திற்குள்ளாவதோடு, ஆட்சி மாற்றத்திற்கான அர்த்தமும் இல்லாமலாகி விடும்.

## 19ஆவது...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

சிறீபால டி சில்வா எந்த ஒரு அதிபராலும் மேற்கொள்ளப்படாத காரியத்தை இந்த அதிபர் செய்துள்ளார். எந்தவித அதிகார மோகமும் இன்றி அதிபர் மைத்திரிபால சிறிசேன செயற்பட்டுள்ளார் என்றார்.

19ஆவது திருத்தச் சட்டமூலத்துடன் திருப்தி அடைய முடியாது. சிறந்த ஒரு தேர்தல் முறை அவசியமாகிறது. இதனால் 19ஆவது திருத்தச்சட்டம் நிறைவேறியது போல 20ஆவது திருத்தச்சட்டத்தையும் அமல்படுத்த வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார்.

விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளி யாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர் கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமை யாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# கனேடிய வரவு நல்வரவாகுக!

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

**தொடர் - 438**

குளிரினதும், பனியினதும் தாக்கம் மெல்ல மெல்ல மறைய புல்லுகள் வெட்டும் மெசின்களினதும், Barbecue grill களினதும் தூசுகள் தட்டப்பட்டு வெளியே கொண்டு வரும் காலம் தெரிகின்றது. இருந்த போதிலும், குளிரும் விட்டுப் போவது போலத் தெரியவில்லை. எனினும் இளவேனிற் காலத்திற்குரிய ஆதன வியாபாரம் ஏற்கனவே சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது என்பதனை ஒன்றிற்கு மேற்பட்ட வீடு வாங்குபவர்களின் போட்டிகளினூடாக (Multiple offers) அறியக் கூடியதாக இருக்கிறது. பொதுவாக இளவேனிற் காலங்களில் அதிக வீடுகள் விற்பனைக்காக சந்தைக்கு வருவது வழமை. ஆனால் இம்முறை வழமைக்கு மாறாக குறைவான ஆதனங்களே சந்தைக்கு, விற்பனைக்காக வந்துள்ளன. இதனால் விற்கப்படும் வீடுகள் அதிக விலையிலே விற்பதனைக் காணலாம். முதல் தடவை ஆதனம் வாங்குபவர்களும் தமது பெற்றோர்களின் உதவியை நாட வேண்டிய நிர்ப்பந்தத்திலே உள்ளார்கள் என்பதனை ஆய்வறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. கனேடிய புதிய வரவாளர்களிற்கான கொள்கை 260,000 இலிருந்து 280,000 புதியவர்களை நாட்டிற்குள் வரவழைக்கின்றது. இதனால் தொடர்ச்சியாக புதிய இடங்கள் உருவாக்கியே தீரவேண்டிய நிர்பந்தம் உள்ளது. இவர்களின் வியாபாரத்தை முன்னிட்டு நிதி நிறுவனங்கள் புதிது புதிதான, இலகுவாக புதியவர்களிற்கான அடமானக்கடன் வழங்கும் முறைகள், புதிதாக எக்கவுண்ட் (Account) தொடங்குபவர்களிற்கான சலுகைகளை கொடுத்து வருகின்றன. இவ்வாறானவர்கள் அந்த நிதி நிறுவனத்தின் வாழ்நாள் வாடிக்கையாளர்களாக இருப்பர். என்பது அவர்களின் தீர்மானம். அதில் உண்மை இல்லாமலும் இல்லை என்பதனை யாவரும் அறிவோம்.

புதிய வரவாளர்களிற்குரிய அடமானக்கடன் கொடுக்கும் முறையில் பல நெகிழ்வுகள் இருப்பதனை அறிந்து கொள்வது நல்லது. முக்கியமாகவும், அனேகமாகவும் புதியவர்கள், அவர்களின் குடும்பத்தவர்கள், நண்பர்கள் குடியிருக்கும் பகுதிக்கு அண்மையிலேயே தமது முதல் இருப்பிடத்தை தெரிவு செய்கின்றார்கள். குறிப்பிட்ட சில காலங்களின் பின்னால் பிள்ளைகளின் கல்வி, தொழில் நிமித்தம் இருக்கும் இடத்தை மாற்ற வேண்டிய அதிகமான நிலைப்பாடு, சந்தர்ப்பங்கள் உருவாகின்றன.

இதனால் முதல் குடிமனை வாங்கும் போது நிதானமாக முடிவு எடுக்கப்படல் வேண்டும் என அறிவுறுத்தப்படு கின்றார்கள். புதிதாக வருபவர்களில் 50% ஆனவர்கள், போதியளவு முதலீடு இல்லை என்றும், தமக்கு தொடர்ச்சியான வருமானம் கிடைக்குமா என்றும் கருதி



தமது குடியிருப்பை வாங்குவதை 27% ஆனவர்கள் பின் தள்ளிப் போடுவதாக முன்னணி நிதி நிறுவனம் தெரிவித்துள்ளது. பொதுவாக நாம் வாங்குவதில் வீடு, மனையே அதி கூடிய முதலீடு உள்ளதாகக் கொள்ளலாம். இதற்கு தகுந்த ஆலோசனை என்றும் மிக முக்கியம்.

முக்கியமாக முதல் வீடு/மனை, வாங்கும்போது கீழே தரப்படும் விடயங்களை கவனத்தில் கொள்வது நல்லதாகலாம்.

**1. சேமிப்பு**

பல முறைகளில் செலவுகளை கட்டுப்படுத்தி பணத்தை சேமிக்கலாம். தரமான, தகுதியான நிதி திட்ட ஆலோசகருடன் தொடர்பு கொள்ளலாம்.

2. எமது தகுதி எம்மால் எவ்வளவு பெறுமதியான வீடு வாங்கினால்இலவுவாக கொடுப்பனவுகளை செய்யலாம் என தகுந்த நிதி ஆலோசகருடன் தொடர்பு கொண்டு அறிதல் நல்லது.

***3. Pre Approved Mortgage***

பொதுவாக முதல் தடவை வீடு வாங்குபவர்கள் எந்தப் பெறுமதியான அடமானக்கடன் பெறுவது என்பதனை அடமானக்கடன் முகவரின் உதவியுடன் கணக்கிடுதல் நல்லது. அத்துடன் வேறு எந்தவிதமான அனுகூலங்கள் அடமானக்கடன் பெறும்போது கிடைக்கும் அல்லது நடைமுறையில் இருக்கின்றது என்றதனை அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

***4. Build your team***

முக்கியமானதும் பெரிய தொகையிலுமான முதலீடு என்பதால் தகுந்த, சிறந்த, உதவி மனப்பான்மை கொண்ட, ஆபத்தான நேரத்தில் கைகொடுக்கக்கூடிய ஒரு

**தொடர்ச்சி 10ஆம் பக்கம்**


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

**"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"**



***Raja Mahendran,*** P.Eng.
*Broker / Owner*

***5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969***

* INDEPENDENTLY OWNED AND OPERATED

**INDUSTRIAL BUSINESS FOR SALE**

Over 40,000sq.ft building.
Lad Size 2.4 Acre. Out side storage. Plenty of parking. Owner lease back possible.
***MEADOWVALE / LAWRENCE/ SCARBOROUGH Asking Price $3.4 Million.***

**LAND FOR SALE**

1 Acre land , No Building. You Build your own business place. (No Houses)
***MEADOWVALE / LAWRENCE/ SCARBOROUGH***
***Asking price @799,000***

**NEW CONDO. FOR SALE**

***LESLIE & HWY 401***
Starting From $280K
2 Years Rental Gurantee

• 80 Rooms Branded Hotel Property, about 2.5 Hrs from GTA Room Revenue approx. 1.35 Millions and asking only 3.79 M Great Deal !

• 60 Rooms Branded Great looking property in 1.5 Hrs North west of GTA.Room Revenue approx. 1.0 Million and asking just 3.45 M.

• Great plaza in Scarborough with good mix of Tenants. Gross Income about 35K and Net Income about 24 K per month. Good Cap Rate !

**HOUSE FOR SALE**

***SCAR.GOLF CLUB & LAWRENCE***
Detached house for sale. 3 Level back split. 2 Washroom. Close to TTC accessibility.
***Asking Price $499,900***

**CONDO FOR SALE**

***SHEPPARD & HWY 401***
3 Bedroom condo. for sale. 2 Washroom. Completely. renovated. New Appliances.
***Asking Price $260,000***

**CONDO. FOR SALE**

***LAKESHORE & PARK (ETOBICOKE)***
1 Bedroom /2 levels condo for slae. 2 Washrooms. 4 Years new condo building. 5 Appliances.
***Asking price $349,900***

**CONDO. FOR SALE**

***MCCOWAN & FINCH***
2 Bedroom condo. for sale. Swimming pool, 24hrs. ...., underground parking.
***Asking price $279,900***

# நில அதிர்வுகளால் அதிரும் கட்மண்டு - நேபாளம்

நேபாளத்தில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்தை தொட்டுள்ளது. நேபாளத்தில் 2015 ஏப்பிரல் 27 சனிக்கிழமை காலை 11.56 மணிக்கு கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்ரர் அளவுகோலில் 7.9 ஆக பதிவாகியிருந்த நிலநடுக்கத்தால் தலைநகர் கட்மண்டுவில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. பழமைவாய்ந்த கட்டிடங்கள், குடியிருப்புகள் இடிந்து தரைமட்டம் ஆகியுள்ளன. இடிபாடுகளில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை 5 ஆயிரத்தை தொட்டுள்ளது. நிலநடுக்கத்தை அடுத்து 'Aftershock' எனப்படும் நில அதிர்வுகள் அடிக்கடி ஏற்பட்டு வருவதால் மக்கள் பீதியில் உள்ளனர். ஞாயிற்றுக்கிழமை இரவு மக்கள் தெருக்களில் படுத்து தூங்கினர்.



இதேவேளை இவ் அனர்த்தித்தினால் 11 ஆயிரத்திற்கும் அதிகமானோர் காயம் அடைந்திருப்பதால் மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. மருந்தகங்களில் மக்கள் கூட்டம் அலை மோதுகிறது. தண்ணீருக்காக மக்கள் டிரக்குகள் முன்பு நீண்ட வரிசைகளில் நிற்கின்றனர். அவ்வப்போது ஏற்படும் நில அதிர்வுகளால் மீட்பு பணி பாதிக்கப்பட்டு வருகிறது. இன்னும் இடிபாடுகளில் ஏராளமானோர் சிக்கியிருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது. இதனால் பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. மீட்பு பணியில் உதவ இந்தியா, இலங்கை, அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகளும் முன் வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நேபாளத்தில் மட்டுமன்றி, வட இந்தியாவில் பீகார், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம், சீக்கிம் ஆகிய மாநிலங்களிலும் நிலநடுக்கத்தின் தாக்கம் காரணமாக வீடுகள் இடிந்து விழுந்ததில் 55-க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் இமயமலையையும் விட்டுவைக்கவில்லை. அதிர்வின் காரணமாக பனிச்சரிவு ஏற்பட்டு எவரெஸ்ட் மலையேற்றத்தில் ஈடுபட்டிருந்த வீரர்களின் முகாம்களை மூழ்கடித்ததில், 22 பேர் இறந்துள்ளனர். காணாமல் போனவர்களைத் தேடும் பணி நடந்து வருகிறது.

நேபாளத்தில் ஏற்பட்ட கடும் நிலநடுக்கம் கேரள மாநிலம் கொச்சியிலும் லேசான நில அதிர்வாக உணரப்பட்டது. அம்மாநிலத்தில் கல்லூர், கடவந்தரா உள்ளிட்ட பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டது. இது 3 ரிக்ரர் அளவிற்கும் குறைவாகவே பதிவாகியுள்ளது.

## நிலநடுக்கத்தால் தரைமட்டமான புகழ்பெற்ற 'தர்பார் ஸ்கொயர்'



நேபாளத்தில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தால் பதானில் உள்ள பழமை வாய்ந்த தர்பார் ஸ்கொயர் கட்டிடம் இடிந்து தரை மட்டமானது. நிலநடுக்கத்தில் பல புராதன கட்டிடங்கள் இடிந்து விழுந்து தரைமட்டமாயின. யுனெஸ்கோ அங்கீகாரம் பெற்ற கட்டிடங்களில் ஒன்று இந்த "தர்பார் ஸ்கொயர்". பல ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டிடம் என்பதால், கடுமையான நிலநடுக்கத்தினை தாங்க இயலாமல் தரைமட்டமாகி உள்ளது. சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரசித்தி பெற்ற இந்த தர்பார் ஸ்கொயரானது அதனுடைய கட்டிட அமைப்பிற்கும், அழகுக்கும் பெயர் போனது.

## நிலநடுக்கத்தில் தரைமட்டமான கட்மண்டுவின் 19ஆம் நூற்றாண்டு 'தரகரா' ரவர்!

நேபாளத்தை உலுக்கிய பயங்கர நிலநடுக்கத்தால் தலைநகர் கட்மண்டுவில் இருந்த 19-ஆம் நூற்றாண்டு பழமையான 9 மாடிக் கட்டிடமான 'தரகரா' ரவர் முழுமையாக இடிந்து விழுந்தது. அக்கட்டிடத்தில் இருந்த 180 பேர் மண்ணோடு மண்ணாக புதையுண்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.



சனிக்கிழமை விடுமுறை நாள் என்பதால் சுற்றுலாத் தலமான அக்கட்டிடத்தினை ரசிக்க வந்த சுற்றுலாப் பயணிகள் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பீஸ்மன் ரவர் என்றும் அழைக்கப்படும் இக்கட்டிடம் 61.88 மீற்றர் உயரமானது. இக்கட்டிடத்தின் 8வது மாடியின் பல்கணியிலிருந்து கட்மண்டுவை ரசிக்க முடியும். 10 வருடமாக சுற்றுலாப்பயணிகளுக்காக இக்கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கட்மண்டுவின் சுந்தரா என்னும் மையப்பகுதியில் 1832 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இக்கட்டிடம் அதன் கட்டிடக் கலைக்காக யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்டதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## புகழ்பெற்ற பசுபதிநாத் ஆலயத்திற்கு எந்தவித சேதாரமும் இல்லை

நேபாளத்தில் 2015 ஏப்பிரல் 27 சனிக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கமானது 1934 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தை நினைவுகூருவதாக இருக்கிறது. 80 ஆண்டுகளுக்குப் பின்னர் பயங்கர நிலநடுக்கத்தால் நேபாளம் பேரழிவை சந்தித்துள்ளது. 1934 ஆம் ஆண்டு ஏற்பட்ட



'பீகார் - நேபாள' நிலநடுக்கம்தான் இதுவரையில் மிகவும் மோசமான நிலநடுக்கம். இது கிழக்கு நேபாளத்தில் மையம் கொண்டு புருனியா முதல் சம்பரான் வரை சேதத்தை ஏற்படுத்தியது. இந்த நிலநடுக்கத்தில் கிட்டதட்ட 12,000 பேர் நேபாளத்திலும், 7,253 பேர் பீகாரிலும் உயிரிழந்தனர். 8.0 என்று ரிக்ரர் அளவில் பதிவான அந்த நிலநடுக்கத்தில் முங்கேர், கட்மண்டு மற்றும் முசாபர்பூர் ஆகிய இடங்கள் பெரும்பாலும் அழிந்தன. 1934ஆம் ஆண்டு ஜனவரி 15-ந் திகதி ஏற்பட்ட இந்த நிலநடுக்கமானது பீகாரையும், நேபாளத்தையும் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. இந்த நிலநடுக்கத்தில் முழுவதுமாக சேதமடைந்த தரகரா ரவரும் மீண்டும் புனரமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. கிறிஸ்துக்குப்பின் 400 ஆம் ஆண்டு கட்டப்பட்ட புகழ்பெற்ற பசுபதிநாத் ஆலயம் 1934ஆம் ஆண்டைப் போலவே தற்போதும் எந்தவித சேதாரமும் இல்லாமல் தப்பியிருக்கிறது. மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவிலும் இந்த நிலநடுக்கத்தால் பல்வேறு கட்டிடங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. பதான், கட்மண்டு, பகத்பூர் ஆகிய இடங்களில் பெரும் சேதம் ஏற்பட்டது. இதனிடையே 1988 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மற்றொரு நிலநடுக்கத்தால் பெரிய பாதிப்புகள் ஏற்படவில்லை. இந்த நிலநடுக்கம் ரிக்ரரில் 6 அலகுகளாக பதிவாகி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி 24ஆம் பக்கம்





3+1 Bedrooms, 2 W Room
Very Convenient Location Close To Scarborough Town Centre




4 Bedrooms, 3 W Room
Close To Durham College, University Of Ontario Institute Of Technology




2+2 Bedrooms, 3 W Room
Hardwood Floors, Granite Counter Tops,




3+1 Bedrooms, 2 W Room
Separate Entrance To A Basement Apartment




4+2 Bedrooms, 3 W Room
A Partially Fin. Basement W/ 2 Entrances & 2 Bedrooms




3+1 Bedrooms, 4 W Room
Finished Basement With Bedroom Wash Room Kitchen, & Li Room




4 Bedrooms, 3 W Room
Bus Stop Literally At The Door Step.Close To Every Thing




3 Bedrooms, 3 W Room
Oak Staircase. Pot Lights In Greatroom




4 Bedrooms, 3 W Room
Over $50,000 Spent On Upgrades




4 Bedrooms, 3 W Room
Granite Counter Tops In Kitchen Washrooms. Ss Appliances.




3 Bedrooms, 3 W Room
Walk Out To Fully Fenced Backyard W/Fruit Trees




4 Bedrooms, 4 W Room
Very Large Fully Fenced Backyard Close To School




4 Bedrooms, 3 W Room
Chef's Kit W/Porcelain Flrs, Backsplash, Granite Counters & Under Cab Lighting




4 Bedrooms, 3 W Room
Very Bright Home With Lots Of Windows





4+2 Bedrooms, 5 W Room
Stunning Home W/Bsmnt Apartment, New Roof




4 Bedrooms, 3 W Room
Absolutely Spotless & Beautiful Detached Home. Open Concept Kitchen

KZG 647-200-5833



Sell your home **faster** and more **money**

RE/MAX Platinum Club Award

**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**
Sales Representative
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# அத்தனைக்கும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

எதிர்பார்த்தபடியே வந்து கொண்டிருந்தால் அந்த சினிமாவை ரசிப்பீர்களா, அல்லது போர் என்று எழுந்து வெளியே வருவீர்களா? எதிர் பாராத திருப்பங்கள்தானே ஒரு வாழ்க்கையைச் சுவையாக அமைத்துத் தரமுடியும்.

கடவுளிடம் ஒரு விவசாயி கடுமையாகச் சண்டைக்குப் போனான்.' 'உனக்குப் பயிர்களைப் பற்றி என்ன தெரியும்? நீ நினைத்தபோது மழையை அனுப்புகிறாய். தப்பான சமயத்தில் காற்றை வீசுகிறாய். உன்னால் பெரிய தொந்தரவாக இருக்கிறது. பேசாமல், அந்த வேலைகளை விவசாயி ஒருத்தனிடம் ஒப்படைத்துவிடேன்!' கடவுள் உடனே, 'அப்படியா? சரி, இனிமேல் வெளிச்சம், மழை, காற்று எல்லாம் உன் கட்டுப்பாட்டிலேயே இருக்கட்டும்' என்று வரம் அருளி விட்டுப் போய்விட்டார்.

விவசாயிக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. அடுத்த பருவம் வந்தது.
'மழையே, பெய்' என்றான். பெய்தது. நிறுத்தச் சொன்னபோது, நின்றது. ஈரமான நிலத்தை உழுதான். தேவையான வேகத்தில் காற்றை வீசச் செய்து, விதை தூவினான். மழை, வெயில், காற்று எல்லாமே அவன் சொன்ன பேச்சைக் கேட்டான். பயிர் பச்சைப் பசேலென்று வளர்ந்தது. வயல் வெளியைப் பார்க்கவே படு ரம்மியமாக இருந்தது. அறுவடைக் காலம் வந்தது. விவசாயி ஒரு கதிரை அறுத்தான். திறந்து பார்த்தான். அதிர்ந்தான்! உள்ளே தானியத்தைக் காணவில்லை. அடுத்து, அதற்கடுத்தது என்று ஒவ்வொரு கதிராக வெட்டி எடுத்துத் திறந்து பார்த்தால் ஒன்றிலும் தானியம் இல்லை.

'ஏ கடவுளே!' என்று கோபத்தோடு கூப்பிட்டான். 'மழை, வெயில், காற்று எல்லாவற்றையுமே மிகச் சரியான விகிதங்களில்தானே பயன் படுத்தினேன்! ஆனாலும், பயிர் பாழாகிவிட்டதே, ஏன்?' கடவுள் புன்னகைத்தார்: 'என் கட்டுப்பாட்டில் இருந்தபோது காற்று வேகமாக வீசும். அப்போது கதிர்களெல்லாம், அம்மாவை இறுக்கிக் கொள்ளும் குழந்தைகளைப்போல பூமிக்குள் தங்கள் வேர்களை மிக ஆழமாக அனுப்பிப் பிடித்துக் கொள்ளும். மழை குறைந்தால், தண்ணீரைத் தேடி வேர்களை நாலாபக்கமும் அனுப்பும். போராட்டம் இருந்தால்தான் தாவரங்களே தங்களைப் பாதுகாத்துக் கொண்டு, வலுவாக வளரும். எல்லாமே வசதியாக அமைத்துக் கொடுத்ததில் உன் பயிர்களுக்கு சோம்பேறித்தனம் வந்து விட்டது. தளதள வென்று வளர்ந்ததே தவிர, ஆரோக்கியமான தானியங்களைக் கொடுக்க அவற்றுக்குத் தெரியவில்லை.'
'வேண்டாமடா. உன் மழையும், காற்றும், நீயே வைத்துக் கொள்' என்று கடவுளிடமே அவற்றைத் திருப்பித் தந்துவிட்டான் விவசாயி. ஆம்... வாழ்க்கை எல்லா விதத்திலும் சௌகரியமாகவே அமைந்து விட்டால், அதைப் போன்றதொரு வெறுமை வேறெதுவும் இல்லை.

பிரச்சினைகள் உங்களைப் போட்டு அழுத்தும் போதுதான். உங்கள் திறமை அதிகரிக்கும். சவால்தான் மனிதனை முழுமையாக்கும். இருட்டு என்று ஒரு பிரச்சினை இருந்தால்தானே மின் விளக்கைக்கண்டு பிடித்தீர்கள்? பயணம் என்பது பிரச்சினையாக இருந்ததால் தானே வாகனங்களுக்கு உருக்கொடுத்தீர்கள்? தொலைவில் இருப்பவர்களைத் தொடர்பு கொள்வது பிரச்சினையாக இருந்ததால் தானே, தொலைபேசியை உருவாக்கினீர்கள்?

பிரச்சினைகளே இல்லாமல் இருந்துவிட்டால் உங்கள் மூளையின் திறனை எவ்வாறு அறிவீர்கள்?

சங்கரன் பிள்ளை புதியவீடு கட்ட விரும்பினார். கட்டட நிபுணர் விதவிதமான பிளான்களைக் காட்டினார்.

'இல்லை, இது இல்லை. நான் நினைத்திருப்பது வேறு மாதிரி' என்று ஒவ்வொரு பிளானையும் நிராகரித்தார் சங்கரன்பிள்ளை. நிபுணர் களைத்துப் போனார். 'உங்கள் மனதில் என்னதான் இருக்கிறது?' என்று கேட்டார்.

ஒரு புராதன பித்தளைக் குமிழை சங்கரன்பிள்ளை தன் பாக்கெட்டிலிருந்து எடுத்துக் காட்டினார். 'இதைக் கதவில் பொருத்தக்கூடிய மாதிரி ஒரு வீட்டுப் பிளானை இதுவரை நீங்கள் எனக்குக் காட்டவில்லையே?' என்றார். பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தைரியமில்லை. ஆனால் வாழ்க்கை மட்டும் வசதியாக அமைய வேண்டும் என்று நினைப்பவர்கள்தான் சங்கரன்பிள்ளையைப் போல் கதவுக் குமிழை வைத்துக்கொண்டு அரண்மனைக்கு ஆசைப்படுகிறார்கள். எதற்காக எல்லாம் திட்டமிட்டபடியே முடிய வேண்டும்? ஏதாவது ஒன்று பிய்த்துக் கொண்டுதான் போகட்டுமே... என்னதான் ஆகிவிடும்? அதை எதிர்கொள்வோம். சமாளிப்போம். அதுதானே உண்மையான வெற்றி?

முடிவு சாதகமாக இருக்குமா, இருக்காதா என்று வீண் யோசனைகள் செய்து கொண்டிருக்காதீர்கள். முழுமையான ஈடுபாட்டுடன் செயலாற்றுங்கள். இனிமேல் சவால்கள் எதிர்வந்தால் அவற்றுக்குச் சாபம் கொடுக்காதீர்கள். அத்தனையையும் ஆசையோடு எதிர்கொள்ளுங்கள்.

# அரசமைப்பின்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

எத்தனை தடவைகளும் போட்டியிடலாம் என்றும் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதனால் எதேச்சாதிகாரம் உருவாகியது. இதனை ஜனவரி 8ஆம் திகதி மக்கள் தோற்கடித்து தெளிவான ஆணையை வழங்கினர். எனவே, மக்களின் ஆணை மதிக்கப்பட வேண்டும்" இவ்வாறு சம்பந்தன் கூறியிருக்கின்றார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக மட்டுமல்லாமல் முதிர்ந்த தமிழ் அரசியல்வாதியாகவும் ஒரு சட்டத்தரணியாகவும் உள்ள சம்பந்தனின் இந்த கருத்துக்களை யாரும் நிராகரிக்க முடியாது.

19வது திருத்தச் சட்டத்தை செயற்படுத்துவது சிங்களவர்களுக்கு மரண சாசனம் எழுதுவதற்கு ஒப்பானது என அந்த அமைப்பைச் சேர்ந்த மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவிக்கின்றார். இந்த அரசியல் யாப்பு திருத்தத்தின் படி சுயாதீன ஆணைக்குழு விடயத்தில் தீர்மானம் எடுக்கும் குழுவில் 10 பேரில் ஐவர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அதில் சிறுபான்மை மக்களுக்கு அதிக இடம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், இவ்விடயமானது பெரும்பான்மை சிங்கள மக்களின் அடிப்படை உரிமை மீறும் செயல் என்றும், எனவே இது சிங்களவர்களுக்கு எதிரான இந்த யாப்புத் திருத்தம் எனவும் அவர் கூறுகின்றார்.

"கடந்த ஆட்சியிலே நீதிமன்றம் மற்றும் காவல்துறைகளில் தலையீடு, ஊடக அடக்கு



முறை ஆகிய சர்வாதிகார அடிப்படைகள் 18ம் திருத்தத்தின் மூலம் சட்டமாக்கப்பட்டன. ஆகவேதான் அவை சட்டப் புத்தகத்தில் இருந்து அகற்றப்படும் முகமாக இப்போது 19ம் திருத்தம் வருகிறது. நல்லாட்சி, நீதிமன்ற சுதந்திரம், ஊடக சுதந்திரம், பொலிஸ் சுதந்திரம் ஆகிய பல விடயங்கள் புதிய ஆட்சியின் மூலம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதுபோன்ற விடயங்கள் நிரந்தரமாக வேண்டும் என்றால், அவை சட்டமாக்கப்பட வேண்டும்" என்று மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். நாட்டில், தமிழ் மக்களுக்கு தனியான பிரச்சினைகள் உள்ளன. அவை தீர்க்கப்பட வேண்டும். அவை தீர்க்கப்படாவிடில் அதற்காக எதிர்ப்பு களையும், பல்வேறு போராட்டங்களையும் நடத்த வேண்டியது கட்டாயமானதே. எனினும் இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் நன்மை தரக்கூடிய வழிமுறை யொன்றை வரவேற்பது, ஆதரிப்பது என்பது ஒட்டுமொத்த மனித உரிமைகளுக்கானதே.

இணக்க அரசியல், எதிர்ப்பரசியல் என்பன வற்றிற்கு அப்பால், சரியானதை சரி என்றும் தவறானதை தவறு என்றும் சுட்டிக் காட்டுகின்ற நாகரிகத்தை சம்பந்தன் இதில் வெளிப்படுத்தியிருக்கின்றார் என்றே கருதலாம். எனினும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் இந்த, 19வது திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை ஏன் எனத் தெரியவில்லை.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போதும் தமிழ் மக்களுக்கு உருப்படியாக புதிய அரசாங்கம் எதனையும் செய்யவில்லை என்று அவர்கள் குறிப்பிடுகின்றமை சரியானதே. அதற்காக சர்வாதிகாரத்தை முடிவு கட்டவும், ஜனநாயகத்திற்கான ஒரு பாதையாகவும் வந்துள்ள இச்சட்டமூலத்தை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை. சிங்கள பௌத்த கடும்போக்காளர்களும் இச்சட்டத் திருத்தத்தை எதிர்க்கின்றனர். இந்த திருத்த சட்டமூலம் சிங்களவர்களுக்கு எதிரானது என தேசிய அமைப்புகள் ஒன்றியம் என்ற கடும்போக்கு வாதிகளின் அமைப்பு தெரிவித்துள்ளது.

# கனேடிய...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

அணியை (Team) வைத்துக்கொண்டால் முதல் மனை, வீடு மட்டுமல்ல எதிர்கால, ஆதன முதலீட்டிற்கும் உறுதுணையாக இருக்கும் இந்த அணியில் ஆதன முகவர், அடமானக்கடன் முகவர், சட்டவல்லுனர், நிதி ஆலோசகர், கணக்காளரைக் கொள்ளலாம்.

ஆதனம் வாங்குவதுடன் இந்த அணியின் சேவை முடிவதில்லை. இவர்களின் தேவைகளும், உதவிகளும் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். தரமான, தகுதியானவர்களை தெரிவு செய்வதன் மூலம் எதிர்காலம் பிரகாசமாகலாம். தகுந்தவர்களை காலம் எடுத்து தெரிவு செய்யலாம். ஆனால் தெரிவு செய்தபின்பு அவர்களை அடிக்கடி மாற்றுவது புத்திசாலித்தனமாகாது.

### இன்றைய சில தகவல்கள்

- 57% ஆதனம் வாங்கியவர்கள் நீண்டகால (Closed Mortgage) அடமானக் கடனைப் பெற்றுக் கொள்கிறார்கள்.
- 30% ஆனவர்கள் மாறும் அடமானக் கடனைப் (Variable Mortgage) பெறுகின்றார்கள்.
- 44% ஆனவர்கள் அடுத்த வருடம் அடமானக்கடன் அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறார்கள்.
- 42% ஆனவர்கள் அடுத்த வருடம் வரை அடமான வட்டிவீதம் மாறாது என எதிர்பார்கின்றார்கள்.
- 9% ஆனவர்கள் அடுத்த வருட வட்டிவீதம் இப்பொழுது உள்ளதை விட குறைவாகலாம் என எதிர்பார்கின்றார்கள்.
- 63% ஆனவர்கள் முதல் தடவை ஆதனம் வாங்குபவர்கள். இவர்கள் 20%இற்கு குறைவான ஆரம்ப முதலீடு (Down payment) செய்கின்றார்கள்.


**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

# Shan Thayaparan

Sale Representative

Always Working for You!!!




**Dir: 416-567-7675**

**Bus: 416-321-2228**

**Email: info@remaxshan.com**

# REMAXSHAN.COM

RE/MAX Vision Realty inc. Brokerage

Not intend to solicit properties currently listed or Buyers under contract.

# MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP



# FREE

## Math Review

## G10 & G11

*"A strong math knowledge for an individual will determine their bright future."*

An opportunity to improve your marks by a different technique of teaching (more than 27yrs. Experience.)

**Starts:**

First Batch on **May 23rd** (if your math Ave. lower than 65%)


General Review on June 6th .

**Need to be registered no later than May 17th to entre the free math review.**

**INFO: 416-666-5515**

# MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP



# G8-400

The Most Intelligent & Engineering Math Program

Prepared from **Gr-8**

Target: Bring the students math level to be the top in Ontario

It's beyond **IB, Enrich, Tops** and other very common **gifted programs**.

Very limited students only

This program is based on the experience of teaching math for more than 27 years.

We want to create intelligent math students.

Starts May 2nd 2015

8ம் வகுப்பிலிருந்து ஆரம்பிக்கும் பிரமாண்ட கணித பாடத்திட்டம்

அனைவருக்கும் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

**INFO: 416-666-5515**

# வீடுகள் வாங்க விற்க..............

**FOR ONLY HOME BUYERS FREE TICKETS TO SRILANKA OR CUBA FOR MORE DETAIL CALL ME!**

**HONEST AND TRUST**



People Who Are Selling & Buying House From Me, MY LISTING COMMISION IS FREE!!!!!!!!!



This Offer Valied Until 30th June 2015 Only

## My listing Commision For Sellers $3500 + HST

நாளை என்பது கனவு. இன்று என்பது நிஜம்!!!!!.

நீங்களும் முதலீட்டாளர்கள் ஆகி மிகவும் குறுகிய காலத்தில் மிக அதிக லாபத்தை அடைய விரும்புகிறீர்களா? அழையுங்கள். என்னை.

இலவச அதி சிறந்த ஆலோசனைகளுடனும் சகல ஏற்பாடுகளையும் மிகவும் நுண்ணியமாகவும், துல்லியமாகவும் ஒழுங்குகள் செய்து தரப்படும்.



## Lourdson Antonipillai

Sales Representative

**Dir: 416.738.8824**

E-mail - lourdson29@hotmail.com

**HomeLife / Future Realty Inc., Brokerage***

205 - 7 Eastvale Dr. Markham. ON L3S 4N8

Bus:905.201.9977

Fax: 905.201.9229

* Independently Owned & Operated

# SMART KID'S SUMMER CAMP HUNT FOR 2015

* We cover 50% of the school year's curriculum during these two months
* We focus on the student's weak area will ensure to strengthen it.
* We build very strong communication & reading skills
* We use very excellent work books designed according to the Ontario school curriculum



## Activities Include:

• Math • Writing •Reading • Chess Club
• Grammer • French • Art Club • World History
• Communication Skill

**$2.25 Per Hour**

Starting July 2nd to August 27th

Time 9:00am to 4:30pm (Mon. to Fri.)

**10% Off Discount Early Registration (Before May 15, 2015)**

(Cost $2.25 / hour additional child in same family $2.00 per hour)

Early Drop Off & Late Pick Up Possible When Necessary

**Contact: 416.738.8824**

**Location: 3001 Markham Rd, # 21, Scarborough, ON**

# ஒன்ராறியோ பழமைவாதக் கட்சியின் தலைவர்

ஒன்ராறியோ மாகாண பழமைவாதக் கட்சியின் தலைவரை தெரிவு செய்வதற்கான தேர்தல் 2015 மே 03 மற்றும் 2015 மே 07ஆம் திகதிகளில் நடைபெறுகிறது. இத்தேர்தல் முடிவுகள் பழமைவாதக் கட்சியின் தலைமை மகாநாட்டில் 2015 மே 09இல் அறிவிக்கப்படும். இந்த பழமைவாதக் கட்சியின் தலைமை மகாநாடு Toronto Congress Centreஇல் நடைபெறுகிறது. இத்தேர்தலில் பழமைவாதக் கட்சியின் அங்கத்தவர்களாக 2015 பெப்ரவரி 28இற்கு முன்னர் இருந்தவர்களும் அவர்களது அங்கத்துவ உரிமையை தற்போது நல்ல நிலையில் வைத்திருப்பவர்களும் வாக்களிக்கலாம்.

2009ஆம் ஆண்டு பழமைவாதக் கட்சித் தலைவர் தேர்தலின் போது 43,981 உறுப்பினர்களை கொண்டிருந்த ஒன்ராறியோ பழமைவாதக் கட்சி தற்போது 80,000 இக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கொண்டுள்ளது. இத்தலைவர் போட்டியில் இருவர் போட்டியிடுகின்றனர்.

Patrick Brown: ரொறொன்ரோவில் 1978 மே 26இல் பிறந்த பற்றிக் பிறவுண் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் பயின்றவர். அவர் வின்சர் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் தனது பட்டப் படிப்பை முடித்துக்கொண்டு Magna International நிறுவனத்தில் தொழில் புரிந்தவர். பற்றிக், தனது 22ஆவது வயதில் Barrie நகர சபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார். பின்னர் 2006 ஆம் ஆண்டு கடந்த பொதுத் தேர்தலில் Barrie இல் பழமைவாதக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அன்றில் இருந்து பற்றிக் நாடாளுமன்றத்தில் ஒரு பழமைவாதக் கட்சி உறுப்பினராக இருந்து வருகிறார்.





Christine Elliott: Oshawa இல் 1955 ஏப்பிரல் 13இல் பிறந்த கிறிஸ்ரீன் எலியற், வெஸ்ரேன் ஒன்ராறியோ பல்கலைக்கழக கலைமானி பட்டதாரியாவார். பின்னர் வெஸ்ரேன் சட்டக் கல்லூரியில் சட்டத் துறையில் தனது பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு சொந்தமாக சட்டத் துறையில் தொழில் புரிந்து வருகிறார். இவர் பழமைவாதக் கட்சியின் காலம்சென்ற முன்னாள் நிதி அமைச்சர் ஜிம் ஃபிளாரிற்றியின் மனைவியாவார். இவர் 2006 மார்ச்சில் இருந்து Whitby-Oshawa தொகுதியின் ஒன்ராறியோ நாடாளுமன்ற பழமைவாதக் கட்சி உறுப்பினராக இருக்கிறார். இவருக்கு மூன்று ஆண்பிள்ளைகள் இருக்கிறனர்.

ஆரம்பத்தில் முன்னணி வேட்பாளராக இருந்த கிறிஸ்ரின் எலியற்றை தற்போது பற்றிக் பிறவுண் முந்திவிட்டதாக தேர்தல் கணிப்பீடுகள் கூறுகின்றன. இறுதியாக வந்த தேர்தல் கணிப்பீடுகள் பற்றிக் பிறவுணுக்கு 54% ஆதரவும், கிறிஸ்ரின் எலியற்றிற்கு 46% ஆதரவும் உள்ளதாக கூறுகின்றன.

பற்றிக் பிறவுணை பற்றி எழுதும் குளொபல் அன்ட் மெயில் நாளிதழ் பற்றிக், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் நெடுநாளைய நண்பர் என்கிறது. 2006இல் நாடாளு மன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து பற்றிக் தனதும் பழமைவாதக் கட்சியினதும் தொடர்புகளை தெற்கு ஆசிய குறிப்பாக இந்திய-கனேடிய சமூகங்களுடன் நெருக்கமாக வைத்திருக்கிறார். அவர் இந்திய-கனேடிய நாடாளுமன்ற நட்புக் குழுவின் இரண்டு தலைவர்களுள் ஒருவராக இருக்கிறார். பற்றிக் 15 தடவை இந்தியாவிற்கு பயணத்தை மேற்கொண்டுள்ளார். அவர் நரேந்திர மோடி குஜராத்தில் முதலமைச்சராக இருக்கும் போதே அவருடன் தொடர்புகளை வைத்துள்ளார். 1.2 மில்லியன் இந்திய-கனேடியர்களை கொண்ட கனடாவில் 300,000 குஜராத்தை சேர்ந்தவர்கள் இருக்கிறனர். இவர்களிடையே நரேந்திர மோடியால் தம்பி என அழைக்கப்படும் பற்றிக் மிகவும் செல்வாக்குடையவராக இருக்கிறார் என குளோப் அன்ட் மெயில் தெரிவித்துள்ளது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி கனடா வந்தபோது அவருடன் பற்றிக் பிறவுண் சுற்றுப் பயணம் மேற்கொண்டதுடன், நரேந்திர மோடி பற்றிக் பிறவுணின் ஆதரவு கூட்டத்திலும் பங்கேற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பற்றிக் பிறவுண் இலங்கைத் தமிழர்களுக்கும் புதியவர் அல்ல. அவர் தமிழ் மக்கள் கனேடிய நாடாளுமன்றத்திற்கு முன்னால் நடத்திய கவன ஈர்ப்பு போராட்டங்களின்

**தொடர்ச்சி 19ஆம் பக்கம்**



# அன்புடைமை - 17

அன்பான வாசகர்களே! கடந்த இதழில் நாங்கள் அன்புடைமையுடன் தொடர்புடைய சிரிப்புப் பற்றி உரையாடியிருந்தோம். இந்த இதழிலும் நாங்கள் இதுபற்றி உரையாடிக கொள்வோம். சிரிப்பு என்பது மிகவும் சிறந்த மருந்தாக உள்ளது. வயிறு, இருதயம் ஆகிய இரண்டு உறுப்புக்களையும் இறுக்கமடையச் செய்யும் நல்ல பயிற்சியைச் சிரிப்பு நமக்குக் கொடுக்கின்றது. நகைச்சுவையாக நண்பர்களுடன் பேசியும், நகைச்சுவை மிக்க நிகழ்ச்சிகளைப் பார்த்தும் நிறைய நேரத்தைச் சிரித்து மகிழ்வோடு வாழுதல் நல்ல பலனைக் கொடுக்கும். நாள் தோறும் மனதைப் பாதிக்கும் அல்லது துயரம் தரும் செய்திகள் வானொலி, தொலைக்காட்சி மற்றும் ஊடகங்களில் அறிவிக்கப்படுவதுண்டு. இவற்றை விபரமாக வாசித்து அல்லது பார்த்து மனதைக் குழப்பிக் கொள்ளாது இருக்க வேண்டும். நம்மையே பார்த்து சிரித்துக் கொள்வதும் அன்புடைமை கொண்டு இருப்பதற்கு உரிய வழிமுறையாகும். போதிய ஓய்வை எடுத்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். நேரம் கிடைக்கும் பொழுது சிரிப்புப் பயிற்சியைச் செய்து வர வேண்டும். இணையத் தளங்களிலும், சஞ்சிகைகளிலும் நிறைய நகைச்சுவைகள் பதிவாகி உள்ளன. இவற்றை நாளாந்தம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நகைச்சுவைக் கலைஞர்கள் தமது திறமையால் மற்றவர்களைச் சிரிக்க வைத்துக் கொள்கின்றார்கள்.

இவ்வாறான நிகழ்ச்சிகள் நமக்குப் பொழுது போக்கான ஒரு நிகழ்ச்சி என்று மட்டும் எடுத்துக் கொள்ளாது நமது ஆரோக்கியத்திற்கு வேண்டிய ஒரு நிகழ்ச்சியாக எடுத்துக் கொள்ள வேண்டும். நமது சமூகத்தில் நகைச்சுவைக் கலைஞர்களை ஊக்கப்படுத்தி நிறைய நகைச்சுவை நிகழ்ச்சிகளை மேடைகளிலும், ஊடகங்களிலும் பார்த்து மகிழ்ந்து சிரித்து வாழ வேண்டியது மிகவும் முக்கியமானது என்பதையும் இந்தத் தொடர்கட்டுரையில் பதிவு செய்து கொள்கின்றேன். சினிமாப் படங்களிலும் வன்முறைகளைக் குறைத்து அதிக நகைச்சுவைக் காட்சிகளைச் சேர்த்துக் கொண்டார்களானால் பார்ப்பவர்களுக்கு நன்மை ஏற்படும். நாங்கள் நகைச்சுவைக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் போதாது என்றே நாம் கூறவேண்டியுள்ளது. நாமும் சிரித்து வாழ்வதோடு நம்மைச் சுற்றி உள்ளவர்களையும் சிரித்து வாழச் செய்ய வேண்டிய பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். சிரிப்பு பற்றி ஆரம்ப காலத்தில் இருந்து ஆய்வு செய்து வரும் வில்லியம் பிரை என்பவர் ஒரு நிமிடம் வாய்விட்டுச் சிரிப்பதால் இதயத்திற்கு ஏற்படும் பயிற்சி ஏனைய உடற்பயிற்சிகளைப் பத்து நிமிடம் செய்யும் பொழுதுதான் கிடைக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். சிரிப்பதன் மூலம் கலோரியும் எரிக்கப்படுகின்றது என ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வண்டர்பில்ற் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் மசிஜ் புச்சோஸ்கி நடத்திய சிரிப்புப் பற்றிய ஆய்வில் 10 நிமிடங்கள் தொடக்கம் 15 நிமிடங்கள் வரையிலான நேரத்தில் சிரிப்பு 50 கலோரிகளை எரித்ததை அவதானித்ததாகக் கூறியுள்ளார். 23 பேரின் இரத்த அழுத்தத்தை சிரிப்புப் பயிற்சிக்கு முன்பும்




பின்பும் அளவீடு செய்யப்பட்ட பொழுது எல்லோரின் இரத்த அழுத்தமும் சிரிப்புப் பயிற்சிக்குப் பின்பு குறைந்திருந்ததாக முதியோர் நிலையத்தைப் பராமரித்து வரும் மருத்துவத் தாதி ஒருவரின் கருத்தை அண்மையில் இணையத்தளம் ஒன்றில் வாசித்தேன்.

இந்தச் சிரிப்புப் பயிற்சியின் பொழுது, சுவாசப் பயிற்சியும், சிரிப்புப் பயிற்சியும் சேர்ந்த முழுமையான பயிற்சியாக இருந்ததாம். இந்த ஆய்வில் இரண்டு அல்லது மூன்று சிரிப்புப் பயிற்சிகளிற்கிடையே ஒரு சுவாசப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த ஆய்வு ஒன்லைன் சிரிப்புப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒன்லைன் சிரிப்புப் பல்கலைக் கழகத்தை உருவாக்கியவர் செபஸ்தியன் ஜென்றி என்பவரும் சிரிப்பு சிகிச்சையாளர் பயிற்சி பெற்றவர். இவர் தனது 4வது வயதில் இருந்து கட்டிலுக்குக் கீழே படுத்துறங்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டாராம். இவர் ஆங்கிலம், ஜேர்மன், இஸ்பானிஸ், பிரெஞ்சு ஆகிய நான்கு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். சிரிப்பு யோகாவின் வளர்ச்சியில் இவரது பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. சிரிப்பின் முக்கியத்துவம் பற்றி ஏப்ரகாம் லிங்கன் கூறியதைக் கவனிப்போம். ‘இரவும் பகலும் நான் சந்திக்கும் பயமூட்டும் அழுத்தங்களைப் பார்க்கும் பொழுது நான் சிரிக்காவிட்டால் நான் இறக்க வேண்டி வரும். நான் எடுத்துக் கொள்ளுமளவுக்கு நீங்களும் சிரிப்பு என்ற மருந்தை எடுத்துக் கொள்ளுங்கள்’ என்று புகழ் பெற்ற அமெரிக்கத் தலைவர் ஆப்பிரகாம் லிங்கன் கூறியிருந்தார். ‘சிரிப்பு இல்லாத நாள் வீணானது’ என்று புகழ் பெற்ற நகைச்சுவைக் கலைஞர் சார்லி சப்ளின் கூறியுள்ளார். ‘சிரிப்பு என்பது ஒரு திடீர் விடுமுறை’ என்று மில்ரன் பேர்லி அவர்கள் கூறியுள்ளார். ‘ஒரு அறைக்குள் சிரிப்பின் வலிமையைக் கொண்டு வரக்கூடியவர்கள்’ ஆசீர்வாதம் பெற்றவர்கள் என்று பென்ற் சேர்வ் கூறியுள்ளார். ‘சிரிப்பு என்பது மனித முகத்தில் இருந்து குளிர்காலத்தை நீக்கும் சூரியன்’ என்று கூறியுள்ளார். ‘இதய




ஈடுபாட்டோடு ஏற்படும் சிரிப்பு வெளியில் செல்லாது வீட்டில் செய்யப்படும் நடைப்பயிற்சி’ என்று நோர்மன் கசின்ஸ் கூறியுள்ளார். ‘சிரிப்பு என்பது ஒரு சர்வதேசப் பிணைப்பு என்பதால் எல்லா மொழிகளிலும் நாங்கள் ஒரேவிதமாகச் சிரிக்கின்றோம்’ என்று யக்கோவ் சிமிர்நோவ் கூறியுள்ளார். இவ்வாறாகப் புகழ் பெற்ற மனிதர்களின் பொன்மொழிகளும் சிரிப்பின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்துகின்றன. எனவே நாளாந்த வாழ்வில் சிரித்து வாழும் பழக்கத்தை ஏற்படுத்தி அன்புடைமைச் சொத்தொடு வாழ்வோம் என்ற வேண்டுகோளை விடுத்துக் கொள்கின்றேன்.

அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம்.

தொடரும்....



- அகணி -
authorakani@yahoo.com

MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |


Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university.
Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at
Scarborough & Stouffville



Contact: 647.340.9490/ 416.732.2228

# பேச்சுத் தமிழ் கற்பித்தல்

**முன்னுரை**

## ஆசிரியர், பெற்றோருக்கான அறிவுறுத்தல்கள்

முதலாம் வகுப்பு

வகுப்புகள் ஆரம்பமாவதுக்கு முன்னர் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெற்றோருடன் ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்ய வேண்டும். அதில் குழந்தைகளை தமிழ் வகுப்பில் சேர்த்ததன் முக்கிய நோக்கத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். அவர்கள் வீட்டில் செய்ய வேண்டிய விடயங்களைக் கலந்துரையாடி தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். பாடசாலையும் பெற்றோரும் சேர்ந்து இயங்க வேண்டியதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட வேண்டும். பின்வரும் தீர்மானங்கள் எடுப்பது நல்லது:

1. வீட்டில் யாவரும் தமிழில் பேசவேண்டும்.

2. வீட்டுச் சூழல் தமிழாக இருக்க வேண்டும். குறிப்பாக தமிழ் வானொலி கேட்பது, தொலைக்காட்சி பார்ப்பது, தமிழ் பத்திரிகைகள் நூல்கள் வாசிப்பது எனக் குடும்ப உறுப்பினர்கள் ஈடுபட்டிருக்க வேண்டும்.

3. தமிழ் நூல்கள், ஒலிவட்டுகள், ஒளிவட்டுகள் வாங்கி மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுவதும், கேட்கவும், பார்க்கவும் வைக்க வேண்டும்.

4. தமிழ் சினிமாப் படங்கள் பார்க்கும் போது அவதானம் தேவை. கொலை, களவு, பாலியல் வல்லுறவு, சண்டை, சிறுவர், பெண்கள் துன்புறுத்தல் காட்சிகளுள்ள படங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.



**- சின்னையா சிவனேசன்-**

5. பிறந்த நாள் பரிசாக தமிழ் நூல்கள், ஒலி, ஒளி நாடாக்கள், தமிழ் கற்றலைத் தூண்டும் விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுங்கள்.

6. பாரம்பரியப் பாடல்களைப் பெற்றோர் சொல்லிக் கொடுக்கவும்.

7. குழந்தைகளோடு பேசும்போது மரியாதைச் சொற்களைப் பயன்படுத்தல் முக்கியம். உ-ம். போங்கோ, படியுங்கோ, சாப்பிடுங்கோ முதலியன.

8. வீட்டில் பேரன், பேத்திமார் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிப்பதில் கூடிய கவனஞ் செலுத்தவும்.

9. இரு மொழிகள் அதாவது ஆங்கிலம், தமிழ் கற்பது குழந்தைகளுக்குக் கடினமாயிருக்குமெனப் பெற்றோர் கருதுவது தவறானது. இரு மொழிகள் கற்கும் மாணவர்கள் ஒரு மொழி கற்பவரைக் காட்டிலும் சிறப்பாகச் செய்கின்றனர் என ஆய்வுகள் காட்டுகின்றன. மூளையின் இரு பகுதிகளும் சிறப்பாகச் செயலாற்றுவதாக அறியப்படுகிறது.

10. மொழியும் பண்பாடும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. எனவே ஓர் இனம் நிலைத்திருப்பதற்கு மொழி மிகவும் முக்கியமானது. மொழி அழிந்தால் பண்பாடும் இனமும் அழிந்துவிடும் என்பது வரலாற்று உண்மை.

ஓர் இனம் நிலைத்திருப்பதற்கு பிறப்பு வீதமும் முக்கியமானது. ஓர் இனம் நிலைத்திருக்க 2.11% பிறப்பு தேவை. இது இருந்தால் மட்டுமே ஒரு கலாச்சாரம் 25 ஆண்டுகளுக்கு நிலைத்திருக்கும். இல்லாது விடின் அது அழிந்துவிடும். இதை மீளக் கட்டி எழுப்ப 80 முதல் 100 ஆண்டுகள் செல்லும்.

கனடாவின் பிறப்பு வீதம் - 1.6 %
அமெரிக்காவின் பிறப்பு வீதம் - 1.6 %
இந்தியாவின் பிறப்பு வீதம் - 2.6 %
தமிழ் நாட்டின் பிறப்பு வீதம் - 1.8 %
பிகாரின் பிறப்பு வீதம் - 2.4 % (ஆகக் கூடியது)
(அண்மைத் தகவல்கள்)



**CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT**
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels• We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

சென்ற தடவையில் கதிரவக் குடும்பத்திற்கு வெளியிலாக கோள்களில் உயிரினங்கள் இருக்க முடியுமா என அறிவியல் நிலையில் இருந்து அலசிப் பார்த்துப் பல ஆச்சரியமான முடிவுகளை, அல்லது தகவல்களைப் பெற்றுக் கொண்டோம். இன்னமும் எங்களது இப்பகுதியிற்கான முடிவினை அடைய வில்லை. அதனால் அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்' பற்றிய தகவல்கள், பதிவுகள் பற்றிய குறிப்புகள் இல்லாமலே சில காலங்கள் சென்று விட்டன. எமது தேடலின் தொடர்ச்சித் தன்மை குன்றாது இருப்பதற்கும், அறிவியல் வளர்ச்சியில் ஊறு ஏற்படாது இருப்பதற்கும் இன்னமும் சில இதழ்களுக்கு இந்நிலை தொடரும் என்பதனைக் கூறிக் கொள்கிறேன். ஆனாலும் ஒரு சுவாரசியமான, நீங்களும் அறிந்து கொண்ட விடயத்தினை நினைவுக்குக் கொண்டு வருகிறேன். அதுதான் 'பச்சை மனிதர்கள் சர்ச்சை' பரபரப்பான அந்த விடயம் பற்றிப் பார்த்துக் கொண்டு எங்களது தேடலைத் தொடருவோம். சென்ற ஏப்ரல் 2ம் திகதி, (ஏப்ரல் 2, 2015) ஏப்ரல் பூல் தினத்திற்கு அடுத்த நாள் யப்பான் நாட்டின் நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்வியும் பதிலும். கேள்வி இதுதான். யப்பான் நாட்டில் பச்சைநிற வேற்றுக்கிரக மனிதர்கள் (அந்நியர்கள்) தங்களது விண்கலத்தினை (அபூர்வ விமானத்தை) இறக்குவதற்கு அனுமதி கேட்டார்களா, யப்பான் அரசாங்கம் அதற்கான அனுமதியை வழங்கியதா? என்ற தொனியில் அக்கேள்விகள் எழுப்பப்பட்டிருந் ததாம். அதற்கு அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் அப்படி எதுவித அனுமதியினை யாரும் கேட்கவில்லை எனவும், அப்படி யாரும் கேட்டால் யப்பான் அப்படியொரு அனுமதியினைக் கொடுக்கமாட்டாது எனவும் கூறியிருந்தாராம்.

இக்கேள்வி பதில் வெளியிலே கசிய, யப்பானியர்கள் பெரும் பயப்பிராந்திக்குள் வந்தார்கள். இச்செய்தி கிட்டத்தட்ட எல்லாச் செய்தி நிறுவனங்களினதும் செய்திகளில் வந்து மனிதர்களை ஒரு உலுக்கு உலுக்கியது என்பது உண்மைதான். கனட-ாவின் தமிழ்ச் செய்திகளிலும் கூட நீங்கள் கேட்டிருக்கலாம். கேட்டீர்களா? கேள்விப்பட்டீர்களா? ஏப்ரல் பூல் தினத்தின் நீடிப்பான செய்தியோ எனக் கூறுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், வேற்றுக்கிரகவாசிகள் பற்றியும், பறக்கும் தட்டுகள் பற்றியும் ஆய்வு செய்பவர்களைப்



உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொறுத்தவரையில் அவர்களுக்கு ஆதரவான செய்தியாகவே இது அமைந்துள்ளது. இது சில விஞ்ஞானப் புனைகதைகளில் வந்த சம்பவங்களை உண்மைப் படுத்துவது போலவும் உள்ளது. மிக அண்மையில் வந்த அந்நியர்களும் அபூர்வ விமானங்களும் பற்றிய செய்தி என்பதால், அதனை ஒரு இடைச்செருகலாக அமைத்திருந்தேன். இனி எங்களது ஆய்வுக்குள், தேடலுக்குள் செல்வோம். பல விண்மீன் குடும்பங்களினுள் கதிரவன் - புவித் தொகுதியை ஒத்த தொகுதியும் இருப்பதற்கு சாத்தியக்கூறுகள் உண்டு. இதனை நாங்கள் எளிதாகவே ஏற்றுக் கொள்ளலாம். அப்படியான ஒரு விண்மீனும் அதன் கோள் ஒன்றும் அமைந்திருக்கும் நிலைகள், புவியும் கதிரவனும் இருக்கும் நிலைக்கு ஒத்த விகி தாசாரத்தில் அல்லது கிட்டத்தட்ட ஒத்ததான நிலையில் இருக்கின்றது என்போம். அப்படி இருக்கையில் நமது புவி, கதிரவனில் இருந்து பெறும் சக்தியளவை அக்கோள் பெறக்கூடியதாக இருப்பின் அக்கோளிலும் எமது புவியில் உள்ளன போன்ற உயிரி னங்கள் தோன்றுவதற்கு சாத்தியக்கூறுகள் அங்கே நிறைய உண்டு. இப்பேரண்டத்தில் இச்சாத்தியக் கூற்றினைக் கொண்டிருக்கக் கூடிய விண்மீன்கள் ஏராளம் என்பது விஞ்ஞானிகளது கருத்து. பால்வழிக் கலக்சி யில் மட்டும் $10^{11}$ (ஒன்றுடன் பதினொரு பூச்சியங்கள் சேர்ந்த எண்) நட்சத்திரங்கள் உள்ளன. அட அவ்வளவு விண்மீன்கள் எங்களது கலக்சியில் உள்ளனவா என்று வியக்கும் உங்களுக்கு, அவற்றில் உயிரினங்கள் இருக்கக் கூடியதான விண்மீன்கள் எவ்வளவு எனப் பாருங்கள். $5 \times 10^{12}$ விண்மீன்களைச் சுற்றிவரும் கோள்களில் உயிரினங்கள் இருப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இருக்கின்றது எனக் கூறுகின்றது விஞ்ஞானிகளின் புள்ளிவிபரம்.

சரி எவ்வளவு விண்மீன்களின் கோள்களில் உயிரினங்கள் இருக்கலாம் எனப் புள்ளி விபரம் கூறினாலும் இன்னமும் கொஞ்சம் ஆழமாகப் பார்ப்போம். கதிரவனின் கோளான நமது புவியினை எடுத்துப் பார்ப்போம். புவியில் ஒருகல உயிரினம் தோன்றுவதற்கு புவி தோன்றிய பின்னராகச் சுமாராக 1000 மில்லியன் வருடங்கள் எடுத்திருக்கும் என்கின்றார்கள். மேலும் புத்திசீவிகளான உயிரினம் உருவாகுவதற்கு 4600 மில்லியன் வருடங்கள் எடுத்திருக்கின்றன. எனவே உயிரினம் ஒன்று தோன்றுவதற்கான சாத்தியமான காலநிலை மாத்திரம் போதாது. போதுமான காலமும் தேவை. மிகப் பெரிய விண்மீன்களின் வாழ்நாட் காலம் சில மில்லியன் வருடங்களே. இதனால் இவற்றின் கோள்கள், ஒருவேளை உயிரினம் தோன்றுவதற்கான காலநிலையைக் கொண்டிருந்தாலும் உயிரினம் தோன்றும் முன்னரே கோள்கள் மறைந்துவிடும். இனிச் சிறிய விண்மீன்களை எடுத்துப் பார்ப்போ மாயின் அவற்றின் வாழ்நாட் காலம் பல ஆயிரம் மில்லியன் வருடங்கள் வரையிற் போகும். ஆயினும் அவற்றின் வெப்பநிலை குறைவாக இருப்பதனால் அவற்றின் கோள்களில் உயினங்கள் தோன்றுவது சாத்தியப்படாது என்றேதான் கூறவேண்டும். இருப்பினும் கதிரவன் - புவி அமைப்புத் தொகுதி இருப்பின் அங்கும் உயிரினங்கள் தோன்றி இருப்பதற்கான வாய்ப்புகள் உண்டு.

சரி, வேற்று விண்மீன்களின் சில கிரகங்களில் உயிரினங்கள் தோன்றியிருக்க வாய்ப்புகள் உள்ளன என்பதை புள்ளிவிபர முறையில் தெரிந்து கொண்டோம். அப்படியாக உயிரனங்கள் தோன்றியிருந்தால் அங்கு புத்திசீவிகளான உயிரினங்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் உண்டா எனவும் பார்ப்போம். அப்படியாக இருந்தாற்தான் புவியில் உள்ள எங்களுக்கு அந்நியர்களும் அபூர்வ விமானங்களும் என்ற பதத்தின் உண்மைத்தன்மை சரியானதாக இருக்கும் அல்லவா. நமது புவியில் உயிரினம் தோன்றி 600 மில்லியன் வருடங்கள். அதிலும் புத்திசீவிகளான மனித இனம் தோன்றி 1 மில்லியன் வருடங்கள்தான் ஆகிறது. அதாவது இன்று நாம் கொண்டிருக்கும் அறிவியல் நிலையை மனிதர் அடைவதற்கு 1 மில்லியன் வருடங்கள் எடுத்துள்ளன. எனவே இன்னொரு கிரகத்தில் தோன்றிய புத்திசீவியான உயிரினத்தின் உயிரியல் வளர்ச்சிக் காலம் 1 மில்லியனை விடக் குறைவாக இருப்பின் அவர்களின் அறிவியல் நிலை எங்களை விடப் பின்தங்கியே இருக்கும் என எதிர்பார்க்க வேண்டும். மறுதலையாக 1 மில்லியன் வருடங்களுக்கு அதிகமாக இருப்பின் எங்களை விட அறிவி யல் நிலையில் முன்னேற்றம் அடைந்தவர் களாக இருப்பார்கள் என எதிர்பார்கலாம். ஆக, புத்திசீவிகளான வேற்றுக் கிரகவாசிகள் இருப்பதற்காக வாய்ப்புகள் அக்கிரகம் இருக் கின்ற காலத்தின் அளவினைப் பொறுத்து இருக்காலம் என்ற முடிவுக்கு வரலாம்.

சில ஆய்வாளர்களின் பேரண்டத்தில் ஏராளமான கோள்களில் உயிரினங்கள் உண்டு என்கிறார்கள். அதிலும் பலவற்றில் புத்திசீவிகளான உயிரினங்கள் வாழுகின்றன என்கிறார்கள். சிலவற்றின் வளர்ச்சிக் காலம் ஆயிரம் மில்லியன் வருடங்களுக்கும் மேலாக இருக்கலாம் என்கிறார்கள். அப்படியாக இருப்பின், அவர்களின் அறிவியல், தொழில் நுட்பம் என்பன புவியின் மனிதர்களிளை விட உயர்ந்ததாக இருக்கும் என்பதில் மாறுபட்ட கருத்து ஏதும் இல்லை. இதில் இன்னொரு கருத்தினையும் நாங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். இப்படியான வேற்றுக் கிரகிகள் புவியின் மனிதராகிய எங்களைப் போலவே அச்சொட்டாக இருக்க வேண்டும் என்றில்லை. அவ்வுயிரினத்தின் கோள் எவ் வகையான கனிமங்களைக் கொண்டுள்ளது, அக்கோளின் சுகாத்திய நிலை எப்படியிருக்கின்றது என்பதற்கு ஏற்றதான கூர்ப்பினைக் கொண்ட அமைப்பிலேயே அவ்வுயிரினங்கள் இருக்கும். இப்படியாக இருக்கக் கூடியதான உயிரினங்கள் பற்றிய சுவையான அலசல் ஒன்றினை அடுத்த தடவையிற் பார்ப்போம். சரிதானே!

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9- 12 , UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

# REFINANCE TO LOWER RATES & SAVE 75%

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000@2.9% | 1,498.02 | - |
| Car Loan | 21,000@7.5% | 764.25 | 0.00 |
| Line Of Credit | 16,000 @6.5% | 566.67 | 0.00 |
| Line Of Credit2 | 12,500 @7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @24% | 150.00 | 0.00 |
| | | | |
| New Mortgage Payment | 386,500@2.5% | | 1,524.55 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | **4,014.20** | **1,524.55** |

MONTHLY SAVING

$2,489.65

VERICO MORTGAGE BROKERS NETWORK

APPLY ONLINE kiruba.ca OR Call Me

ULTIMATE MORTGAGE & FINANCIAL SOLUTIONS
LIC#: 11995
305-5200 Finch Ave East
Scarborough, ON. M1S 4Z5

KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent
LIC#: M12002440

416.298.2777
info@kiruba.ca


# ஒன்ராறியோ...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

அரசின் மனித உரிமை மீறல்களைப்



பற்றிக் பிரவுண் உடன் கட்டுரையாளர்

போது வந்து ஆதரவு தெரிவித்திருந்தார். பற்றிக் பிறவுண் சேர்த்துள்ள 41 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய பழமைவாதக் கட்சி உறுப்பினர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் தமிழர். பற்றிக் பிறவுண் 2009இல் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ள முயன்ற போது அப்போதைய இலங்கை அரசு அவருக்கு இலங்கைக்கு வர அனுமதி அளிக்கவில்லை. அப்போது பற்றிக் இலங்கை பற்றியும், இடம்பெயர்ந்த தமிழர்களை அடைத்து வைத்திருந்த முள் வேலியால் சுற்றிய அமைக்கப்பட்ட முகாம்களின் சுகாதார கேடுகள் பற்றியும் ஊடகவியலாளர்களுக்கு கூறியிருந்தார்.

- சிவ. ஞானநாயகன்




Ajax | Markham | Scarborough
Classes in Various Genres:
**Bharathanatyam**
**Bollywood**
**Gaana**

irudaya DANCE COMPANY

"NATTIYAKALAMANI"

**Nivatha Moothathamby**
**Keerthana Arulanandarajah**

- Arangetra Students of Sri Vasu Sinnarasa (Director of Sathangai Narthanalayam)
- Graduates of Annamalai University Canada Campus
- University Dance Team Choreographers
- Performed on numerous platforms in Ontario



For further questions please contact us at:
(647) 967-1994 (416) 319-0164


Parkway Mall Mobilicity 4 DAYS SPECIAL
CMR Radio
Live Radio Remote
May 2 & 3, 2-6pm
$15/mo
May 1-4
Life Time Deal
Free Gift
UNLIMITED Talk, Text & DATA (+$10)
UNLIMITED Local Calling
UNLIMITED Ontario Long Distance
UNLIMITED Text messaging
UNLIMITED DATA, Internet, Mobile-Hotspot (+$10)
FREE Caller ID, Call Waiting and more
Samsung T199 $99.99 $0
Motorola Spice $129.99 $39.99
Alcatel OneTouch Evolve 2 $149.99 $69.99
LG L90 $249.99 $149.99
Samsung Galaxy S4 $599.99 $299.99
iphone 5C 16GB $549.99 $299.99
No Contract !!
No Credit Check !!
PHONES $50 OFF
You can bring in your own phone
ONLY at
Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, 416-999-9229
mobilicity
Now that's smart.™
Taxes are extra. $15/month offer valid only while customer is on automatic monthly payments. Special only at Parkway Mall Mobilicity and limited quantity. Free Gift only with new activation. Additional terms and conditions apply. Subject to change without notice. © 2015 Mobilicity. 'Mobilicity', 'Now that's smart', the Mobilicity designs and the Mobilicity logo are trademarks of Mobilicity. Other trademarks shown may be held by their respective owners. All rights reserved

# JRS AUTO TECH

OPEN 24 HOURS
7 DAYS A WEEK

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

VISA

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors

**TIRE SPECIALS**
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35

**FREE OIL CHANGE WITH RUST PROOFING**
$99 Car
$120 SUV

**BRAKE JOB**
STARTING FROM
$159

**WATER PUMP TIMING BELT & LABOR**
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

**TRANSMISSION FLUSH**
*Starting From...*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

**ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS**
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

## 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

## CALL SUBAS DIRECT → 416-206-9489

## Tel: 416-628-4399

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

## "கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

## PROJECT BY "CONCORD"

## LESLIE & SHEPPARD

### Tango 1

### Tango 2





**5% CREDIT TO BUYER**

**2 YEARS RENTAL GUARANTEE**

**No Interim Closing**

- *Price Starts From High $200's*
- *Quick Closing...... Low Interest Rate*

**HomeLife / GTA Realty Inc., Brokerage***

**5215 Finch Ave, E., #203 Toronto, ON**

**Tel: 416.321.6969**


**Independently Owned & Operated*

**Computer Repairs! Computer Repairs!**

• Computer & Laptop Sales • Software & Antivirus • Virus Removal
• All types of Computer Repairs • Computer Upgrades

For Computer Repairs, Upgrading & Virus Removal

We Also Sale Mobile Phones



Ganesh: 416.527.1455
venuscomputer50@gmail.com
umaaganesh@yahoo.com

**NEW SHADI நகைத் தொழிலகம்**

Specialized In Jewellery Making & Custom Design Watch Repairing.

• நீங்கள் விரும்பும் 22 கரட் தங்க, வைர நகைகளை பெற்றுக்கொள்ளலாம்.
• உடனுக்குடன் உங்கள் முன்னிலையில் உங்களது நகைத்திருத்த வேலைகள் அதிநவீன லேசர் தொழில் நுட்பத்தில் செய்து தரப்படும்.
• கைக்கடிகாரங்கள் திருத்திக்கொடுப்பதோடு பற்றறியும் மாற்றிக் கொடுக்கப்படும்.



416.335.1040 / 647.409.4092
585 Middlefield Rd., #15 Scarborough, ON M1V 4Y5

# கழுத்துவலி என்னும் தோள்பட்டை வாதம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

உடலும், மனமும் பாதிக்கப்படும் போது, நோய்கள் தானாகவே மனிதனை வந்து சேர்கிறது. உடலானது 72,000 நரம்புகளாலும், தசைகளாலும், இரத்த நாளங்களாலும், எலும்புகளினாலும் பின்னிப்பிணைக்கப்பட்டதாகும். இத்தகைய நுட்பமான உடலமைப்பைக் கொண்ட மனிதர்கள் குறிப்பாக முதுகு வலி, கழுத்து வலி, கை கால் மூட்டு வலி போன்றவற்றால் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

மனிதர்களின் இயக்கம் அனைத்திற்கும் முக்கிய காரணமாகச் செயல்படுவது சிரசு என்ற தலைப்பகுதி தான். இத்தகைய சிறப்புவாய்ந்த தலைப் பகுதியை உடலோடு இணைக்கும் பாலம் தான் கழுத்துப் பகுதியாகும். கழுத்துப் பகுதி வழியாகத்தான் தலைக்கும், உடலுக்கும் இரத்த நாளங்கள் செல்கின்றன. ஆகவே, இந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டால் நமது அன்றாடச் செயல்கள் அனைத்தும் கடினமாகிவிடுகின்றன. இது பெரும்பாலும் 40 வயதைத் தாண்டியவர்களுக்கே ஏற்படுகின்றது. இந்த எலும்புகளின் இணைப்புகளில் ஏற்படும் தேய்மானத்தைத் தான் தோள் பட்டை வாதம் என அழைக்கின்றனர். இது பெரும்பாலும் அதிக நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்பவர்களையே அதிகம் பாதிக்கிறது. உடற் பயிற்சியின்மை, சீரற்ற உணவு முறை, தூக்கமின்மை என்பவற்றாலும் உண்டாகின்றது. செரியாமை, மலச்சிக்கல், வாயுக் கோளாறுகள், குடல் சூடு போன்றவற்றாலும், மன அழுத்தம் (Stress), அதிக நேரம் கணினி (Computer) முன் அமர்ந்து வேலை செய்தல் போன்றவற்றாலும் இந்தக் கழுத்து வலி உருவாகின்றது.

தவறான உணவுப் பழக்கவழக்கங்களால் குடலில் நீரானது அதிகம் சுரந்து செரியாமை, மலச்சிக்கல் போன்றவற்றை ஏற்படுத்துகிறது. இதனால் அபாண வாயுவானது குடல் நீரை



மேல் நோக்கித் தள்ளுகிறது. இந்த குடல் நீர் ஆவியாகி தலையை நோக்கிச் சென்று அங்கே தங்குகிறது. தலையின் பின் பகுதி நரம்புகள் வழியாக கீழ் இறங்கி கழுத்துப் பகுதிக்கு வரும் போது, அங்கு தசைகளையும், நரம்புகளையும் சுற்றிக் கோர்த்துக்கொள்கிறது. பின்பு அது பசைத்தன்மையடைந்து, பந்து போல் கழுத்துத் தசைகளையும், நரம்புகளையும் இறுகச்செய்கிறது. இதனால் கழுத்துப்பகுதி திருப்ப முடியாமல் போகிறது. மேலும், அங்கு கைகளின் நரம்புகள் ஆரம்பிப்பதால் தோள் பகுதிகள் இறுகி வலியை ஏற்படுத்துகிறது.

### குணங்குறிகள்

தலை வலி, குனிந்து நிமிரும்போது தலை சுற்றுதல், கைகள் மரத்துப்போதல், கை விரல்களில் பிடிப்பு, கோபம், தூக்கமின்மை, மூக்கில் நீர் வடிதல், சில சமயங்களில் நெஞ்சு வலியையும் ஏற்படுத்தும்.

### கழுத்து மற்றும் தோள் வலியைப் போக்குதல்

இன்றைய மருத்துவ முறையில் கழுத்து மற்றும் தோள் வலியை 'மசாஜ்' மூலமும், மாத்திரையைக் கொடுத்தும் குறைக்க முயற்சிக்கின்றனர். அதுவும் பலன் தரவில்லையென்றால் வலியின் உணர்வை இல்லாமல் செய்யும் ஊசியை ஏற்றி தற்காலிகமான நிவாரணத்தைக் கொடுக்கின்றனர். ஆனால், சித்த, வர்ம மருத்துவ முறையில் தோள் பட்டை வலியைப் போக்க வர்மத் தைலங்களைத் தடவி, அப்பகுதியிலுள்ள வர்மப் புள்ளிகளை (Pressure point) முறைப்படி அழுத்துவதன் மூலம் தோள் பட்டைப் பகுதியிலுள்ள எலும்புகளைச் சுற்றியுள்ள பசைத்தன்மை (Implantation) இன்றி சீரான இரத்த ஓட்டத்தை ஏற்படுத்தும். நாளடைவில் வலி குறைந்து, அதன் குணங்குறிகளும் மறையும்.

### உணவு முறை

நேரம் கடந்தும், அளவுக்கு மீறியும் உண்ணுதல், எளிதில் ஜீரணமாகாத உணவை உண்ணுதல், அடிக்கடி நொறுக்குத் தீனி உண்ணுதல், புகை, மது போன்ற போதைப் பொருள்களை பயன்படுத்துதல், நீண்ட பட்டினி, வாயுப் பதார்த்தங்களை உண்ணுதல், அதிக குளிரூட்டிய உணவு வகைகளை உண்ணுதல் என்பனவற்றைத் தவிர்க்க வேண்டும். அத்துடன் மலச்சிக்கல் வராது பார்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக இரவு உணவு மென்மையானதாக இருப்பதுடன், வேளைக்கு முடிக்க வேண்டும். காலை உணவை கண்டிப்பாகச் சாப்பிட வேண்டும்.

### உடல் உழைப்பும் யோகாசனப் பயிற்சியும்

உடல் உழைப்பு என்பது பலருக்கும் இல்லாமல் போய்விட்டது. காரணம் இது 'கம்பியூட்டர்' யுகம். மனிதர்கள் செய்யும் வேலையின் பெரும் பகுதி இயந்திரங்கள் மூலமாகச் செய்யப்படுகின்றன. பெரும்பாலானோர் ஓரிடத்தில் அமர்ந்தபடியே தமது அன்றாட வேலைகளைச் செய்கின்றனர். இவர்கள் தினமும் குறைந்தது அரை மணி நேரமாவது ஒதுக்கி யோகா உடற்பயிற்சி செய்வது மிகுந்த பலனைத் தரும். குறிப்பாக யோகாவில் கழுத்து வலி, தோள்பட்டை வலி போன்றவற்றிற்கு பிரத்தியேகமான பயிற்சிகள் உள்ளன. அவற்றை ஒரு யோகாசன ஆசிரியரின் மூலமாகத் தெரிந்து கொண்டு பயிற்சி செய்வது சிறந்தது.

### படுக்கை

தலையணை அதிக உயரமின்றி இருக்க வேண்டும். பள்ளம் மேடு இல்லாத படுக்கையிலேயே தூங்க வேண்டும். அதிக குளிர் காற்று உடலில் படும்படி தூங்கக்கூடாது.

### சிகிச்சை முறைகள்

மாதம் ஒரு தடவையாவது எவ்வளவு சிரமப்பட்டாயினும் வாந்தி எடுப்பது நல்லது. ஏனெனில் உடலின் இருதயப் பகுதிக்கு மேலே தேங்கியிருக்கும் கழிவுப் பொருட்கள் வாந்தி மூலமாகத்தான் வெளியேறும்.

தோள் பட்டைப் பகுதியில் கழுத்தினைக் கைகளுடன் இணைக்கும் பகுதியிலுள்ள வர்மப் புள்ளிகளைச் சற்று விசை கொண்டு அழுத்தி வருவதன் மூலமும் இந்த தோள் மற்றும் கழுத்து வலிகளை முற்றாகக் குணப்படுத்த முடியும்



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721




**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்



மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

## நேபாள நிலநடுக் மீட்புப் பணிகளில் இந்திய விமானப் படை

**08ஆம் பக்கத்தொடர்ச்சி** நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்தில் மீட்புப் பணிகளை துரித கதியில் இந்திய விமானப் படை மேற்கொண்டிருந்தது. இந்திய விமானப் படை இந்நடவடிக்கைகளுக்கு ஒப்ரேஷன் மைத்ரி என பெயரிட்டிருந்தது. பல்லாயிரக்கணக்கானோர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். நேபாளத்தில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது என்ற தகவல் வந்த சில மணி நேரங்களிலேயே இந்தியா முழு வீச்சில் மீட்புப் பணிகளில் உதவியது. ஏமனில் சிக்கித் தவித்த இந்தியர்களை மீட்டு நாடு திரும்பிய விமானப் படையினருக்கு அடுத்த சவாலாக இருந்தது நேபாள நிலநடுக்கம். நேபாளத்தில் கடந்த சனிக் கிழமையன்று நிலநடுக்கம் ஏற்பட்டு 4 மணி நேரத்துக்குள் C-130J விமானம் டெல்லி பாலம் விமான தளத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றது. அதில் 39 தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரும் 3.5 தொன் நிவாரணப் பொருட்களும் கொண்டு செல்லப்பட்டன. இதுதான் கட்மண்டுவில் முதலில் இறங்கியது.




இவற்றில் 500 கூடாரங்கள், 14 தொன் நூடில்ஸ், 100 ஸ்ட்ரெச்சர்கள், ஒரு தொன் மருந்துகள் கொண்டு செல்லப்பட்டன. இவை தவிர விமானப் படையின் 6 ஹெலிகொப்டர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டன. நேபாள விமானப் படை விமானிகளும் இந்திய ஹெலிகொப்டர்களில் இந்திய விமானிகளுடன் இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். கடைசியாக 237 இந்தியர்களுடன் நேபாளத்தில் இருந்து இந்திய விமானம் திரும்பியது.

## நேபாள நிலநடுக்க மீட்புப் பணிகளில் இலங்கை

நேபாளத்தில் பாதிக்கப்பட்டுள்ள உறவுகளுக்கு உதவும் முகமாக இலங்கை மருத்துவ உதவிகளையும், நிவாரணப் பொருட்களையும் அனுப்பி வைத்துள்ளது. பூகம்பத்தில் சிக்கி நிர்க்கதிக்குள்ளாகியிருக்கும் மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான மேலுமொரு தொகுதி மருத்துவக் குழு 2015 ஏப்பிரல் 27 இல் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விமானத்தில் நேபாளம் நோக்கிச் சென்றுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமையவே முப்படையினர் பொலிஸ் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. குறித்த விமானத்தில் 4 ஆயிரம் கிலோகிராம் நிறையுடைய மருந்து, உணவுப் பொருட்கள் மற்றும் குடிநீர் போத்தல்கள் நேபாளத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

இந்த விமானத்தில் ஒரு இராணுவ அதிகாரி தலைமையில் 15 இராணுவ வீரர்களும் ஒரு கடற்படை அதிகாரியின் தலைமையில் 13 கடற்படை வீரர்களும் ஒரு விமானப் படை அதிகாரியின் தலைமையில் 10 விமானப் படை வீரர்களுமாக முப்படையைச் சேர்ந்த 41 பேர் நேபாளம் சென்றனர்.

## பிரபல எழுத்தாளர் பூநகரான் இயற்கை எய்தி விட்டார்



கனடாவில் வாழ்ந்தவரும், Air Canada நிறுவனத்தில் பணியாற்றியவரும், பிரபல எழுத்தாளருமான திரு.பொன்னம்பலம் குகதாசன் (பூநகரான்) அவர்கள் கடந்த 27ம் திகதி திங்கட்கிழமை தனது 58வது வயதில் இயற்கை எய்தி விட்டார். இவர் பூநகரி சித்தங்குறிச்சியைச் சேர்ந்த காலஞ்சென்ற டாக்டர் பொன்னம்பலம், இராசம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வரும் தனலட்சுமியின் ஆருயிர் கணவரும், அபிராமி, தர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்புடனும், பண்புடனும் அனைவருடனும் பழகி அறிவியல் கட்டுரைகள் பலவற்றை எழுதி பல நூல்களையும் வெளியிட்ட அமரர் பூநகரானுக்கு 'விளம்பரம்' பத்திரிகையின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும், மனவருத்தத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


MAHAJANAN SINGING CONTEST 2015

*Students, who were born between March 01, 1997 to March 31, 2008 including both dates, are eligible to participate in this competition.*

***The first three finalists will be awarded with cash prizes.***

*We will not eliminate any participant based on a single performance of a single round.*

Registration Closing Date: May 10th, 2015

Web link for registration: www.mahajanan.org

Click on the scrolling "Mahajanan singing contest" banner to get the Guide lines and the application.

For further information: 647 547 7096, 647 989 6477

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION – CANADA

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

(Registered as a non profit organization in Canada, No: 001100556)

# அரியவர் அரங்கம்

## Disabled Theatre

### விளக்கம்

அரியவர் என்ற சொல் மனநலம் பாதிக்கப் பட்டவரையும் உடல் ஊனம் உற்றவரையும் குறிக்க இக்கட்டுரையிற் பயன்படுத்தப்படு கின்றது. மனநலம் பாதிக்கப்பட்டவரையும் உடல் இயக்கம் செப்பமாக இல்லாதவரையும் குறிக்க ஒலிம்பிக் குழு பயன்படுத்திவரும் Special என்ற சொல் பிரபலியமானது. அவர்களுக் கென்றே Special Olympics சையும் ஒலிம்பிக் குழு நடத்திவருகின்றது. குறைபாடுள்ளவரது இயலாமையை முன் வைக்கும் எந்தச் சொல்லையும் மருத்துவரோ உளவியலாளரோ விரும்புவதில்லை. அவர்களைத் தெய்வக் குழந்தைகள், வளர்மதிகள், அரியவர் என்று வேறு விதமாகக் குறிப்பிடுவதே பண்புடைமை யாகும். இவற்றுள் அரியவர் என்ற சொல்லே மிகவும் பொருத்தமானதாகத் தெரிகிறது.

### ஏன் அரியவர்?

அரியவர் என்போர் பொதுமைக்குப் புறம்பானவர் நாளாந்தம் நாம் காணாதவர் காணுகின்றபோது எமது கவனத்தை ஈர்க்கின்றவர். மனிதாபிமானத்தின் பொருளை, அதன் தேவையை எமக்கு உணர்த்து கின்றவரும் அவர்களே! மலர்கள் எவ்விதம் அழகு உணர்ச்சியை ஊட்டுகின்றனவோ அவ்விதம் அன்பிலார்க்கும் அன்பை ஊற்றெடுக்கச் செய்பவரை அரியர் எனல் தகுமன்றோ!

### யாழ்ப்பாணத்தில் அரியவர் அரங்கம்

அரியவரின் கலையார்வத்தை வளர்க்கும் அல்லது முன்னிலைப்படுத்தும் அரங்கம் அரியவர் அரங்கம் ஆகின்றது. இத்தகைய அரங்கத்தை நான் முதல்முதலில் தாயகத்தில் யாழ்ப்பாணத்திற் காண நேர்ந்தது.

செஞ்சொற் செல்வர் திரு. ஆறு திருமுருகன் அவர்களது முயற்சியால் ஆரம்பிக்கப்பெற்ற சிவபூமி அறக்கட்டளை கடந்த பல ஆண்டுகளாகப் புற்றுநோயாளருக்கு நிதி யுதவி, காது கேளாதவருக்குச் செவிப்புலக் கருவி வழங்கல், ஏழைச் சிறார்களுக்குக் கல்வி உதவி, கண்தானம் மற்றும் இரத்ததானச் சேவைகள் போன்றவற்றைச் செய்து வருவதைப் பலரும் அறிவர்.

2009 நவம்பர் மாதத்தில் இப்பணிகளை நேரிலேயே கண்டறியும் வாய்ப்புக் கிடைத்தது. அவற்றுள் சிவபூமிப் பாடசாலைப்பணி செயற்கருஞ் செயலாக விளங்குகின்றது.

இது ஒரு சிறுவர் மனவிருத்திப் பாடசாலை. வெளிநாட்டுப் பரோபகாரிகளின் நன்கொடை களாலும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடைய வழிப்படுத்தலாலும் கோண்டா வில் கிழக்கில் கட்டப்பெற்று 02.07.2004ல் திறப்புவிழா நடத்தப்பட்டிருக்கின்றது.

14.11.2009 சனிக்கிழமை செஞ்சொற்செல்வர் என்னையும் எனது துணைவியாரையும் அழைத்துச் சென்று பாடசாலையைக் காட்டினார். திருமதி கமலாதேவி சண்முகராஜா அதிபராகப் பணியாற்று கின்றார். பிள்ளைகள் தொகை 172. அவர்களைப் பதினொரு ஆசிரியர்கள் அன்பு பாராட்டிக் கவனித்துவருகிறார்கள்.

பாடசாலைப் பிள்ளைகளுடன் கட்டுரை ஆசிரியரும் துணைவியார் தவமணியும்.

திரு. தி. வேற்பிரசாதம் நிருவாக அலுவலராகவும் திரு. சி. கதிரவேல் காவலராகவும் பணிபுரிகின்றனர். அழகான இயற்கைச் சுழலில் அமைந்திருக்கும் இப்பாடசாலை இரண்டு மாடிக்கட்டிடத்தில் நடைபெறுகின்றது. பாடசாலையைத் திரு. ஆறு திருமுருகன் தலைமையில் சிவபூமி அறக்கட்டளைப் பணிப்பாளர் சபை ஒன்று நிருவகித்து வருகின்றது.

மீண்டும் ஒருமுறை 18.11.2009 புதன்கிழமை சிவபூமிப் பிள்ளைகளைப் பார்க்கச் சென்றிருந்தோம். முதற் சென்றதிலும் அதிக நேரம் பிள்ளைகளுடன் பழகமுடிந்தது. ஒரு கட்டத்தில் ஆசிரியரின் ஏற்பாட்டில் பிள்ளைகள் சிலர் தாங்கள் கற்ற பாடல்களைப் பாடிக்காட்டினர். இன்னும் சிலர் பாடலுக்கு நடனங்கள் ஆடிக் காட்டினர்.

மாணவர் ஒருவர் நடனம் ஆடிக் காட்டுகின்றார்.

வாழ முடியாதவர்களென வழக்கமாகப் பொதுமக்களால் புறக்கணிக்கப்படும் வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு வாழ்வளிக்க மேற்கொள்ளும் முயற்சியானது கருணை, இரக்கம், பொறுமை, மனிதாபிமானம் ஆகிய நற்பண்புகளின் அடிப்படையிற் சிறப்புற நடைபெறுவதைக் கண்டு மகிழ்ந்து நன்கொடையும் வழங்கிப் பாராட்டினோம்.

பிள்ளைகளின் கலையாற்றலைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்தது, கண்களும் கலங்கின.


### Theatre Hora

அரியவர் அரங்கத்தை முன்னிலைப்படுத்திய பெருமை சுவிஸ் நாட்டு Theatre Hora வுக்குரியது. இவ்வரங்கம் இக்காலத்தில் அரியவர்களுக்கென்றே நடத்தப்படுகின்றது. 1993ஆம் ஆண்டிலிருந்து மரபுக் கலைஞருடன் சேர்த்து அரியவரையும் இவ்வரங்கம் நடிக்க வைத்தது. ஆனால் 2012முதல் Disabled Theatre என்ற பெயரில் முழுமையாக அரியவர்களை வைத்தே



**கவிஞர் வி. கந்தவனம்**

**தொடர்ச்சி 31ஆம் பக்கம்**

# BASEMENT RENT

**MIDLAND & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, tamil stores, school, mall. Small family or couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.817.6575**

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, Tamil stores, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.904.7212**

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Students or working ladies preferred.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

**MCCOWAN & 16TH AVE.**
2 Bedroom bsmt for rent. Close to Babu catering, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **647.274.0944**

**NEILSON & SHEPPARD**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, laundry, parking. Close to TTC, school, mall, hospital. Avail. immediately.
**416.284.4717 / 647.857.8011**

**ORTON PARK & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
**416.701.0667 / 647.928.0667**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom or 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 01, 2015.
தொடர்புகளுக்கு: **416.505.4449**

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, school, mall, YRT. No smoking & no pets. Avail. immediately.
**905.471.7667 / 647.338.9631**

**WESTNEY & ROSSLAND**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.501.4720**

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, sep. laundry. Close to TTC, Era super market. Avail. immediately.
**416.292.5871 / 647.868.5871**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.885.1033**

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. parking, laundry. Avail. June 01, 2015.
**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. May 15, 2015.
தொடர்புகளுக்கு: **647.783.9315**

**FINCH & STAINES**
2 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. June o1, 2015. **416.201.1222 / 416.299.4895**

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Convenient location. Close to all facilities. Sep. entrance, parking.
தொடர்புகளுக்கு: **416.264.3899**

**OLD FINCH & MORNINGSIDE**
3 Bedroom bsmt apt. for rent. Parking, cable, laundry. Close to school, mall, TTC, library, University Of Toronto. No pets & No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.388.5295 / 416.724.7653 / 416.877.6277**

**WARDEN & FINCH**
Big bright rooms for rent. Sep. entrance, parking, laundry, internet. Full furnished. Close to all facilties. Avail. immediately.
40 வயதுக்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது.
**647.391.4637 / 647.500.6210**

**MIDDLEFIELD & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.266.8093**

**MORNINGSIDE & MORNINGVIEW**
Newly renovated 1 bedroom walkout bsmt for rent. living room, laundry, cable, parking. Utilities included. Close to TTC. Avail. immediately. தொடர்புகளுக்கு:
**416.666.9076 / 647.348.4286**

**VICTORIAPARK & LAWRENCE**
1 Bedroom for rent in a main floor. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, temple, school. Avail. immediately.
**416.288.9575 / 647.866.9575**

**MCCOWAN & 16TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
**416.670.7436 / 416.721.9709**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, mall, stores, school.
தொடர்புகளுக்கு: **416.724.8084**

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Couple or ladies preferred. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **416.903.2437**

**MORNINGSIDE & SHEPPARD**
Newly renovated One bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. May 01, 2015.
தொடர்புகளுக்கு: **416.264.0582**

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **416.567.6266**

**MCLEVIN & MORNINGSIDE**
Big 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.286.2208 / 647.632.2280**

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.564.4200**

**OASIS & STAINES**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to school, mall, park. Avail. immediately.
**416.298.2978 / 416.358.0090**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, park- ing, laundry. Close to TTC, bank, school. Avail. immediately.
**647.909.0475 / 416.800.6404**

**MIDDLEFIELD & ELSON**
Newly renovated 2 bedroom bsmt for rent. Hardwood floor. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall, Spiceland. Avail. immediately. No smoking & No pets.
தொடர்புகளுக்கு: **647.505.7951**

**KENNEDY & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Laundry, cable. Close to TTC, banks, mall. Ladies preferred.
**416.786.3332 / 647.3484427**

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to Subway, TTC, walking clinic. No pets & No smoking. Avail. May 01, 2015.
தொடர்புகளுக்கு: **416.755.1334 / 416.272.8754 / 647.621.5467**

**BRIMLEY & MCNICOLL**
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.499.3273 / 647.762.6652**

**MARKHAM & LAWRENCE**
1 Big bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, parking, laundry, internet. Close to TTC, mall. Avail. immediately.
**416.438.2552 / 647.853.5524**

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **647.523.8813**

**MORNINGSIDE & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, high school, Scarborough Campus. Avail. immediately.
**647.771.6756 / 647.559.0560**

**TAPSCOTT & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.833.5488**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. 1 Bedroom also avail. in main floor.
தொடர்புகளுக்கு: **416.284.0475**

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.258.7816**

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.899.9351**

**LAWRENCE & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Utility included. Close to TTC, mall, school. Avail. May 01, 2015. Small family preferred.
**647.262.0490 / 647.344.5450**

**BRIMLEY & EGLINTON**
2 + 1 Bedroom bsmt for rent. 2 Washroom, sep.entrance, parking, laundry. Close to TTC, tamil stores, bank. No pets & No smoking. Avail. immediately.
**416.473.2988 / 647.707.1528**

**PHARMACY & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Avail. immediately. Close to all facilities.
**416.201.1222 / 416.299.4895**

**BRIMLEY & STEELES**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**647.760.0469 / 647.701.8681**

**DANFORTH RD. & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, washroom, living room. Close to school, hospital, shopping, 24hrs. TTC.
தொடர்புகளுக்கு: **416.431.7570**

**MEADOWVALE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, University. Avail. immediately. Couple preferred.
தொடர்புகளுக்கு: **416.721.7750**

**MORNINGVIEW & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. Couple with one child preferred.
தொடர்புகளுக்கு: **647.836.2849**

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, laundry. Close to school, mall & bus. Couple or Ladies preferred. Avail. immediately.
**905.554.8773 / 416.562.4238**

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**905.201.7036 / 647.270.0519**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
**647.349.0938 / 647.741.5335**

**FINCH & TAPSCOTT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking. Close to TTC, school. 1 Bedroom also avail.
தொடர்புகளுக்கு: **416.726.4186**

**BIRCHMOUNT & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately. Single person or boys preferred.
தொடர்புகளுக்கு: **416.899.9199**

மேலும் பக்கங்கள் 27, 29

## BASEMENT RENT

***BRIMLEY & EGLINTON***
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities.
தொடர்புகளுக்கு: ***416.520.5432***

***MARKHAM & DENISON***
1 bedroom for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, YRT, Mall & school. Avail. immediately.
1 Bedroom also avail in main floor.
தொடர்புகளுக்கு: ***647.339.1062***

***MORNINGSIDE & STAINES***
1 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC & etc. Avail. immediately. Single family preferred.
***416.284.0712 / 416.906.5353***

***BASEMENT & ROOMS FOR RENT ETOBICOKE***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Bedroom also rent in main floor. Close to Humber College & all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: ***416.318.4681***

## ROOM FOR RENT

***VICTORIAPARK & ELLESMERE***
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
***647.713.6268 647.860.0069***

***VICTORIAPARK & ELLESMERE***
1 Bedroom for rent. Parking, laundry. Close to TTC, HWY 401, mall. Avail. immediately.
***416.291.3153 / 647.740.3717***

***BELLAMY & LAWRENCE***
1 Bedroom for rent in a house. Close to all facilities. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: ***416.318.4844***

***SHEPPARD & MIDLAND***
1 Bedroom for rent. Laundry. Close all facilities. Avail. immediately.
***416.266.4789 / 416.980.5697***

***FINCH & MIDDLEFIELD***
1 Bedroom for rent in a bsmt. Sep. washroom. Single person preferred. Kitchen available for light cooking.
Close to all facilities.
தொடர்புகளுக்கு: ***416.493.0590***

***BRIMLEY & FINCH***
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
Girls preferred. Rent $450.
தொடர்புகளுக்கு: ***647.896.1454***

***MORNINGSIDE & SEWELLS***
Morningview Trail இல் 4 அறைகள் கொண்ட வீட்டில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Washroom, kitchen must be shared. Female preferred. Close to ttc - 131 bus, school, etc.
தொடர்புகளுக்கு: ***416.805.8791.***

***KENNEDY & ELLESMERE***
இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உனடியாக வாடகைக்கு உண்டு . All utilities included. Laundry. Close to Highland Farm, TTC, school,Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
***416.291.6667 / 416.895.8111***

## ROOM FOR RENT

***PHARMACY & LAWRENCE***
அறை வாடகைக்கு உண்டு. மிகுதி பேசி தீர்மானிக்கப்படும். மேலதிக தொடர்புகளுக்கு பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை பதிவு செய்யவும்.
தொடர்புகளுக்கு: ***416.759.7016***

***MCCOWAN & ELLESMERE***
1 Bedroom for rent in a bsmt. Close to all facilities. . Avail. immediately. Ladies or seniors preferred. ***416.522.3314 / 416.298.9058 / 416.970.3561***

***KENNEDY & ELLESMERE***
Rooms available. Close to Kennedy Station, TTC, school, mall. Avail. immediately.
3 Bedroom house also available.
தொடர்புகளுக்கு: ***416.830.5560***

***9TH LINE & 14TH AVE. MIDDLEFIELD & DENISON***
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
***905.554.5810 / 416.648.1987***

***BIRCHMOUNT & FINCH***
2 Separate rooms with 2 separate washrooms for rent. Parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***416.890.5267***

***SCAR.GOLF CLUB & ELLESMERE***
2 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: ***416.836.7760***

***MARKHAM & SHEPPARD***
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall... தொடர்புகளுக்கு:
***416.335.5242 / 647.993.4343***

## HOUSE FOR RENT

***MARKHAM & LAWRENCE***
4 Bedroom house for rent. Parking laundry. அறைகள் தனித்தனியாக வழங்கப்படும். Close to TTC, banks, schools.
***416.609.0349 / 647.338.4567***

***BRIMLEY & FINCH***
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. May 15, 2015.
1 Bedroom bsmt also avail.
***416.298.0134 / 647.449.7709***

***MIDDLEFIELD & PASSMORE MARKHAM & LAWRENCE***
3 Bedroom bungalow house for rent. Close to all facilities. 3 Bedroom semi detached house also for rent.
தொடர்புகளுக்கு: ***416.566.3224***

***MEADOWVALE & ELLESMERE***
3 Bedroom + 3 bedroom bsmt for rent. parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***416.560.4152***

***MARKHAM & ELLESMERE***
4 Bedroom house for rent. 2 Full washroom, parking, laundry. Close to Centennial college, Mall. Avail. May 01, 2015. Family or students preferred.
தொடர்புகளுக்கு: ***416.857.4166***

## HOUSE FOR RENT

***MIDDLEFIELD & ELSON***
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Hard wood floor. Avail. June 01, 2105. Rent $1350 + utilities.
***416.717.8979 / 905.471.7331***

***MARKHAM & LAWRENCE***
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. May 01, 2015.
தொடர்புகளுக்கு: ***416.627.6194***

***HWY 401 & BROCK***
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***416.671.5552***

***VICTORIAPARK & HWY 401***
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
***416.989.6880 / 416.802.9040***

***AUDLEY RD & ROSSLAND RD (AJAX)***
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Rent $1500 + utilities.
தொடர்புகளுக்கு: ***416.836.0074***

***MCCOWAN & FINCH***
3 + 3 Bedroom house for rent. Finished bsmt, 3 washrooms. Close to all facilities.
தொடர்புகளுக்கு: ***416.843.0646***

***BELLAMY & LAWRENCE***
2 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. May 01, 2015
***647.284.0480 / 647.343.6952 / 647.622.9570***

***NEILSON & SHEPPARD***
3 Bedroom house for rent. Parking. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: ***416.904.8578***

***MARKHAM & STEELES***
3 Bedroom house for rent.Parking, laundry. Close to all facilities. Rent $1,400. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***416.735.5623***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## CONDO. FOR RENT

***KENNEDY & HWY 401***
2 Bedroom + den condo. for rent. Parking, indoor pool, laundry. Close to all facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: ***416.495.9775***

## CONDO FOR SALE

***EGLINTON & MIDLAND***
3 Bedroom condo. for sale. 2 Washrooms. 1300sq.ft. Fully renovated. Close to Kennedy Subway.
தொடர்புகளுக்கு: ***416.722.7217***

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் 5 3/4 பரப்பில் 3,500 சதுர அடி வீடு விற்பனைக்கு உள்ளது. புகையிரத நிலையம், நீதிமன்றம், வங்கிகள், மார்க்கெட், மகளிர் கல்லூரி என்பன அருகில் உள்ளன. மே 5க்கு பின் தொடர்பு கொள்ளவும்.
***781.932.9842 / 94.11.236.3707***

## HOUSE FOR SALE

***FINCH & MORNINGSIDE***
3 Bedroom 2 storey detached house for sale. 2 washroos. Finished basement. Close to all facilities. Price $389,900. Why pay rent. When you can own.

***9th Line & HWY 7***
3 bedroom Town House for sale. Finished bsmt. Avail. immediately. Close to all facilities. Price $475,900.

***PICKERING***
4 bedroom Town House for sale. Finished bsmt. Avail. immediately. Close to all facilities. Price $325,000.
தொடர்புகளுக்கு: ***416.917.0557***
***Rajah Masillamany***
***(HomeLife / Future Realty Inc.)***

## வீடு வாடகைக்கு கொடுத்திட /பெற்றிட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட அழையுங்கள்: ***647.402.2937***

மேலும் பக்கங்கள் 26, 29

## BASEMENT வாடகைக்கு உண்டு

## BRIMLEY & EGLINTON

***May/June 2015*** இல் ***BSMT*** தயாராக உள்ளது.
***Srilankan Stores, TTC*** அண்மையில் உள்ளன.
தொடர்புகளுக்கு: ***905.428.7887***

## BASEMENT FOR RENT

2 Bedroom bsmt for rent @ ***Middlefield & Elson***. Closed to public transit, shopping, Catholic & public schools & all amenities.

***Contact: 416.857.9773***

# வாஸ்து GIFT STORE

**4465 SHEPPARD AVE.E, UNIT# 23**

(Sheppard / Brimley)

Toronto Business College அமைந்துள்ள Plaza)

# WEEKEND CLEARANCE SALE!

**TEL. 647-847-7651**



இவ்வாரம் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்
**50%** நேரடி கழிவு விலைகளில் தரமான பொருட்களை எம்மிடம்
அதிவிசேஷ விலையில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.



**வார நாட்களில் மலிவு விற்பனை இடம்பெற மாட்டாது**

* தங்கநிற குபேரன் அன்பளிப்புப் பொருட்கள் * முதுகுவலி நீங்க மெத்தைப் பாய்
* நறுமண வாசனைப் பத்திகள், தசாங்கம் வகை
* பன்னீர், விபூதி, சந்தனம், குங்குமம், விளக்குத்திரி $1.00 தொடக்கம்
* 8 முழம் வேட்டி வகைகள் $7.49, $12.49, $14.99 (சால்வையுடன்)
* Quality சாரம், ஜோர்ஜட் சேலைகள், பட்டுவேட்டிகள், சிறிய சிறிய அன்பளிப்புப் பொருட்கள் (Function Gift Items) * உருத்ராட்சை, ஸ்படிகம், சாலிக்கிராம், யானை மயிர், முத்து, பவளம், துளசி, சந்தன மாலைகள் மற்றும் சக்தி வாய்ந்த ஆன்மீகப் பொருட்கள்
* வீட்டில் இருக்க வேண்டிய கண் திருஷ்டிப் படம் அதிர்ஷ்டம் உருவாக்கும் வாஸ்துப் பொருட்கள்

**50% - 75 % OFF** விலைகளில்

பெண்களுக்கு (For Ladies) இந்தோனேஷியன் Kaftan பற்றிக் கவுண் விதம் விதமாக ~~$15.00~~ $7.99 $8.99

Cotton Ladies Pantys Each ~~$2.00~~ $1.00

Key Tags 4 For $1.99

**SPECIAL SPECIAL SPECIAL**

* வீடு குடிபுகல், புதிய தொழில் தொடங்க சுவாமிப் படங்கள்
* அதிர்ஷ்ட மூங்கில் Jade மரங்கள்
* சீக்குவன்ஸ் துணிப்படங்கள்
* மரத்தில் யானைகள் (Wooden Elephants)
* பக்திப் பாடல்கள், மந்திரங்கள், சுபீட்ச பஞ்சதீப விளக்கெண்ணெய்
* பூஜைப் பெருட்கள்
* பொன்னாடைகள்

பொருட்கள் வாங்கும்போது தரப்படும் FREE VOUCHER COUPON ஐ மறவாது கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள்

Carகளுக்குத் தொங்கவிடும் விதம் விதமான Car Hangings எம்மிடம் உண்டு. (Retail & Wholesale) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொகையாக Wholesaleல் எமது நிறுவனத்தில் பொருட்களைப் பெற்றுப் பணத்தை மிச்சப்படுத்தி பெரும் பயன் அடைய எம்மை எப்போதும் தொடர்பு கொள்ளுங்கள்.

பொருட்கள் விற்பனை செய்யப்படும் தெரிவுகளை வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் நேரில் பார்த்து வாங்கிட விரைந்து வருக!

### ONE ON ONE MATH TUITION

**WARDEN & FINCH**

***(From Grade 4 to Grade 12)***

An experienced former high school math teacher offer tuition individually in all school math courses including Calculus, Functions, Advanced functions, Vectors & Data Management. ***P. Wijayaratnam B.Sc.***

தொடர்புகளுக்கு: ***647.227.6920***

## TUITION

An experienced Graduate tutor for Grade 5 to Grade 10. Math & Science. வீட்டிற்கு வந்தும் குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படும். Grade 11 & 12 math. College University math short course (computer , English). Guna Master: *647.834.7358* / atgunam@yahoo.ca

### STORE FOR SALE

***GATEWAY NEWSTAND***

TTC Location with lotto booth.
Wellesley Subway.

***416.961.9771 / 416.431.9567***

### திருமண சேவை

மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.

***647.556.4114 / 416.992.8782***

### பழைய பொருட்கள் தேவை

பழைய இரும்பு பொருட்கள், Door, Compurter, fridge, stove, தொலைக்காட்சி பெட்டி, மற்றும் வேறு பல பொருட்கள் நீங்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: ***647.835.5244***

### வாகன போக்குவரத்து சேவை

ஸ்காபரோவில் இருந்து வெஸ்ரன் யூனிவேசிற்றி மற்றும் உள்ளூர் பயணங்கள், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் விமான நிலைய சேவை போன்றவற்றிற்கான வாகனப் போக்குவரத்து சேவையைப் பெற்றிட

அழையுங்கள்: ***416.880.5952***

### தையல் வகுப்புக்கள்
### தையல் *Orders*

***MARKHAM & LAWRENCE***

Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.

***416.438.2552 / 647.853.5524***

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:***905.492.0259***

### புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிகத் தரமான புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு.



- சிறியது $3
- நடுத்தரம் $4
- பெரியது $5

*வரி கட்டப்பட்டது*

தொடர்புகளுக்கு: **647.629.9095**

மேலும் பக்கங்கள் 26, 27

## FOR SALE

Auto + Industrial

***REXDALE & KIPLING***

3200 sf FREEHOLD Large lot-Det.Build-Auto+Body Shop+Used Car+Ind - $799,000.

***MR. BAIDYA: 416.491.4002***

Sales Rep.,
RE/MAX Crossroads Realty Inc., Brokerage

### பராமரிப்புச் சேவை

மகப்பேறு பராமரிப்பதற்கும், வயது போனவர்களைப் பராமரிப்பதற்கும் உதவியாளர் தேவையாயின் அழையுங்கள்.

தொடர்புகளுக்கு: ***416.919.1431***

## MOVING

26Ft. Truck with driver. $50 + $10 per hour.

தொடர்புகளுக்கு: ***416.318.4844***

## CAR FOR SALE

One owner Toyota Corolla CE 2010 with 39000km is for sale.

***416.493.6126 / 416.276.6224***

## JOB JOB JOB

### *GRAPHIC DESIGNER* தேவை

GTA Square இல் உள்ள printing shop ஒன்றிற்கு Graphic Designer தேவை.
Should work with adobe illustrator.

தொடர்புகளுக்கு: ***416.438.3133***

### *JOB! JOB! JOB!*

***MORNINGSIDE & OLD FINCH***

உங்கள் குழந்தைகளை அன்பாகவும், கவனமாகவும் பராமரிக்க வேண்டுமா? மற்றும் பாடசாலை கூட்டிச் செல்லவும், கூட்டிக் கொண்டு வந்து விடவும் அழையுங்கள்.

***647.769.2816 / 416.431.2816***

### *JOB! JOB! JOB!*

English speaking Tamil people needed to work in motels in the USA. Single or couple needed urgently. Free accommodation and good salary will be provided. A good summer vacation and cultural experience of the real best for college students. ***Contact: 732.485.0958***

### *CERTIFIED MALE PSW AVAILABLE*

PSW வேலை புரியும் ஒருவரிடம் இருந்து உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினருக்கோ பராமரிப்பு தேவை என்றால் உடனடியாக அழைக்கவும்.

***416.288.9575 / 647.866.9575***

### பெண் பராமரிப்பாளர் தேவை

சக்கர நாற்காலியில் (Wheel Chair) நடமாடும் வயது முதிர்ந்த பெண்மணி ஒருவரைப் பராமரிப்பதற்கு பொறுப்புள்ள பெண் உதவியாளர் ஒருவர் தேவை. வீட்டில் இருந்து பராமரிப்பதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: ***416.587.7267***

## TUITION CLASSES

Gr. 3 - Gr.12, College & University Math, Science, English, Functions Calculus & Vectors, Data, physics, Chemistry & Biology.

***University preparation class.***

***Calculus 1 &2, Linear Algebra, Statics & Dynamics, Mechanics, Physics, Chemistry.***

***Ruban Master: 416.817.8226***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT & HOUSE FOR RENT

***MARKHAM & DENISON***

Brand new 1 bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, school, mall. Couple preferred. Avail. June 01, 2015
4 bedroom town house for rent. 2 Full washrooms. Avail. June 01, 2015

***Haran Thangavadivel*** (Sales Representative)

***HomeLife / Future Realty Inc, Brokerage****

***Contact: 416.880.4829***

## JOB JOB JOB

### MCCOWAN & SHEPPARD

***Wood Company*** ஒன்றிற்கு ***Stairs*** செய்வதற்கும் மற்றும் ஆசாரி வேலை தெரிந்த ஒருவரும் வேலைக்கு தேவை. 8:30 AM - 5:30AM வரையும். அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: ***416.830.3932***

## JOB JOB JOB

### MARKHAM & STEELES

Sri Lankan & South Indian தமிழ் உணவகம் ஒன்றிற்கு Cook, Kitchen help, Customer Serviceக்கு ஆட்கள் தேவை. Part-time or full-time. ஆண் பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: **416.879.4190**

### உணவகத்திற்கான உபகரணங்கள் விற்பனைக்கு

### *RESTAURANT EQUIPMENTS FOR SALE*

- *4 Well Steam Table*
- *Prep Table*
- *Cheese Warmer*
- *Resident Fridge*
- *Canon Colour Printer*
- *3 Compartment Sink*
- *Hot Dog Roller*
- *Resident Stove*
- *Snack Vending Machine*
- *Menu Covers & More*
- *Pizza Warmer*
- *Resident Freezer*
- *Cash Register*
- *Conveyor Toaster*

மேலும் பல பொருட்கள்...

அழையுங்கள் : ***416.918.6453***

### வேலை வாய்ப்புக்கள்

கனடாவுக்கு வெளியில் உள்ளவர்களுக்கு மட்டும்.

நீங்கள் கல்வி, தொழிலில் தகுதியும், அனுபவமும் உடையவர்களா? அப்படியானால் நீங்களும் கனடா வரலாம். உங்களின் தகுதிக்கு அமையக் கூடிய வேலை வாய்ப்பை சரியான நிறுவனங்களில் இருந்து சகல சட்ட விதி முறைகளுக்கும் அமைய ஒப்பந்தங்களுடன் ஒழுங்கு செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: ***647.478.9510***

### *COMMERCIAL UNITS FOR SALE*

Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable. Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss) ***Pl. call: 416.315.9397***

### வீடு காணி விற்பனைக்கு

A9 வீதிக்கு அருகாமையில் A.P.Cக்கு அருகாமையில் மீசாலை வடக்கு கொடிகாமத்தில் உள்ள காணியும், வீடு வளவும், மீசாலை வடக்கு பூதராயக் கோயிலடி காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:

***647.786.5476 / 077.747.1182***

### உடனடி வாடகைக்கு

2BR பேஸ்மெண்ட்சுகள் உடனடி வாடகைக்கு உண்டு.

மேலும் வீடுகள், கொண்டோக்கள் விற்க. வாங்க,வாடகைக்கு விட. வாடகைக்கு பெற்றுக்கொள்ள

அழையுங்கள்

**Jey 416-816-9011**

## நடந்தது உங்களிற்கும் நடக்கலாம்

அநாமதேயத் தொலைபேசி (Unknown) குறிப்பிட்ட நபரின் பெயரிற்கு வந்தது. சில மணிநேரங்களிற்குள் Revenue Canada இற்கு திருப்பி கூப்பிடும்படி கூறப்பட்டது. இந்த தொலைபேசியின் இந்தப்பக்கத்தில் இருந்தவர் மிகவும் சாமத்தியமானவர். தொடர்ந்து சில வினாக்களை தந்திரமாகக் கேட்க, மற்ற பக்கத்தில் இருந்தவர் தனது தொலைபேசி தொடர்பை துண்டித்து விட்டார். இதேமாதிரியான தொலைபேசிகள் உங்களிற்கும் வரலாம். மிகவும் கவனமாக இருந்தால் நல்லது. உங்களுடைய பிறந்ததிகதி, Social Insuracne Number, வீட்டு முகவரி என்பவற்றை மற்றவர்களுக்கு கொடுப்பது தவிர்க்கப்படல் வேண்டும். கவனம் தேவை.

- விளம்பரம் காரியாலத்திற்கு தெரிவிக்கப்பட்ட தகவல்

# பத்திரகாளி சோதிட நிலையம்

# BADRAKALLI ASTROLOGY CENTER




## Pandit Sri Hanuman

Kerala (Choddankiri)

# 416.846.2798

## 100% Guaranteed Result



The Pandith can read the Past, Present & Future by Hand prediction, name, date of birth relating to love, education, marriage, money. I will help in all problems and work with god and holy spirit. Are you suffering in silence and nobody knows your pain or sorrow, but you and god know. Well you are not alone, the holy spirit will guide you tome and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealously and black magic permanently with superior strength & holy given power to protect to you and your family from evil things.

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit Sri Hanuman** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்.

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல் கட்டப்படும்.

- கைரேகை
- நாம நட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- பெண் பிள்ளைகள் – பெற்றார் பிரச்சனைகள்
- திருமணயோகம்
- குழந்தை பாக்கியம்
- கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு, நாவூறு
- சர்ப்பதோஷம்
- கர்ப்பதோஷம்
- கஷ்ட – நஷ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்றுகூடுதல்

- Business Investments
- Jealousy
- Childless Couples
- Depression
- Worries About Loved Ones
- Enemy Problems
- Money Problems
- Sexual Problems
- Love Problems
- House Protection
- Work Problems
- Money Blessing
- Family Arguments
- Drinking Problems

பிளாக் மெஜிக் அகற்றி பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

**5215 Finch Ave. East, Unit #257, Upstairs, Scarborough ON M1S 0C2**

**GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)**

# அன்னையர் தினம்




பத்து மாதம் பாங்குறத் தாங்கினாள்
பத்திரமாய் பகலிரவாய்ப் பாங்கோடு காத்தாள்
நொந்து உடல் நொடிந்து பெற்றாளே!
எந்தத் துன்பமும் எட்டாது காத்தாளே!
பாலமுது பக்குவமாய்ப் பரிந்து ஊட்டி
பாலகன் என்னைப் பரிவோடு பார்த்தவரே
பால்நிற நிலவைப் பார்க்கச் சொல்லி
செல்லமாய்ப் பாலும் சோறும் ஊட்டினாளே!
பாசத்தைப் பாகாய்ப் பகிர்ந்த அன்னையின்
நேசத்தை எப்படி நினைக்காமல் இருப்பேன்.
அம்மா என்றால் அன்பெனும் அர்த்தத்தை
சும்மா தந்தாயா சொத்தையில் எனக்கு
பந்தங்கள் நூறு பக்கத்தில் இருந்தாலும்
சொந்தங்கள் நீயென்று சொல்வேனே அம்மா
பள்ளிக்கு அனுப்பி படிப்பித்த உனக்கு
கொள்ளிக்குக் கூட கொடுப்பனவு இல்லை
காலம் எல்லாம் கடமை செய்தாலும்
ஓலமிட்டு அழுதாலும் ஓயாது என்துன்பம்
கண்ணீரை உமக்குக் காணிக்கை ஆக்கி
தண்ணீரில் மூழ்கி தர்ப்பணம் செய்வேனே!



**- மார்க்கம் சந்திரன்**

# அரியவர்...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிக்கைசெய்து வருகின்றது. புகழ்பெற்ற பிரான்சு நாட்டு நடன அமைப்பாளர் Jerome Bel என்பவர் அரியவர் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக இருந்தார்.

அரியவர் அரங்கத்தின் முதல் காட்சி 2012 பிரசல்ஸ் நகரில் நடத்தப்பெற்றது. எனினும் அதே ஆண்டில் யேமனியில் நடந்த கலை விழாவில் அரியவர் அரங்கத்துக்குப் பெரு அங்கீகாரம் கிடைத்ததைத் தொடர்ந்து, அரியவர் காட்சிகள் உலகின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 150க்கும் அதிகமான அரங்கங்களில் அரியவர் ஆடியிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நாம் பார்த்த அரியவர் நிகழ்ச்சிகள் முறையான அரங்கத்தில் நடத்தப்படவில்லை. எமக்காக எழுந்தமானத்தில் ஒரு மண்டபத்தில் அவை ஒழுங்குசெய்யப்பட்டன என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

Jerome Bel அவர்களது ஆரம்பகால நடன அமைப்புகளும் முறைசாராப் பாங்கிலேயே இருந்தன. அதனால் அவை பலரைக் குழப்பமடையவும் வைத்தது. அவரது முறையில் நடிகர் ஒவ்வொருவராக வந்து தங்களைப் பற்றியே பேசுவர். போகப்போக அவர்களது பேச்சு, தமது இயலாமை மற்றும் நோய்கள் பற்றியதாக மாறும். பேச்சு அவர்களது தாய்மொழியாகிய சுவிஸ் யேமனில் இருப்பதால், காட்சி வேகத்தைச் சிலசமயங்களில் மொழிபெயர்ப்புத் தடங்கல் செய்வதுமுண்டு.

அரியவர் அரங்கம் நடிகரின் அனுபவங்களை வெளிப்படுத்துவதை இலக்காகக் கொண்டது.

இப்பொழுதெல்லாம் Jerome Bel இன் பாணி பலருக்கும் விளங்கக்கூடியதாக உள்ளது. அவற்றைப் பார்க்கும் அவையினர் உணர்ச்சிவயப்பட்டுக் கண்ணீரும் வடிக்கின்றனர்.

அண்மையில் ஒன்ராறியோவில் முகத்துவார மையத்தில் (Harbourfront Centre) ஹோரா அரங்க அரியவர் தொடர்ந்து நான்கு நாட்கள் தங்கள் கலைவண்ணத்தை அவையோருக்கு அளிக்கை செய்து பாராட்டுக்களைப் பெற்றிருக்கின்றனர். பார்க்கப்படவேண்டிய காட்சி என்று பலரும் பரிந்துரை செய்துள்ளனர்.

**Computek College**
BUSINESS - HEALTH CARE - TECHNOLOGY
Registered as a private career college under the Private Career Colleges Act, 2005

Enroll in a Diploma Course and receive a




(Offer valid until March 31st- Some conditions apply)


Markham Campus Students receiving Free Laptops


Scarborough Campus Students receiving Free Laptops


Toronto Campus Students receiving Free Laptops

CCNA
Saturday March 21st

CompTIA A+
Tuesday March 24th

Food Handler Exam
Saturday March 28th

Computer Repair & Assembly for Highschool Students
March 25th

Call NOW to Register! 416.321.9911

**DIPLOMA COURSES**

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Network Engineering | 35 wks |
| Personal Support Worker | 32 wks |
| Medical Office Admin | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

**PART-TIME COURSES* (WEEKEND / EVENING)**

Bank Teller, MS Office
Food Handler, Food Service Worker
AccPac, Simply Accounting, Quick books
Exam Prep: A+, MCSA, MCSE
ICDN 1, ICDN 2, Canadian Securities Course
C/C++, C#, Java, VB.net, HTML, SQL
Medical Coding & Billing
CPR & First Aid

* These programs do not require approval under the Private Career Colleges Act, 2005

WWW.COMPUTEK.EDU

Financial assistance may be available for those who qualify

Toronto Campus
301-2347, Kennedy Rd
(Kennedy/Sheppard)
416-321-9911

Markham Campus
202 - 7 Eastvale Drive
(Markham / Steeles)
905-471-3344

Scarborough Campus
248-2390 Eglinton Ave E
Kennedy/Eglinton)
416-285-9941


வாகன MOTOR VEHICLE
விபத்து ACCIDENT
SKT PARALEGAL SERVICE
CRIMINAL MATTERS
SUMMARY
416.803.5296
Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்
SK THEESAN
TRAFFIC TICKETS
LICENSED PARALEGAL
sktheesan@gmail.com
MOTOR VEHICLE ACCIDENT
SERIOUSLY INJURED ?
ACCIDENT BENEFITS
PERSONAL INJURY
TRAFFIC TICKETS
DON'T
MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS
CRIMINAL CONVICTION
PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP
CRIME
CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE



கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது!
HOMELIFE
Seelan Siva Real Estate
Buy, Sell, Invest
Direct: 416.999.3555
Direct: 416.451.0271
Uthayan Aiyadurai
Sales Representaive
email:aiya14@gmail.com
"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"
Seelan Siva Aiyadurai
Real Estate Broker
email: seelansiva@gmail.com
web:www.egtahomes.com
$149000
Pharmacy/Finch
2 Bedroom 1 washrooms Condominium
Great Location!!!
$199,900
in Entrance
Middlefield/Finch
Unbelievable Price In Gta!!!,
Good for investors or own use of
any business
$649,000
Lawrence Ave/Beechgrove
Lot size 85x200
Gorgeous 3+3 Bed, 2 Bath!
Hardwood floor, separate entrance
$1,388,000
Bathurst/Bloomington
4 Bedroom5 washrooms,
Absolutely Stunning Property
3175Sf (Per Builder), A Private Street,
Corner, Cul-De-Sac, Ravine Lot
HOMELIFE/GTA Realty Inc.
Brokerage*
Bus:(416)321-6969
5215 Finch Ave. E, Suite 203, Toronto, ON M1S-0C2
This is not intended to solicit properties currently listed for sale.
*Independently Owned and Operated
*Some Conditions Apply

# பறவையின் சேமிப்பு

பறவை ஒன்று காட்டில் வாழ்ந்து வந்தது. அந்த இனப் பறவைகள் பனிக் காலத்திற்கு தெற்கே செல்வதில்லை. அவை கோடை காலத்தின் போது உணவு சேகரித்து பனிக்காலத்தில் மரத்தில் தமது கூட்டில் இருந்து கொண்டு உண்பவை.

ஆனால் இந்தப் பறவை 'இப்போது கோடைகாலம், பனிக்காலத்திற்கு இன்னும் எவ்வளவோ நாட்கள் இருக்கிறது தானே, இலை உதிர் காலத்தில் உணவைச் சேர்க்கலாம்!' என்று கூறிக்கொண்டு பொழுதைப் போக்கியது. கோடைகாலமும் ஒருவாறு முடிவடைந்தது. இலை உதிர்காலம் தொடங்கிய பொழுது மரங்களின் இலைகள் எல்லாம் நிறம் மாறத் தொடங்கின. சரி என்று ஒரு நாள் பறவை உணவு தேடத் தொடங்கியது. அதுவும் ஓரளவு உணவு சேர்த்து விட்டது. பலவித பழங்கள், விதைகள் எல்லாம் சேர்த்து வைத்தது.

பறவைக்கு விதைகள் தான் கூட விருப்பமாக இருந்தது. எனவே அது இலை உதிர் காலம் முழுவதும் பழங்களை சேர்த்து வைத்துக் கொண்டு, தினமும் விதைகளை சாப்பிட்டுக் கொண்டு வந்தது. பனிக்காலத்தில் தெற்கிற்கு செல்லாத மற்றைய மிருகங்களும் உணவை சேர்த்துக் கொண்டு இருந்ததை பறவையும்



கவனித்தது. மற்ற மிருகங்களும் மிகக் கவனமாக உணவை சேர்த்து பாதுகாப்பாக வைத்துக் கொண்டு இருந்தன.

பனிக்காலமும் வந்தது. முதல் முறை ஒருநாள் பனி பெய்த பின்னர், இரண்டாவது முறை இன்னும் சில நாட்கள் தொடர்ந்து பனி பெய்தது. மரங்களில் இலைகள் எல்லாம் விழுந்து விட்டன. நிலமும் விறைத்து இறுகிப் போனது. சரி, இனி சேர்த்து வைத்த பழங்களை உண்ணலாம் என நினைத்த பறவை, போய் உணவைப் பார்த்தால், அவை எல்லாம் பழுதாகிப் போய் இருந்தன. பறவை பழங்களை காய வைத்து பத்திரமாக வைக்கவில்லை.

திடுகிட்ட பறவைக்கு என்ன செய்வதென புரியவில்லை. அது மற்ற மிருகங்களிடம் உணவு கேட்ட பொழுது அவை 'என்னிடம் எனக்கு அளவான சாப்பாடு மட்டுமே இருக்கிறது', என்றன. கூட உணவு இருந்தவர்களிடம் பறவை சாப்பிடும் உணவு இல்லை.

'கவனமாக உணவு சேர்த்து இருந்தால், இப்பொழுது உணவு இருந்திருக்குமே' என வெறும் வயிற்றுடன் பறவை உறங்க சென்றது. திடீரென பறவை எழும்பியது. மரங்களின் இலைகளுக்கு இடையை சூரிய ஒளி தெரிந்தது. இன்னும் கோடை காலம் தான்' 'இவ்வளவும் கனவு தானா?' என பறவை சந்தோசப்பட்டது. 'ஆனால் இனி கவனமாக இருக்க வேண்டும்' என்று யோசித்த பறவை உணவை பத்திரமாக சேர்த்து வைக்கத் தொடங்கியது.

நீதி: பருவத்தே பயிர் செய்



**ஞா. ஆரணி**
அகவை 16

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

MATH **TUTORIAL 298**

**ANSWERS TO TUTORIAL 297**

1)$\lim_{X>\infty}\frac{4X-1}{\sqrt{3x^2+2}}=\frac{4X-1}{\sqrt{3x^2+2}}$ ,divide both numerator &denominator by$\sqrt{x^2}$ Then = $\frac{4-\frac{1}{x}}{\sqrt{3+\frac{2}{x^2}}}=\frac{4}{\sqrt{3}}\frac{4\sqrt{3}}{3}$

2)$\ln_{x>\infty}\frac{ln1/x}{1+ln3x}=\ln_{x>\infty}\frac{lnx^{-1}}{1+ln3+lnx}$ $=\ln_{x>\infty}\frac{-lnx}{1+ln3+lnx}$, dividing the numerator & the denominator by lnx , we have$\ln_{x>\infty}\frac{-1}{0+0+1}$=-1

3)If x=4, then put x=4 on the left side to obtain m+R=17

4)Success if no traffic in the intervals .So probability of success is 0.3. Probability of failer is 0.7. The expected waiting time $=\frac{0.7}{0.3}$ =2.3.Therefore the expected number of ten-second intervals ,waiting time =10× 2.3 = *23seconds*

5)Eqn. Of plane is vector r=(a,b,c) +s(d,e.f) +t(a,b,c) .If s=0and t= -1 r=(0,0,0) ,hence the plane passes through the origin

**TUTORIAL 298 (QUESTIONS)**

**1)A** positive integer is divisible by 24 and is comprised of 0's and 1's.If the number is as small aspossible, the number of digits in it is a)6,b)9, c)10 d)12, e)4 Give the correct number (gr 7)

2)Find the diamensions &the area of the largest rectangle having its two lower corners on the x axis and its upper corners on the parabola=16 $-x^2$ (gr12)

3)A right circular cone is inscribed in a sphere of radius 15cm.Find the dimensions of the cone that has the maximum volume(gr12)

4)By considering the angles between the vectors, show

That $\bar{a}+\bar{b}$ and $\bar{a}-\bar{b}$ are perpendiculars when $|\bar{a}|=|\bar{b}|$



By
Mr.S.F.Xavier(Teacher)

Tel 6473409490

Cell 4167322228

# EDUCATION

## Review Questions15 -9

➢ **ADV. FUNCTIONS (12)**

Determine the x- values in the interval $[0, 2\pi]$ that satisfy the inequality

$$0 < \sin x \leq \frac{\sqrt{2}}{2}$$

➢ **CHEMISTRY IB Organic**

(i) Predict whether an $E_1$ or $E_2$ mechanism proceeds when 2-chloro- 2-methyl butane undergoes β- elimination reaction.

(ii) Which of the following compounds contain stereo isomers.

(a) 2-chlorobutane (b) 2-methyl butane (c) 3-chloro – 1- iodo pentane (d) 1-chloro-2-methyl propane

## Answer Key : 15-8

➢ **PHYSICS 12**

bomber plane...(ans 30 ° to the horizontal)

➢ **PHYSICS (12)**

The distance between X and Y is 500m.

car A, v = 20m/s, $d_1$= 171m; $t_1$ = 171/20 s

when the speed is doubled ,

v = 40m/s, $d_2$= 261m, $t_2$ = 261/40 s

car B, initial speed= v m/s;

acceleration = a m/$s^2$

When it crosses each other,

First instance, $d_1$= 500-171 = 329m;

$t_1$ = 171/20 s;

Second instance, : $d_2$= 500-261 = 239m;

$t_2$ = 261/40 s;

For the motion of car B ,

Use the kinematic equation,

$\Delta d = V x \Delta t + \frac{1}{2} a \Delta t^2$

329 = Vx (171/20) + ½ a (171/20) $^2$ ......(i)

239 = Vx (261/40) + ½ a (261/40) $^2$ .......(ii)

Solve for V, (initial speed of carB)

➢ **ADVANCED FUNCTION Gr 12**

$f_{(x)}= ax^3 + bx^2 + cx + d$

$a + b + c + d = -7$ ………. (1)

$8a + 4b + 2c + d = -8a + 4b - 2c + d$ … (2)

$4a + c = 0$ …. (2)

The graph passes through origin,d=0....(3)

The graph passes through (-1,17)

$-a + b - c + d = 17$ ……. (4)

Solve for a, b, c.

➢ **CHEMISTRY 12**

X + Y → C+ P (slow)

C + Y → Q (fast)

➢ **CHEMISTRY 11**

Lets take, the balloon bursts at the height of h m.

Then the temperature

($T_2$)= [273- (0.5xh)/500]

Pressure ($P_2$) = [101.3- (1.24xh)/ 1000]

$V_2$ = 50L

$P_1V_1/ T_1 = P_2V_2/ T_2$

Substitute the values and solve or h.

➢ **BIOLOGY 11**

Viruses do not reproduce, do not have structures such as cellular membrane or cell organelles.

➢ viruses contain genes made of either DNA or RNA but not made of cells- no cell membrane, nucleus, or cytoplasm. no metabolic apparatus and do not digest, respire, and so on. can reproduce but only inside a host.

➢ **BIOLOGY Gr12**

i)Both the 5' and 3' ends are covalently modified during the mRNA synthesis before the mRNA exits the nucleus.

(ii) 5'cap – modified by addition of 7, methyl guanosine (GTP) that is added to the 5' end. The 3' end, modified by enzymatic addition of a poly-A-tail,

(Poly-A tail – sequence of about 200 adenine nucleotides) to the 3' end of mRNA before it exits the nucleus.

These modifications inhibit degradation of mRNA in the cytoplasm, may facilitate attachment to the small ribosomal subunit and may regulate protein synthesis by facilitating mRNA's export from the nucleus to the cytoplasm

(iii)In mammals, erythrocytes lose nucleus and all other cellular organelles such as their mitochondria, Golgi apparatus and endoplasmic reticulum during its maturation. As a result of not containing mitochondria, they produce the energy carrier ATP by the glycolysis.

Ans. key 15-8 - next issue

☎ 647 341 3975

K.A.Srikrishnaraj PhD

ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

'அனலைதீவு அருள்மிகு அரிகரபுத்திர ஐயனார் பாமாலை' இறுவெட்டு வெளியீட்டு விழா 18.04.2015ம் திகதி அன்று, கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சில....










# கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## வருடாந்த பொதுக்கூட்டம் - 2015

திகதி: மே 10, 2015, ஞாயிற்றுக்கிழமை

நேரம்: பிற்பகல் 3:00 மணி

இடம்: *GTA Square (Second Floor)*
*5215 Finch Ave. E., #224*
*Scarborough, ON M1S 0C2*

இக்கூட்டத்திற்கு கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அவர்களின் வாரிசுகள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் இருவாரங்களுக்கு முன்னர் பின்வரும் இலக்கங்களில் தொடர்புகொள்ளலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு:

**416.291.9956 416.299.6645**
**416.414.3327 416.296.7037**

www.vlambaram.com
www.tamilvanakkam.com

# சங்கத் தமிழ் முத்துக்கள்

## கபிலர் - பாரி நட்பு

குறுநிலமன்னர் பாரி பறம்பு மலையையும் அதில் உள்ள முந்நூறு சிற்றூர்களையும் ஆண்டு வந்தார். அங்கு வாழ்ந்த மக்களுக்கு அன்போடு உதவி, செம்மையாக ஆட்சி புரிந்தார். புலவர்களையும், பாணர்களையும், பாடுபவர்களையும், ஆடுபவர்களையும் நன்கு ஆதரித்தார். இவர் கடையெழு வள்ளல்களில் ஒருவர். முல்லைக்குத் தேர் கொடுத்தவர். வேளிர் பரம்பரையைச் சேர்ந்தவர். அதனால் "வேள் பாரி" என்று குறிக்கப்பட்டுள்ளார். புலவர் கபிலர் அவருடைய நெருங்கிய நண்பர். இவர்களுடைய அருமையான நட்பையும், கபிலருக்கு பாரியின் பறம்பு மலையின் மேல் உள்ள அன்பையும், 21 புறநானூற்றுப் பாடல்கள் (105-120, 200-202, 236, 337) மூலம் நாம் அறிகின்றோம்.

அழகிய சுனைகளையும், அருவிகளையும், மிகுந்த செழிப்பையும் உடைய பாரியின் பறம்பு மலையின் மீது படையெடுத்து வந்தனர் மூவேந்தர்கள். அவர்களிடம் சென்று, போரைக் கைவிடுமாறு வேண்டினார் பாரியின் நண்பரான கபிலர். அவர்கள் அதை மறுத்து, பாரியை ஏமாற்றி, அவரை நயவஞ்சமாகக் கொன்றுவிடுகின்றார்கள். கபிலர் ஆழ்ந்த வருத்தம் அடைகின்றார். பாரியின் இரண்டு பெண்களையும் தன் குழந்தைகளாக ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு மணமுடிக்க நினைக்கின்றார் கபிலர். இரண்டு குறுநிலமன்னர்களை அணுகி அந்த இளம் பெண்களைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுகின்றார். அவர்கள் மறுத்து விடுகின்றனர். வழிமுறையாக நமக்கு வந்த விவரத்தின்படி அந்த இளம் பெண்களை அந்தணர்களிடம் ஒப்படைத்து விட்டு வடக்கிருந்து (வடக்கு திசை நோக்கி உண்ணாமல் உயிரைப் போக்குதல்) இறந்து விடுகின்றார் கபிலர்.
இந்தக் கதைக்கு உரிய பாடல்கள் சிலவற்றை நாம் இப்பொழுது பார்க்கலாம்.

1. முல்லைக்குத் தேரைக் கொடுத்த பாரி வள்ளலை நாம் முதலில் காணலாம். சிறுபாணாற்றுப்படை என்ற சங்க நூலில், நல்லூர் நத்தத்தனார் என்ற புலவர் எழுதிய வரிகள் இவை,
சிறு வீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரியும் (89-91)
'சிறிய மலரை (வீ = மலர்) உடைய முல்லைக் கொடிக்குப் பெரிய தேரைக் கொடுத்த, ஒலிக்கும் வெள்ளை அருவிகள் விழும் மலைச் சரிவுகளையுடைய பறம்பு மலையின் மன்னன் பாரியும்.'

2. இந்தப் பாடலில் பாரியின் பெருங் கொடைத் தன்மையைப் பற்றி பாடுகின்றார் கபிலர்,
பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்,
பாரி ஒருவனும் அல்லன்,
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே. (புறநானூறு 107)

'பாரி, பாரி என்று அவனை உயர்த்திப் புகழ்கின்றனர், செவ்விய நாவையுடைய புலவர்கள். பாரி ஒருவன் மட்டும் கொடையாளி இல்லை. இங்கு மழையும் பொழிந்து உலகத்தை காக்கின்றது.'

3. பறம்பு மலையின் செழிப்பை மூவேந்தருக்கும் கபிலர் இந்த புறநானூற்றுப் பாடல் மூலம் உணர்த்துகின்றார்,
நளி கொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே
ஒன்றே சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே
இரண்டே தீம் சுளைப் பலவின் பழம் ஊழ்க்கும்மே
மூன்றே கொழும் கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே
நான்கே அணி நிற ஓரி பாய்தலின் மீது அழிந்து
திணி நெடுங்குன்றம் தேன் சொரியும்மே
(புறநானூறு 109)

'பெருமைக் கொண்ட முரசினையுடைய நீங்கள் மூவரும் முற்றுகை இட்டாலும், பறம்பு உழவர் உழாமல் தரும் நான்கு வகை விளைவுகளையுடையது. முதலாக, சிறிய இலைகளையுடைய மூங்கில் விதை விளையும். இரண்டாவதாக, இனிய சுளைகளையுடைய பலாப் பழம் பழுக்கும். மூன்றாவதாக, கொழுமையான கொடியில் விளையும் வள்ளிக் கிழங்கு கீழே (தரைக்கு அடியில்) விளையும். நான்காவதாக, அழகிய நிறத்தில் தேன் (ஓரி = தேன்) வடிந்து படரும், இந்த அடர்ந்த, பெரிய மலையில்.'
அதே பாடலில் மூவேந்தரிடம் மேலும் கூறுகின்றார் கபிலர்,
விரை ஒலி கூந்தல் நும் விறலியர் பின் வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே (புறநானூறு 109)

'நறுமணமான அடர்ந்த கூந்தலையுடைய உங்களுடைய விறலியர் உங்களைப் பின் தொடர, நீங்கள் ஆடியும் பாடியும் சென்றால், பாரி உங்களுக்குத் தன்னுடைய நாட்டையும் மலையையும் சேர்த்துத் தருவான்.'
அடுத்த பாடலில் கபிலர் மூவேந்தரிடம் கூறுகின்றார்,
கடந்து அடு தானை மூவிரும் கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கு அரிதே
முந்நூறு ஊர்த்தே தண் பறம்பு நல் நாடு
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டு நீர் பாடினிர் செலினே
(புறநானூறு 110)

'கொல்லும் படைகளையுடைய நீங்கள் மூவரும் ஒன்று கூடிப் போரிட்டாலும், பறம்பு மலையைக் கொள்வதற்குக் கடினம். முன்னூறு ஊர்களைக் கொண்டது அழகிய நல்ல பறம்பு நாடு. அந்த முந்நூறு ஊர்களையும் பரிசு வேண்டி வந்தவர் பெற்றனர். நானும் பாரியும் இருக்கின்றோம். நீங்கள் பாடிக்கொண்டே பாரியிடம் சென்றால் அவனுடைய மலையையும் பெறலாம்.'

4. பாரியின் குழந்தைகள், தங்கள் தந்தை இறந்த பின், வருந்தி இவ்வாறு பாடுகின்றார்கள்,
அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவின்
எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார்
இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவின்
வென்று எறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே.
(புறநானூறு 112)

'போன மாதம் அந்த வெண்ணிலாவின் கீழ் எங்கள் தந்தையும் இருந்தார், எங்கள் மலையையும் பிறர் எடுத்துக் கொள்ளவில்லை. இந்த மாதம் இந்த வெண்ணிலாவின் கீழ் வெற்றி முரசு கொட்டும் வேந்தர்கள் எங்கள் மலையையும் எடுத்துக் கொண்டார்கள். எங்கள் தந்தையும் எங்களுக்கு இல்லை.'

5. பாரியின் மரணத்திற்குப் பின், கபிலர் மிகவும் மனம் நொந்து பறம்பு மலையிடம் பாடுகின்றார்,
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர் வார் கண்ணேம் தொழுது நிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும் பெயர்ப் பறம்பே
கோல் திரள் முன் கைக் குறுந்தொடி மகளிர்
நாறு இருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே
(புறநானூறு 113)

'பாரி இறந்து விட்டதால், கலங்கிச் செயலற்ற நிலையில் கண்ணீர் வடித்து, உன்னைப் புகழ்கின்றோம். வாழ்க நீ, பெரும் புகழ் பெற்ற பறம்பு மலையே! உருண்ட திரண்ட வளையல்களை முன் கையில் அணிந்த, நறுமணமுடைய கூந்தலையுடைய பெண்களுக்கு உரிய கணவரைத் தேடுவதற்காக (கிழவர் = ஆண்) செல்கின்றோம்.'

6. விச்சிக்கோ, இருங்கோவேள் என்ற இரு குறுநிலமன்னர்களிடம் பாரியின் பெண்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டினார் கபிலர். அவர் இருங்கோவேளிடம் பாடிய பாடல் இது,
பறம்பின் கோமான்
நெடுமாப் பாரி மகளிர். யானே
தந்தை தோழன். இவர் என் மகளிர்.
(புறநானூறு 201)

'பறம்பு மலையின் மன்னன், உயர்ந்தப் பாரியின் பெண்கள் இவர்கள். நான் இவர்களின் தந்தையின் தோழன். இவர்கள் என்னுடைய பெண்கள்.'

7. பாரி இறந்த பின் கபிலர் அவரிடம் கூறுகின்றார்,
பெருந்தகு சிறப்பின் நட்பிற்கு ஒல்லாது
ஒருங்கு வரல் விடாஅது ஒழிக எனக் கூறி,
இனையை ஆதலின், நினக்கு மற்று யான்
மேயினேன் அன்மை யானே, ஆயினும்
இம்மை போலக் காட்டி உம்மை
இடை இல் காட்சி நின்னோடு
உடன் உறைவு ஆக்குக, உயர்ந்த பாலே.
(புறநானூறு 236)

'நம்முடைய மாண்புமிக்க, சிறந்த நட்பிற்கு பொருந்தாத விதமாய், என்னை உன்னுடன் வரக்கூடாது என்று கூறி என்னை வருந்தச் செய்தாய். ஆதலால், நான் உனக்கு பொருந்தியவன் அல்லேன் ஆயினேன். ஆனாலும் உயர்ந்த விதியானது, இந்தப் பிறப்பைப் போல் அடுத்த பிறப்பிலும், பிரிவு இல்லாத ஆழ்ந்த நட்பை நமக்குத் தர வேண்டும்.'

அதன் பின், பாரியின் பெண்களைப் பொறுப்பானவர்களிடம் ஒப்படைத்து விட்டு வடக்கிருந்து உயிர் துறந்தார், பாரியின் உயிர் நண்பர் கபிலர்.

(பாரி கபிலர் நட்பு பாடல்கள் யாவற்றையும் www.learnsangamtamil.com, என்ற தளத்திற்குச் சென்றால் கற்க முடியும்)

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

For All your Real Estate & Investments Needs!
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED

# மே தினம் நினைவுகள்

வியர்வை என்னும் உவர் நீரில் குளித்து
நித்தம் வினாக்குறி போல் வளைந்து
நாட்டின் உயர்வுக்காய் துணிநிற்போரே
தொழிலாளர்கள்

தொழிலாளர்களின் ஊதியத்தை ஏப்பமிடும்
தொழில் அதிபர்களிடம் இருந்து - கடும்
உழைப்புத் தொழிலாளர்களை காப்பாற்ற
உதயமானதே தொழிற்சங்கங்கள்

எத்தகைய தொழில் என்றாலும் அங்கே தொழில்
புரியும் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து
தமக்கென ஒரு சங்கத்தை அமைத்து
இயங்கி வந்தனர்

காலம் காலமாக அல்லல்பட்ட தொழிலாளர்கள்
வேலைப் புறக்கணிப்பென்றும் வேலை நிறுத்தம் என்றும்
அடக்குமுறைகளையும் மீறி போராட்டங்களில்
ஈடுபட்டு ஒரு விடிவு கண்ட நாளே மே தினம்

இதனால் எட்டு மணி நேரம் மட்டும் வேலை
வாரத்தில் லீவுடன் நாற்பது மணி நேர வேலை
மேலதிக நேர வேலைக்கு ஒன்றரை கொடுப்பனவு
போன்ற பல சட்டமாக்கப்பட்டது

தொழிலாளர்களுக்காக சம்பளத்தோடுகூடிய
லீவு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்ட அந்த
மே முதலாம் நாளை தொழிலாளர்கள்
கொண்டாடும் தினமே மே தினம்

- கவிநாதம் பரந்தாமன்




மழைக் காலத்தில்
இலைகளின் இமைகள் கனக்க
தளர்ந்து விழுந்த தானியத்தில்
நசுங்கித் தொலைந்த நினைவுகள்
பிம்பங்களாய்
அசையும் சூனியத்தின் பெருவெளியில்

சூட்சுமத்தின் குவைவுகளில்
நெளியும் படிக்கட்டுகள் விலகி
கண்ணாடித் துண்டுகளாய் சிதறித்
தணியும் படிகங்களாய்

இருளின் ஆழத்துள் தகித்து
மொட்டை மாடியில் காற்றாடி
விசுகவித்து விரிந்து
ஒளிர்ந்தபடி திரியும்

மனத்தளம் பிளந்து மீட்க
விலகி நழுவி
உருகி உதிர்ந்து கதகதப்பாய்
கைகளில் பட்டுச் சிதறி தெறிக்கின்ற
கண்ணீர் குமிழ்களில் ஒடுங்கி
கிண்ணங்களில் நீந்தி நெளிகின்றன.

கைகளுக்குள் இருந்தது.

கைகளுக்குள் இருந்தது
விரிக்க
விடுபட்டு விரிந்து
படிகளில் இறங்கி
நடந்தது

கைகளுக்குள் அடங்காத
பிரமாண்டமாய்

- செழியன்

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

மறைந்த தவில்மேதை 'லய ஞான குபேர பூபதி'

யாழ்ப்பாணம் வி. தெட்சணாமூர்த்தி



அவர்களின் மேதமை ஆளுமை வாழ்வு பற்றிய ஆவணப்படமும் 24 மணி நேரத்துக்கு குறையாத மயங்க வைக்கும் தவிற்கச்சேரிகளின் இறுவட்டும் வெளியிடும் நிகழ்வு

இந்த ஆவணப்படம் இலங்கை இந்தியா மற்றும் பல மேற்கு நாடுகளில் ஒளிப்பதிவு செய்யப்பட்டது

அவரது நினைவு தினத்தை ஒட்டி
மே மாதம் 9ம் திகதி சனிக்கிழமை 4:30 மணியளவில்

கனடா கந்தசாமி கோவில் புதிய மண்டபத்தில்
(1380 Birchmount Rd, Scarborough)
நடைபெறவிருக்கிறது.

எமது நாட்டுக்கு பெருமை சேர்த்த உலகத்தவில் மேதையை நினைவு கூரும் இந் நாளில் அனைவரையும் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்பு:
சி. கந்தசாமி - 416-412-4479, நா. முருகதாஸ் - 416-543-6614, கோ. கலா ஈஸ்வரன் - 416-723-7467

# தைரொயிட் சுரப்பியும், பல்வேறு நோய்களும்

## கடந்த இதழ் தொடர்ச்சி

தைரொயிட் புற்றுநோய் என்பது அசாதாரண முறையில் கலங்கள் (cells) பெருகுவதால் ஏற்படும் எரு நோயாகும். இத்தகைய புற்று நோய்க்கான காரணிகள் கண்டறியப்பட வில்லை. ஏனைய புற்றுநோய்கள் போல் இதற்கும் உயிர் உற்பத்திக் காரணமான பொறிமுறை (DNA) இதில் முக்கிய தொடர்புபடுகிறது. அதே போன்று அதிகளவு கதிர்வீச்சுக்கு (radiation) உட்பட்டவர் களுக்கும் இந்நோய் ஏற்படலாம். பற்களுக்காகச் செய்யப்படும் எக்ஸ்-கதிர் (X-ray) சோதனை தொடர்பு பெறவில்லை. ஆனால், மார்பு, கழுத்து போன்றவற்றில் இடம்பெறும் கதிர்வீச்சு இதில் தொடர்பு படலாம். புற்றுநோய் வந்தவர்களுக்கு கழுத்தில் வீக்கம் ஏற்படும். கழுத்து, காது என்பவற்றில் வலி இருக்கும். உணவினை விழுங்குவதில் கஷ்டம் ஏற்படும். மூச்சு விடுவதில் சிரமம் இருக்கும். குரல் மிக கரகரப்பாக இருக்கும். அடிக்கடி இருமல் ஏற்படலாம். சிலருக்கு இந்த அடையாளங்கள் தெரிவதில்லை. வருடா வருடம் இடம்பெறும் மருத்துவப் பரிசோதனையில் வைத்தியர் கண்டறிவார். கழுத்தில் கழலை (lump) காணப்பட்டால் இது புற்றுநோயாக இருக்கலாம். அதிலிருந்து சில மாதிரிகளை (biopsy) எடுத்து, அதில் புற்றுநோய்க் கலங்கள் உள்ளனவா எனச் சோதனை யிடலாம். இதனை ஓர் ஊசி மூலம் தைரொயிட் திசுக்களை எடுப்பதன் மூலம் செய்யலாம். சில வேளைகளில் இந்த biopsy தெளிவாக இல்லையென்றால், முழுவதனை அல்லது அதில் ஒரு பகுதியைச் சத்திரிசிகிகிச்சை மூலம் அகற்றி சோதனையிடலாம்.

தைரொயிட் புற்றுநோய்க்கு சத்திரச்சிகிச்சை மூலம் அல்லது radioactive iodine (RAI) மூலம் சிகிச்சை அளிக்கலாம். வயது, தைரொயிட்டின் வகை, நோயின் நிலை ஆகியன பற்றி அறிந்தே சிகிச்சையும் செய்யப்படும். மிகவும் அரிதான தைரொயிட் வகை meddullary thyroid cancer (MTC) எனப்படும். இதற்கு பரம்பரை அலகுச் சோதனை செய்வது அவசியமாகும். இதனால் தைரொயிட் சுரப்பியை அகற்ற நேரிடும். முதலில் நோயாளியின் உடலியல் வரலாறு, மருத்துவப் பரிசோதனை செய்யப்படும். குரல் வளை (vocal cord) ஆராயப்படும். அடுத்து இரத்தப் பரிசோதனை செய்யப்படும். இதில் தைரொயிட்டினைத் தூண்டும் ஹோர்மோன் (TSH) அளவு, cerum calcination பரிசோதனை செய்யப்படும். பின்னர் செய்யப்படும் radioactive iodine scan மூலம் புற்றுநோய் பரவியுள்ளதா என அறியப்படும். அடுத்து thyroid ultra sound மூலம் தைரொயிட்டின் கெட்டித்தனமை அறியப்படும். கழுத்தில் உள்ள அசாதாரண நிணநீர்த் தொகுதி (abnormal lymph nodes) பற்றி அறிய முடியும். சிலருக்கு MRI, chest x-ray, PET scan, CT scan, bone scan ஆகியன செய்ய நேரிடும்.

தைரொயிட் சத்திரசிகிச்சை thyroidectomy எனப்படும் சிலருக்கு மருந்துகள் பாவிக்க நேரிடும். இதனை antithyroid medications எனலாம். இதில் methimazole, propylthiouracil, synthroid ஆகிய மருந்துகள் பொதுவாக உபயோகத்தில் உள்ளன. Radioactive iodine (RAI) மூலம் மேலதிகமாகச் செயல்படும் சுரப்பினை செய்து நோயை அழித்துவிடலாம். பெரிய அளவில் பாவித்தால் புற்றுநோய்த் திசுக்களையும் ஒழிக்கலாம். வெளியேயிருந்து செய்யப்படும் வெளியான கதிர்அலை external radiation மூலம் நேரடியாக தைரொயிட்டுக்கு அலைகள் அனுப்பப்படும். இதுவும் புற்றுநோய்க் கலங்களை அழிக்கும். சிலருக்கு தைரொயிட் ஹோர்மோன் வில்லைகள் தினசரி பாவிக்க நேரிடும். இதன் மூலம் புற்றுநோயை வரவிடாது தடுக்கலாம். Recombinant human TSH மூலம் ஊசி மருந்து ஏற்றப்பட்டு அதனால் பிரதிமை செய்வது இலகுவாகும்.



தைரொயிட் புற்றுநோய் புகைப்பிடிப்பவர் களுக்கு ஏற்படுமா? என்ற சந்தேகம் பலரிடமும் உண்டு. உண்மையில் மது அருந்துவதும், புகைபிடிப்பதும் இப்புற்று நோய்க்கு காரணங்களாகவில்லை. ஆனால், பொதுவான உடல்நலத்தைப் பாதிக்கும் தைரொயிட் சுரப்பியினைத் தூண்டச்செய்யும். சிலர் தைரொயிட் புற்றுநோய் உடலெங்கும் பரவிவிடுமா எனச் சந்தேகிக்கின்றனர். எனினும், வெகு அருமையாகவே இப்படி நிகழும். ஆரம்பத்திலேயே சத்திரசிகிச்சை செய்ய முடியும். எனினும், நிணநீர் தொகுதிக்குச் சென்றுவிட்டால் சில வேளை பரவக்கூடும். ஏனைய புற்றுநோய்களைப் போன்று இப்புற்றுநோயால் இறந்து விடுவோமோ என்ற சந்தேகம் பலரிடம் உண்டு. ஆனால், இந்தப் புற்றுநோயால் மரணமாவோர் தொகை மிகக் குறைவாகும். பலர் சிகிச்சை மூலம் காப்பாற்றப்படு கின்றனர். எவ்வாறு இந்த வகை புற்று நோயைத் தடுக்கலாம் எனப் பலர் எண்ணுவர். எனினும், வருடாந்த உடற் பரிசோதனையின் (medical examination) போது வைத்தியர் கண்டுபிடித்துவிடுவார். சிகிச்சைகளின் பக்க விளைவுகள் எவை? குரல் வளம் குன்றிவிடுமா? எனப் பலர் பயப்படுவர். ஆனால், பொதுவாக பக்க விளைவுகள் குறைவாகும். முழுச் சுரப்பியையும் அகற்றிவிட்டால் சில வேளை குரல் வளம் மாறலாம். எனினும், அதனையும் மாற்ற வழிகள் உள்ளன.

கனடாவில் Canadian Cancer Society, Thyroid Foundation of Canada ஆகிய இரு நிறுவனங்கள் தைரொயிட் நோய்க்கான பல ஆலோசனைகளை வழங்கி வருகின்றன. பல ஆராய்ச்சிகளைத் தொடர்ந்தும் செய்து வருகின்றன. கனடிய தைரொயிட் நிறுவனம் 1980ஆம் ஆண்டு Diana Meltmer Abrameky என்பவரால் நிறுவப்பட்டதொன்றாகும். இது ஒன்ராரியோவில் கிங்ஸ்ரன் நகரில் உள்ளது. 1980க்கு முன்பு இப்படியான ஒரு தனியார் நிறுவனம் உலகில் எங்கும் இருக்கவில்லை. இந்நிறுவனத்தை பார்த்த பின்பே பல நாடுகளில் இந்நோய்க்கான நிறுவனங்கள பெருகின. இதனால் Dianaவுக்கு Order of Canada என்னும் உயரிய விருது 1981இல் கிடைத்தது. 2000ஆம் ஆண்டு அவர் இறந்தாலும், கனடாவிலுள்ள பல தொண்டர்கள் இந்நிறுவனத்தைத் தொடர்ந்தும் நடத்துகின்றனர். அவரது விருப்பம் உலகெங்கும் World Thyroid Foundation அமைய வேண்டும் என்பதேயாகும்.

கனடிய புற்றுநோய் நிறுவனம் Volunteer Daffodil மாதத்தில் இந்நோய்க்கான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்றது. இந்நிறுவனம் மூலமும் பல ஆய்வுகள் நடைபெறுகின்றன. இன்றுள்ள இளம் சமூகத்தினரை வெகுவாகப் பாதித்துவரும் இப் புற்றுநோயாளர்களில் 95 சதவீதத்தினர் காப்பாற்றப்பட்டு 10 வருடங்களுக்கு மேல் வாழவைக்ககப்பட்டுள்ளனர். தற்போது கனடிய தைரொயிட் புற்றுநோய் நிறுவனம் (www.thyroidcancercanada.org) மூலம் அண்மைய ஆய்வறிக்கைகள் வெளியாகின்றன. இளம் வயது பெண்களையே இந்நோய் வெகுவாகப் பாதிக்கின்றது என்பதே பொதுவான உண்மையாகும். பட்டாம்பூச்சி போன்ற இந்த தைரொயிட் இவ்வளவு பிரச்சனைகளைத் தருகிறதா என்றே கேட்கத் தோன்றுகின்றது.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com



நகைச்சுவைத் தொடர் 309

# ராசம்மா ராச்சியம்


கலகலப்பு நிசன்



சித்திரா பௌர்ணமி.
அன்னையைப் போலொரு தெய்வமில்லை. அவர் அடிதொழ மறுப்பவர் எவருமில்லை.



அன்னம்மாக்கா ஞாயிற்றுக்கிழமை சித்திரா பௌர்ணமி. எந்தக் கோவிலுக்கு போறியள். நானும் வாறன் எண்டா செக்கண்ட்புளோர் செல்லம்மா. எல்லோரும் சொல்லுறவை இது ஒரு ஸ்பெசல் டே என்று தனது ஐ பொட்டில் கவனம் செலுத்தியபடி சொன்னா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.



ஓம். சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமி விசேடமானது. இறந்த அன்னையருக்கான பிதிர்த்தினம். ஆண்கள் தர்ப்பணம் செய்வதும், பெண்கள் விரதம் பிடிப்பதும், சித்திரைக் கஞ்சி கோயில்களில் வார்ப்பதும், சித்திரபுத்திரனார் கதை படிப்பதும் என்று விளக்கிக்கொண்டே போனா செக்கண்ட்புளோர் செல்லம்மா. சித்திரகுப்தன்...? எனக் கேட்டு சிரித்தா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.

சிரிக்காதை அகிலா, மனிதர் பிறந்த காலத்திலிருந்து இறக்கும் காலம் வரை நன்மை தீமைகளை என சகல விடயங்களையும் எழுதி இயமனுக்கு கணக்கு வழக்கு குடுக்கிறவர் தான் சித்திரகுப்தன். அதைத்தான் ஆகாஷிக்குறிப்புகள் என்பர் என விளக்கம் குடுத்தா ஆட்டிலறி அன்னம்மா.

ஆளுக்கொரு தேதி வைத்து ஆண்டவன் அழைப்பான்.

அப்ப.... இருக்கிற அம்மாக்களுக்கு மதேர்ஸ் டே... இல்லாத அம்மாக்களுக்கு சித்திரா பொர்ணமி என நீண்ட பெருமூச்சு விட்டா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.



ஓசாமா பின்லாடன் இறந்து நாலு வருசமாச்சு. அண்டைக்கு தொடங்கின அரபு நாடுகளுக்கும் அமெரிக்காவுக்குமான பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை என முணுமுணுத்தா செக்கண்ட்புளோர் செல்லம்மா.



எண்டாலும் ஒவ்வொரு நாட்டிலும் இளம்பிள்ளையள் ஐ.சி.ஐ.எஸ் இயக்கத்தில் சேர்ந்து கொண்டிருக்குதுகள். அந்த இயக்கமும் வேறு சமயத்தவர்கள், சந்தேகப்படுபவர்களை உடனேயே சிரச்சேதம் அல்லது துப்பாக்கி சூட்டின் மூலம் கொன்று விடுகிறார்கள்.



அமெரிக்க அதிபர் ஒபாமா ராஜஸ்தானிலுள்ள அஜ்மீன் தர்காவிற்கு சிறப்பு போர்வையொன்றை அன்பளிப்பு செய்துள்ளார். அங்கு கோபுரத்தில் போர்ப்பதற்காக என செய்தியை வாசித்தார். உலகர் ஒரு பக்கத்தில் அடிபாடு, மறுபக்கம் உத்தியோக பூர்வமான கட்டித்தழுவல். அரசியல் என்றால் இப்படித்தான். ஆளும் போது பொலீஸ் காவல், ஆட்சி முறிந்தால், முடிந்தால் பொலீஸில் காவல்.

பசில் ராஜபக்ச தடுப்புக்காவலில் உள்ளார். விளக்க மறியலிலை இருந்தாலும் அதுவும் ஒரு விளம்பரம்தான்.

அன்று பொலீஸ் பாதுகாப்புடன் வீதி வலம் வந்தவர்கள் இன்று பொலீஸ் வாகனத்தில் கைதியாக கொண்டு செல்லப்படுகின்றனர்.


'நித்தம் நித்தம் மாறுகின்ற தெத்தனையோ'



ஏப்பிரல் மாத இறுதியில் இரண்டு முக்கிய சம்பவங்கள். இதுவரை ரொரன்ரோ பொலிஸ் மா அதிபராக இருந்த பில் பிளேயர் பதவி நிறைவும் புதிய பொலிஸ் மா அதிபர் மார்க் சௌண்டர் பதவியேற்பும் நடைபெற்றிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் சூட்டோடு சூடாக பில் பிளேயர் அவர்கள் லிபரல் கட்சியில் தேர்தலில் குதிக்க முடிவு செய்துள்ளார்.

தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை தண்ணீரில் தவிக்கவிட்டான்.
கடலில் மூழ்கி இறந்த அகதிகள்.

குறிப்பிட்ட சில நிமிடத்தில் வந்த சுனாமி பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலி கொண்டது. ஆனால் தினம் தினம் அரச அட்டூழியம் தாங்க முடியாமல் கடல் வழி அகதி யாகச் சென்று நடுக்கடலில் உயிர் விட்டோர் பலர் கடந்த மாதம் இத்தாலி நாட்டருகில் கப்பல் கவிழ்ந்து நூற்றுக்கணக்கானோர் நீரில் மூழ்கி இறந்துள்ளனர்.



இமயத்தையே உலுக்கிய பூகம்பம்.

நேபாளத்தில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். இன்னும் இறந்தவர்களின் எண்ணிக்கை தெரியாது. காயப்பட்டவர் பல ஆயிரக்கணக்கு. நிவாரண வேலைகள் கூட பல சிரமங்கள் மத்தியில் தான் நடைபெறுகிறது. 10 நாட்கள் கழிந்த பின்னும் அரைகுறை உயிருடன் சிலர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.



சர்வதேச நாடுகள் தம்மாலான உதவிகளை வழங்கி வருகின்றன. இந்தியா, பூடான், சீனா, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய ஐந்து நாடுகளை தொடர்ந்துள்ள இமயமலை கூட பூகம்பத்தில் அதிர்ந்துள்ளது. சிந்து நதி, கங்கை நதி, பிரமபுத்திரா நதிகளின் ஆரம்பமே இமயமலையில் தான்.

நாடுகள் தமது எல்லைகளை பிரித்து சண்டைபோட்டாலும்
இயற்கை அழிவுகள் எல்லைகள் பார்ப்பதில்லை.

ஆண்டவன் படைத்த நிலத்தில் யார் எல்லைகள் வைப்பது.




மே 01 .... மே 15

1. மே தினம்




1. இளம்பிள்ளை வாத தடுப்புநோய் மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. (1960)

1. ஓசாமா பின்லாடன் பாகிஸ்தானில் அபொடபாத் எனுமிடத்தில் அமெரிக்க விசேட பாதுகாப்பு படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். (2011)



3. சித்திரா பௌர்ணமி.


3. வில்லியம் சேக்ஸ்பியர் நினைவுதினம். (1616)


3 சர்வதேச பத்திரிகை சுதந்திர நாள்.



5. மாவீரன் நெப்போலியன் நினைவு தினம். (1821)

4. அனைத்துலக தீயணைக்கும் படையினர் நாள்.





8. உலக செஞ்சிலுவை நாள்.

10. மதேர்ஸ் டே கனேடிய அன்னையர் தினம்.

13. தவில் வித்துவான் லயஞான குபேர பூபதி தட்சணாமூர்த்தி நினைவு தினம்.

# அம்மா



அம்மா என்ற மூன்றெழுத்தில் நான்
அன்பு பிறந்ததை அறிந்தேன், அகிலம் உருவாக
ஆணிவேர் ஆனவரும் நீ என்பதையும்
உணர்ந்தேன் அம்மா
கருணைக் கடலாய் மலர்ந்து உலகை படைக்கும்
கடவுளுக்கு உறுதுணையாய் இருந்தாய்
காக்கும் தொழிலையும் செய்து என்னை
காலம் முழுவதும் சுமந்தாய்
காற்றில் வரும் கீதம் போல் இன்று என்
காதினில் கேட்குதம்மா உந்தன்
கனிவான தாலாட்டுப்பாடல் அதில்
காணுகிறேன் உன்னை அம்மா
நித்தம் உன் மடியில் நீந்திக்கிடக்கயிலே
நின்மதியைக் கண்டேன் அம்மா
நிலாக் காட்டி நீ ஊட்டிய பண்டத்தை
நினைக்க நினைக்க இன்று இனிக்குதம்மா

பல நூல்கள் ஏதும் நீ கற்றதில்லை உலகப்
படிப்பறிவும் அதிகமில்லை அன்றுன் அறிவை
பாராட்டத் தெரியாவிட்டாலும் உன்னை நான்
பார்த்து வியந்தேன் அம்மா
மலர்களிலே மல்லிகைப் பூப்போல் உன்தன்
மனம் என்றைக்கும் வெள்ளை அம்மா
மற்றவர்களுக்கு உதவுவதிலும் நீ என்றும்
மனம் கோணியதை நான் கண்டதில்லை அம்மா
அழுகைச் சத்தம் கேட்டதும் என் அருகில்
அலறி அடித்து ஓடிவந்து என்னை அள்ளி
அணைத்து ஆறுதல் வார்த்தைகள் சொல்லும்
அன்புத் தெய்வம் நீ அம்மா
தெய்வங்கள் பல இருந்தாலும் நான் ஏதொரு
தெய்வத்தையும் நேரில் கண்டதில்லை
தெய்வத்துள் தெய்வமென பேசும் ஒரு
தெய்வமாய் உன்னை கண்டேன் அம்மா
மண்ணைவிட்டு இன்று மறைந்தாலும் என்
மனக்கோவிலில் குடியிருக்கும் தெய்வம் நீ அம்மா

- கவிநாதம் பரந்தாமன்


MOBILICITY
EXTRAVAGANZA!
UNLIMITED TALK+TEXT
$15 /MO
was $25 /MO
MAY 1 TO MAY 4 ONLY!
INCLUDES UNLIMITED:
Province-Wide Talk, North American Text, Caller ID, Call Waiting/ Forwarding, 3-Way Calling + MORE!
Motorola MOTO E
$99
WITH ACTIVATION
COMPARE TO $179!
ADD UNLIMITED DATA FOR ONLY $10
AVAILABLE AT 3 PARTICIPATING LOCATIONS
SCARBOROUGH TOWN CENTRE MALL
(647) 847-3634
KENNEDY / ELLESMERE
1911 KENNEDY ROAD, SCARBOROUGH
(647) 344-7362
DUNDAS/CHURCH
104 DUNDAS ST. E, DOWNTOWN TORONTO
(647) 346-0855
Taxes are extra. $15/month offer valid only while customer is on automatic monthly payments (preauthorized credit/ debit payment). Limited time offer for all Greater Toronto customers until May 4, 2015 only. Dealer may sell handsets for less and while supplies last. Additional terms and conditions apply. Subject to change without notice. © 2015 Mobilicity. "Mobilicity", "Now that's smart", the Mobilicity designs and the Mobilicity logo are trademarks of Mobilicity. Other trademarks shown may be held by their respective owners. All rights reserved.
mobilicity
Now that's smart.

